படைப்பு

ஊற்று-6 | நதி-4 | ஆகஸ்ட் - 2023 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com




## படைப்பு இலக்கிய விருதுகள் இலக்கிய ஆளுமை விருதுகள் 2023

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-6 | நதி-4 | ஆகஸ்ட் 2023

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **படைப்பு இலக்கிய விருதுகள் 2023** -பக். 05
- **படைப்பு இலக்கிய ஆளுமை விருதுகள் 2023** -பக். 11
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் -பக். 17
- **சட்டையை உரித்துக்கொள்ளும் பாம்பு (வாழ்வினூடாக இலக்கிய இஸங்களை அறிதல்)** – அமிர்தம் சூர்யா -பக். 30
- **வானவில் வண்ண மின்னல்** – ஆதிரன் -பக். 35
- **மிஸ் யூ செல்லம்..** – கவிஞர் ஏகாதசி -பக். 44
- **அசைத்துப் பார்க்கும் காட்சிகள்..** – கவிஜி -பக். 55
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..** – கடிதங்கள் -பக். 58
- **டப்ளின் சுடுகாட்டில் பிறந்தநாள் கொண்டாடினேன்** – இந்திரன் -பக். 61

## சிறுகதைகள்


- **செல்லாக்காசு**
  - நர்மதா தேவி -பக். 23
- **மனைவிக்கு ஒரு காதல் கடிதம்**
  - ஆண்டன்பெனி -பக். 40
- **சிவப்பு சேலைக்காரி**
  - சப்திகா -பக். 48


## கவிதைகள்


- **யாழ் தண்விகா** -பக். 39
- **ஏ.நஸ்புள்ளாஹ்** -பக். 39
- **குமரன்விஜி** -பக். 39

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' அறுபத்திநான்காவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

படைப்புக் குழுமத்தின் இலக்கிய விழாக் கொண்டாட்டம் செப்டம்பரில் நடைபெற உள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இலக்கிய விருதுகளுக்காகத் தேர்வு பெற்ற நூல்களின் பட்டியல் இவ்இதழில் வெளியாகியுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை போன்ற இலக்கிய வகைகளில் விருதும் சிறப்புப் பரிசும் பெற்ற நூல்களும் மொழிபெயர்ப்பு மற்றும் சிறார் இலக்கிய வகைமைகளில் விருதுக்குரிய நூல்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. படைப்பு விருதுகளுக்கு என்று தனித்த அடையாளம் உள்ளது. தமிழின் தரத்தைக் காலங்கடந்தும் சுமந்து செல்லவிருக்கும் நூல்கள் தகுதியான சான்றோர்களால் அடையாளங் காணப்பட்டு விருதுக்குரியதாயிருக்கின்றன. புதியன போற்றலை ஊக்குவிக்கும் விதமாக, புதிய களங்கள், நவீனமான சொல்லல் உத்தியுடன் கூடிய படைப்புகளே தேர்வாகியிருக்கின்றன. விருது பெற்ற இலக்கிய நூலாசிரியர்களுக்கு வாழ்த்துக்கள். அந்நூல்கள் பற்றிய உரையாடலை நாம் இனிவரும் காலங்களில் தொடர்வோம்.

வேர்களுக்கு நன்றியுடன் இருக்கும் விருட்சங்கள்தான் நிலைத்திருக்கும். படைப்புக் குழுமம் தமிழ் இலக்கிய உலகில் வேராக உறுதிகொண்டுள்ள சான்றோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வருடந்தோறும் அளித்துவருகிறது. வாழ்நாள் சாதனையாளர் விருது, படைப்புச் சுடர் விருது, இலக்கியச் சுடர் விருது பெறவிருப்போர் குறித்த தகவல்கள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. விருதுக்குரிய தகைமையாளர்களைத் தகவு வணங்குகிறது.

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றிருக்கிற சிறுகதைகள் 'செல்லாக்காசு' மற்றும் 'சிவப்பு சேலைக்காரி' இவ்இதழில் வெளியாகியுள்ளன. தேர்தல் ஓட்டு என்பது பணத்துக்கு விற்கப்படுவதும் வாங்கப்படுவதுமாகப் பொதுவான கருத்து உருவாகிவிட்ட சூழலில் அவ்ஓட்டினை விற்க மறுத்த ஒரு பெண்ணின்வழி அறத்தைப் பேசும் சிறுகதையாக 'செல்லாக்காசு' அமைந்துள்ளது. விளிம்புநிலை மனிதரான அரவாணி ஒருவருடனான பயணத்தினைப் பேசும் 'சிவப்பு சேலைக்காரி', பெயர் கூற மறுப்பதின்வழி அவரது வலியை உணர்த்துகிறது.

இசங்கள் குறித்த அறிதலை உண்டாக்கும்வண்ணம் படைப்பாளர் அமிர்தம் சூர்யா எழுதும் தொடர் இவ்இதழ் முதல் வெளியாகிறது. தன் வாழ்க்கைப் பயணத்தின்வழி மிக எளிதாக இசங்களைத் தொட முயற்சிப்பதாகத் தொடரைத் தொடங்கியுள்ளார். கவிஞர் கவிமுகில் குறித்த மு.முருகேஷின் கட்டுரை, ஹெரிடிட்டரி திரைப்படம் குறித்த கவிஜியின் பார்வை, மதம் குறித்த அலசலை மேற்கொள்ளும் ஆதிரனின் வானவில் வண்ண மின்னல், மனைவிக்குக் காதல் கடிதம் எழுதும் முயற்சியை ரசனையாகச் சொல்லும் வெயிலோடு விளையாடி, காலத்திற்கேற்ற மிஸ் யூ செல்லம் பாடல் எழுதிய ஏகாதசியின் அனுபவம், டப்ளின் சுடுகாட்டில் பிறந்தநாள் கொண்டாடிய இந்திரனின் கட்டுரை என இவ்இதழின் பகுதிகள் அமைந்துள்ளன.

கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர்.




# படைப்பு இலக்கிய விருதுகள் 2023

படைப்பு – சமூகத்தின் இணைப்பு என்ற தாரக மந்திரத்துடன் பல்வேறு தளங்களிலும் ஓயாது இயங்கிவரும் படைப்புக் குழுமம் தன் உயிர் தாங்கும் அடித்தளமாகக் கொண்டிருப்பது இலக்கியத்தைத்தான். கலை மனதிற்குக் கைத்தட்டல்களும் பாராட்டுகளும்தான் உற்சாகமும் உத்வேகமும் ஊக்கமும் தரும் என்பதை உணர்ந்து சிறந்த இலக்கியப் படைப்புகளுக்குப் பரிசுகளும் விருதுகளும் அளித்து அங்கீகாரமளிப்பதைத் தன் தலையாய கடமையாகச் செய்துவருகிறது படைப்புக் குழுமம். வருடந்தோறும் மிகத் தகுதியான படைப்பாளர்களுக்கு இலக்கிய விருதுகள் அளித்து மகிழ்ந்துவரும் படைப்புக் குழுமத்தின் ‘படைப்பு இலக்கிய விருதுகள் 2023’ மகிழ்ச்சியுடன் இங்கு அறிவிக்கப்படுகின்றன. 2022ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்காக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## பிரிவு : கவிதை




### விருது பெற்ற நூல் : சதுரமான மூக்கு

படைப்பாளர் : பூவிதழ் உமேஷ்

வெளியீடு : ஆகுதி பதிப்பகம்

மூக் தெரிதாவைப்போல நானும், 'எப்போதும் ஒரு சிரிஞ்சாக இருக்கும் பேனாவைக் கனவு காண்கிறேன்!' பூவிதழ் உமேஷிடம் அப்படி ஒரு பேனா இருக்கிறது. கவிதை வாசிப்பு மகிழ்ச்சியில் தொடங்கி ஞானத்தை அனுபவம் கொள்வதாக முடிய வேண்டும். 'உழவன்' சிறுகுறிப்பு வரைக எனச் சொல்லி, ஒரு குறிப்பை வரைகிறார் உமேஷ். அதில் வேர்வை என்கிற வார்த்தை இல்லாமல் உழவனின் உப்பை நம் உணவில் சேர்க்க உமேஷுக்குத் தெரிந்திருக்கிறது. அவர் கவிதை வழியாக புதிய மொழியை புதிய சிந்தனை முறையை உருவாக்குகிறார். எழுத்து எனும் இறந்த விலங்குக்கு சதா உயிரூட்ட முனைகிறார் உமேஷ்.

– கரிகாலன்

## பிரிவு : கட்டுரை




### விருது பெற்ற நூல் : கடவுளின் தேசத்தில்


படைப்பாளர் : ராம் தங்கம்

வெளியீடு : வானவில் புத்தகாலயம்

பயணங்கள் பல வகை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இலக்கு என்பதும் செல்லும் பாதை என்பதும் நிச்சயம் இருக்கும். ஆனால் எழுத்தாளர்களுக்கு அது பொருந்தாது. காட்டாற்று வெள்ளம் போல அவர்கள் பயணங்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அந்த வகையில் எழுத்தாளர் ராம் தங்கம், தான் சென்று வந்த பயணங்களைப் பதிவு செய்துள்ள விதம் அற்புதம். வெறும் பயணக் கட்டுரைப் புத்தகம் அல்ல இது. ஒவ்வோர் இடங்களையும், அதனுடைய வரலாறுகளையும் விவரிக்கிறது இந்தப் புத்தகம். அது மட்டுமல்ல. இந்தப் பயணம் முழுவதும் ராம் தங்கத்தோடு சாமானிய மனிதர்கள்தாம் பயணிக்கிறார்கள்.

– ரா.ராகுல் சே

## பிரிவு : நாவல்




**விருது பெற்ற நூல் : கல்லறை**

படைப்பாளர் : எம்.எம்.தீன்

வெளியீடு : சந்தியா பதிப்பகம்

இந்த நாவல் நம்மைக் கல்லறைகளை நோக்கி அழைத்துச் சென்று ரசிக்கவைக்கிறது. நூறு வருடங்களுக்கு மேலான கல்லறைகள் நாம் பாதுகாக்க வேண்டிய வரலாற்றுச் சின்னங்கள் என்று பேசுகிறது. அழிந்துபோகும் கல்லறைகளை ஆதரித்துப் பாதுகாக்கக் குரல் கொடுக்கிறது.

## பிரிவு : சிறுகதை




**விருது பெற்ற நூல் : விலாஸம்**

படைப்பாளர் : பா.திருச்செந்தாழை

வெளியீடு : எதிர் வெளியீடு

திருச்செந்தாழையிடம் புதியதொரு கதை சொல்லல் உருவாகியிருக்கிறது. அதாவது, புதிய காலத்தையும் புதிய அசைவையும் எழுத்தின் மூலமாக உருவாக்குதல் என்று சொல்ல வேண்டும்.. அவரது கதை சொல்லும் முறை, உங்களுக்குக் காட்சிகளை உருவாக்குவதற்குப் பதில், அக்காட்சிகள் ஏற்படுத்தும் உணர்வுகளை ஏற்படுத்தி விடுகிறது. அதிலும், முகக்குறிப்புகளில் அவர் காட்டும் சிரத்தை ஆச்சர்யமூட்டுகிறது. முகபாவங்களின் மூலம் அவர் உருவாக்கும் சித்திரத்தை ஒரு காட்சியாக யாராலும் மீட்டுருவாக்க முடியாது என்றே நினைக்கிறேன். ஏனெனில், அதில் தொழிற்படும் காலமும் அசைவும் நிஜ வாழ்க்கையில் நாம் உணர்ந்த/அறிந்த காலமோ அசைவோ அல்ல. ஒரு நல்ல எழுத்திற்கான லட்சணம் இது.

– பேராசிரியர் முனைவர் டி. தருமராஜ்.

## பிரிவு : மொழிபெயர்ப்பு




**விருது பெற்ற நூல் : வாழ்க்கைப் பாதை - செறுகாடு**

மொழிபெயர்ப்பாளர் : நிர்மால்யா

வெளியீடு : சாகித்ய அகாதமி

நிர்மால்யா வெகுகாலமாக மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து வருபவர். இவர் சமீபத்தில் மலையாள எழுத்தாளர் செருகாடின் சுயசரிதையான 'வாழ்க்கைப் பாதை' எனும் நூலை மொழிபெயர்த்திருக்கிறார். மிகச் சிறந்த நூல். 2022இல் சாகித்ய அகாதமி வெளியிட்டிருக்கிறது. நிர்மால்யா மாதவிக்குட்டியின் நூலை மொழிபெயர்த்ததற்காகப் பல்லாண்டுகளுக்கு முன்பு சாகித்ய அகாதமி விருது பெற்றவர். வாழ்க்கைப் பாதை விருதுக்கு மிகத் தகுதியான நூல்.

- யூமா வாசுகி

## பிரிவு : சிறார் இலக்கியம்




**விருது பெற்ற நூல் : பறக்கும் வெண்குதிரை**


படைப்பாளர் : வன்மி

வெளியீடு : பாரதி புத்தகாலயம்

தமிழ்நாட்டின் கிராமப்புறக் குழந்தைகளை நாயகர்களாக வைத்து எழுதப்பட்ட மிகச் சிறந்த நாவலாக இந்த நாவல் வடிவம் கொண்டுள்ளது என்பதை மிகுந்த உற்சாகத்தோடு பாராட்டி வரவேற்கிறேன். எழுத்தாளர் சா.கந்தசாமி, கி.ராஜநாராயணன் போன்ற முன்னோடிகள் எழுதிப் பார்த்த கிராமத்து வாழ்வைக் குழந்தைகள் பார்வையில் விரித்துச் செல்வது இந்நாவலின் தனித்துவம். நீண்ட காலமாகக் காத்திருந்த அச்சுஅசலான ஒரு தமிழ்க் கிராமத்துக் குழந்தைகள் நாவல் இப்போது நமக்குக் கிடைத்துவிட்டது என்கிற மகிழ்ச்சியுடன் இந்நாவலை இருகரம் நீட்டி வரவேற்கிறேன்.

- ச. தமிழ்ச்செல்வன்

## பிரிவு : சிறப்புப் பரிசு - கவிதை




**நூல் : மேழி நகரும் தடம்**


படைப்பாளர் : நந்தன் கனகராஜ்

வெளியீடு : வலசை பதிப்பகம்

நந்தன் கனகராஜின் கவிதை மொழி, கிழங்கு வைக்கும் வேர்கள் கொண்ட புரதங்களின் சாந்து வழுவழுப்பால் ஆனவை. கொழுமுனை தேய்ந்த பளபளப்பு ஒருபுறம், ஆணிக்கால் பாய்ந்த உழவனின் பாதயிடுக்கின் சேற்றுப் பிசுபிசுப்பு மறுபுறம். பரந்துபட்ட வாசிப்பு ஆர்ப்பரிப்பு குறைந்த சொரசொரப்பான மொழியைக் கையளித்திருக்கிறது.. தவளைக்கல் போல் காய்ச்சின உலோகத்தில் ஒரு கால், மேகப்பொதியில் மறுகால் வைத்துத் துள்ளும் நடை கொண்டதாய் வாய்த்திருக்கிறது, இக்கவிதைகளின் மொழி.

– நேசமித்ரன்

## பிரிவு : சிறப்புப் பரிசு - கட்டுரை




**நூல் : பேய்க்காட்டுப் பொங்கலாயி**

படைப்பாளர் : வெ.நீலகண்டன்

வெளியீடு : தேநீர் பதிப்பகம்

பல்வேறு நெருக்கடிகளோடு வாழும் பழங்குடிகளின் பண்பாடுகளையும் வாழ்க்கையையும் ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் தேவை. அதற்கான சிறு முயற்சிதான் இந்த நூல். தினந்தோறும் நம் தெருக்களைக் கடந்துசெல்கிற பூம்பூம் மாட்டுக்காரர்கள், தமிழகத்தில் அதிகம் வசிக்கும் பழங்குடிகளான மலையாளிகள், வெறும் 3000 பேரை மட்டுமே கொண்ட தொல் பழங்குடிகளான கோத்தர்கள், பெரும் வாழ்வியல் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் காணிக்காரர்கள் ஆகிய நான்கு பழங்குடிகளின் வாழ்க்கையை இந்த நூல் காட்சிப்படுத்தும். கல்விப்புல ஆய்வு நோக்கில் இன்றி, நோக்கமும் இலக்குமற்ற ஒரு பயணியின் அனுபவமாகவே இந்த நூலில் உள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

## பிரிவு : சிறப்புப் பரிசு - நாவல்




**நூல் : அவயம்**

படைப்பாளர் : ஏக்நாத்

வெளியீடு : டிஸ்கவரி புக் பேலஸ்

வாழ்க்கை எதற்கும் கட்டுப்படாத காட்டாறு. பாய்ந்து, நெளிந்து, வளைந்து, நசுங்கிச் செல்லும் அதன் பாய்ச்சலில், கிடைப்பதும் இழப்பதும் ஏராளம். அப்படித்தான், ஏக்நாத் ‘அவயம்’ நாவலில் காட்டுகிற மாடசாமியின் வாழ்க்கையும். அரசியல் கவர்ச்சியால் ஏற்படும் மயக்கங்கள், அதனால் நேர்கிற பிறழ்வுகள், வாழ்க்கையில் குறுக்கிடும் பெண்கள், அவமானங்கள், சுயசிதைவு எல்லாவற்றையும் ஒற்றை மனிதனை வைத்துப் பேசுகிறது இந்நாவல். கதைக்குள் வாழ்கிற எளிய மனிதர்கள் மூலம், பல இடங்களில் ‘ஆஹா!’ என்று வியக்கவும் ‘அடடா!’ என்று சிலிர்க்கவும் வைப்பதுதான் இந்த நாவலின் பலம்.

– வித்யாஷங்கர்

## பிரிவு : சிறப்புப் பரிசு - சிறுகதை




**நூல் : பலாமரம் நிற்கும் புதிய வீட்டிற்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறான்**

படைப்பாளர் : மீரான்மைதீன்

வெளியீடு : போதிவனம்

சமூகம் கட்டமைத்துக்கொண்டுள்ள பெருங்கதையாடல்களையெல்லாம் மிக எளிதாகக் கலைத்துப் போட்டுவிட்டு ஒன்றும் நடவாததுபோல் நகர்ந்து செல்லுதல் மீரான்மைதீனின் கதைசொல்லல் தனித்துவம். இத்தொகுப்பில் உள்ள கதைகள், எந்தக் கருத்தியல் அரசியலோடும் தொடர்புபடுத்தி, எந்தவொரு அடையாளத்தையும் கொடுத்துத் தனிமைப்படுத்திவிட முடியாதவை. சார்புகளற்ற ஓர் எழுத்துநடையும் கருத்துத்தளமும் பொது மொழியும் மீரான்மைதீனின் கதைகளுக்குள் தனித்துவம் கொள்கின்றன. இயற்கையோடு தன்னை நெருக்கப்படுத்திக்கொள்ளும் மனத்தின் செழிப்பான பக்கங்களைப் பேசும் கதைகளில் மீரான்மைதீனுக்குள் உள்ள பெருந்தாகம் வெளிப்படுகின்றது.

– மோ.செந்தில்குமார்

# படைப்பு இலக்கிய ஆளுமை விருதுகள் 2023

படைப்புக் குழுமம் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் படைப்பாளர்களுக்கு அவர்களது இலக்கிய ஆளுமையைப் போற்றும் வகையில் கடந்த எட்டு ஆண்டுகளாக விருது வழங்கிச் சிறப்பித்துவருகிறது. அவ்வாறு இந்த ஆண்டு விருது பெறும் இலக்கிய ஆளுமைகள்:

### வாழ்நாள் சாதனையாளர் விருது

**எழுத்தாளர் பொன்னீலன்**

### படைப்புச் சுடர் விருது

**எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி**

**மலையாள எழுத்தாளர் ஷாஃபி செருமாவிலாயி**

### இலக்கியச் சுடர் விருது

**கவிஞர் யவனிகா ஸ்ரீராம்**


**கவிஞர் தேன்மொழி தாஸ்**

2023, செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி சென்னை சர்பிட்டி தியாகராயர் அரங்கில் நடக்கும் படைப்பு சங்கமம் விழாவில் இவ்விருதுகளை அளித்துச் சிறப்பு செய்ய இருக்கிறது படைப்புக் குழுமம்.

# வாழ்நாள் சாதனையாளர் விருது

## எழுத்தாளர் பொன்னீலன்



"எழுத்து என்பது வெறும் பொழுதுபோக்கல்ல. அது வாசகனின் சிந்தனையைத் தூண்டுவதோடு அவனது எண்ணங்களை மேம்படுத்தி வாழ்க்கையையும் தரமுயர்த்த வேண்டும்" என்ற கொள்கையோடு காலமெல்லாம் மனுசப்பாடுகளை எழுதியே நாஞ்சில் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருந்தமிழர் திரு. பொன்னீலன் அவர்கள்.

இவரது படைப்புகள் மனித நேயம் போற்றுபவை. வாசகனைக் குழப்பாமல் நேரடியாகக் கதை சொல்லும் பாணி கொண்டவை. மண்ணின் மணத்தோடு வட்டார வழக்கில் இருப்பது இவரது படைப்புகளின் சிறப்பம்சமாகும். உயர் ரசனை அறிவுஜீவி வாசகர்கள் என்கிற முகமூடியைக் கிழித்தெறிந்து தனது படைப்பை எளிய வாசகனுக்கும் கொண்டு சேர்த்தவர் பொன்னீலன்.

இவருடைய கரிசல், கொள்ளைக்காரர்கள், புதிய மொட்டுகள் போன்ற நாவல்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி என்ற வாழ்க்கை வரலாற்று நூலும் சில பல்கலைக்கழகங்களில் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன.

பொன்னீலன் 1994ஆம் வருடத்திற்கான சாகித்ய அகாதமி விருதைப் புதிய தரிசனங்கள் நாவலுக்காகப் பெற்றார். பொன்னீலனின் 'உறவுகள்' என்ற சிறுகதை மகேந்திரனால் 'பூட்டாத பூட்டுகள்' என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமைப் பொறுப்பில் நீண்ட காலமாகப் பணியாற்றிய பெருமை உடையவர்.

பொன்னீலனின் படைப்புகள் குறித்து வெவ்வேறு பொருட்கூறுகளில் ஆய்வு செய்து பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றிருக்கின்றனர்.

இளைய படைப்பாளிகளை உற்சாகப்படுத்தித் தமிழுக்கு அடையாளம் காட்டுவதில் எந்தக் கூச்சமும் அவர் கொள்வதில்லை. எனவேதான் ஒரு மிகச்சிறந்த படைப்பாளியான பொன்னீலன் எல்லோருக்குமான பேரன்பின் மனிதராக வீற்றிருக்கிறார்.

# படைப்புச் சுடர் விருது

## எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி






உழைக்கும் பெண்டிரின் இருளழிக்க வந்த பெண்குலத்தின் எழுத்துப் பேரொளி. மீன்பிடித்து வாழும் பரதவர்கள், உப்புக் காய்ச்சும் உமணர்கள், மேய்ச்சல் தொழில் புரியும் ஆயர்கள், மருத நிலக்குடிகளாம் உழவர் உழத்தியர் என ஏடேறா மக்களின் வாழ்க்கைப்பாடுகளை இலக்கியமாக்கும் எழுத்துச் சுடர். விளிம்பு நிலை மாந்தர்களது பேச்சு வழக்கின் ஈரத்தையும் சாரத்தையும் புதினங்களாக்கிப் புகழடைந்தவர் சு.தமிழ்ச்செல்வி.

தமிழ்ச்செல்வியின் முதல் நாவலான மாணிக்கம் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை விருதைப் பெற்றது. 'எங்கள் திருவாரூர் மண்ணின் மைந்தர்களின் கதை சொல்ல வந்த புதுமைப் பெண் கலைஞர்' என முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்டவர். கலைஞர் பொற்கிழி விருது பெற்றவர்.

எட்டு நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் எனத் தொடரும் இவரது இலக்கிய இயக்கம் மகத்தானது. புதிய தலைமுறை நம்பிக்கை நட்சத்திரம் விருது, எஸ். ஆர்.வி. பள்ளியின் அறிஞர் போற்றுதும் விருது, ஸ்பேரோ விருது, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க விருது, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வழங்கிய 'தி வைப்ரன்ட் வாய்ஸ் ஆஃப் சப்பால்டர்ன்' விருது, ஆனந்தவிகடன் வழங்கிய அவள் விருது எனத் தனது இலக்கிய இயக்கத்திற்காக இவர் பெற்ற கௌரவங்கள் ஏராளம்.

தமிழகப் பல்கலைக்கழகங்களும், தன்னாட்சிக் கல்லூரிகளும் தமிழ்ச்செல்வியின் படைப்புகளைப் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்துள்ளன. இவரது நாவல்கள் கல்விப் புலங்களில் மாணவர்களுக்கு முனைவர் பட்டங்களை வழங்கியிருக்கின்றன. இதுவரை எழுத்தாக மட்டும் இருந்த கீதாரி, ஆறுகாட்டுத்துறை போன்ற இவரது புதினங்கள் விரைவில் திரையில் காட்சி மொழியாகவும் பரிணாமம் பெற இருக்கின்றன.

தன் எழுத்தால் இயக்கத்தால் தான் வாழும் காலத்துக்கு ஒளி தருகிற எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி.

# படைப்புச் சுடர் விருது

## எழுத்தாளர் ஷா:.பி செறுமாவிலாயி






பகலில் சித்தாளாக, இரவில் மொழிபெயர்ப்பு எழுத்தாளனாகத் தனது ஒவ்வொரு நாளிலும் பயணம் செய்யும் எழுத்துத் தச்சன் எழுத்தாளர் ஷாஃபி செறுமாவிலாயி.

வேலைக்காகக் கர்நாடகா சென்று, வேலையோடு வேலையாக, தமிழ் மீது உள்ள பேரார்வத்தால் தமிழைக் கற்று, தமிழ் நூல்களை மலையாளத்தில் மொழிபெயர்ப்பு செய்தவர்.

1985இல் தினத்தந்தி நாளிதழின் ஞாயிறு மலரில் தமிழில் வெளியாகி இருந்த ரஷ்யன் கதையை மலையாளத்தில் மொழிபெயர்த்ததே முதல் படைப்பு.

கேரள மாநிலம் கன்னூர் மாவட்டம் செறுமாவிலாயி கிராமத்தில் வாழ்ந்துவருகிறார்.

14 நாவல்களையும், 5 சிறுகதைத் தொகுப்புகளையும், 1 கட்டுரைத் தொகுப்பையும் மொழிபெயர்த்துள்ளார்.

சாகித்ய அகாதமி நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சா.கந்தசாமியின் விசாரணை கமிஷன், என்.வெங்கட்ராமின் காதுகள், திலகவதியின் கல்மரம், எஸ். ராமகிருஷ்ணனின் சஞ்சாரம் ஆகிய நூல்களையும், சிறுகதைத் தொகுப்பான மின்சாரப்பூ நூலையும் தமிழிலிருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்த்து இருக்கிறார்.

2010இல் நல்லி திசையெட்டும் விருது, தோப்பில் முகமது மீரான் எழுதிய அனந்தசயனம் காலனி சிறுகதைத் தொகுப்பை மொழிபெயர்த்ததற்காகத் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க விருது - மகாகவி உள்ளூர் பரமேஸ்வர ஐயர் விருது, 2018இல் திருப்பூர் இலக்கிய விருது ஆகிய விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

# இலக்கியச் சுடர் விருது

## கவிஞர் யவனிகா ஸ்ரீராம்






தமிழ்க் கவிதைச் சூழலில் 90களின் ஆரம்பத்தில் 'இரவு என்பது உறங்க அல்ல' கவிதைத் தொகுதி வாயிலாக ஒரு அரசியல் கவிஞராக வாசகர்களை ஈர்த்தவர் யவனிகா ஸ்ரீராம். உலகமயமாதல் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களை அழகியல் உணர்வுடன் பதிவுசெய்த கவிதைகள் இவருடையவை. சொற்கள் உறங்கும் நூலகம், தலைமறைவுக் காலம் போன்றவை இவருடைய முக்கியமான கவிதைத் தொகுதிகள்.

தன் பத்தொன்பதாம் வயதில் இலக்கியத்தினுள் நுழைந்து கவிதைப் பரவெளியெங்கும் விரிந்திருக்கிறார். ஞானக்கூத்தனும், கலாப்ரியாவும்தான் தனது கவிதை உலகத்தைத் தூண்டியவர்கள் என்கிறார். அத்துடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பிரெக்டின் கவிதைகள் இவரை மிகவும் பாதித்தன என்கிறார்.

மேற்குத் தொடர்ச்சிமலையில் உள்ள மரங்கள், பூச்சிகள், இலைகள் என இயற்கையோடு மனம் இணையத் தொடங்கி, அதுவே அவரின் கவிதைகளில் வரும் நிலப்பரப்புகள் உள்ளேயும் இருக்கத் தொடங்கியுள்ளன.

யவனிகாவின் கவிதைகள் ஐந்திணைக்கப்பால் ஆறாவது திணையையும் ஆறாவது நிலத்தையும் ஆக்குகின்றன. அவ்வகையில் ஈராயிரமாண்டுத் தமிழ்க்கவிதை மரபில் இவை ஆறாம் புலனை நமக்கு ஆக்கித் தருகின்றன.

வடமொழியில் பாத்ரு ஹரி மாதிரி காதல் மற்றும் காமம் சார் கவிதைகளைத் தமிழில் யவனிகா ஸ்ரீராம் போன்ற ஒரு சிலரே எழுதி இருக்கிறார்கள் என்கிறார் கவிஞர் கலாப்ரியா.

# இலக்கியச் சுடர் விருது

## கவிஞர் தேன்மொழி தாஸ்






படைப்பாளி தேன்மொழி தாஸ் கவிதை, கதை, திரைக்கதை, உரையாடல், பாடல்கள் இயற்றுவது எனப் பன்முகத் திறமைகொண்டவராகத் திகழ்கிறார். 2001 முதல் தான் கால்பதித்த இலக்கியம், திரைத்துறை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் அயராது செயலாற்றுகிறார்.

மிகவும் சிறிய வயதிலேயே கவிதைகளை இயற்றுவதில் திறமை கொண்ட இவர் பள்ளிக் காலங்களில் நாடகங்கள் எழுதி இயக்குவதிலும் நடிப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். 1996 முதல் கவிதைகள் சிறுபத்திரிகை வழியாகப் பிரசுரம் ஆகின. மிகுந்த கவனம் பெற்ற இவரது கவிதைகள் முல்லை மற்றும் குறிஞ்சித் திணை சார்ந்த கவிதைகளாகக் கொண்டாடப்பட்டன.

2001ஆம் ஆண்டு இவரது முதல் கவிதைத் தொகுப்பு 'இசையில்லாத இலையில்லை' வெளிவந்தது. அந்த நூல் தேவமகள் அறக்கட்டளை விருது, திருப்பூர் கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு மற்றும் சிற்பி இலக்கிய விருது ஆகிய மூன்று விருதுகளைப் பெற்றது.

பாரதிராஜாவின் 'ஈரநிலம்' படத்திற்காகத் தமிழ்நாடு அரசின் சிறந்த வசனத்திற்கான விருது 2003இல் இவருக்குக் கிடைத்தது. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் உரையாடலுக்காக விருது பெற்ற முதல் பெண் என்ற அடையாளமும் இவரை வந்தடைந்தது. ஈரநிலம் படம் மூலமாகப் பாடலாசிரியராகவும் அறிமுகமானார். இதுவரை நாற்பதுக்கும் மேலான திரையிசைப் பாடல்கள் எழுதியுள்ளார். களம் விருது மற்றும் நூலகச் சிற்பி எஸ்.ஆர்.ரெங்கநாதன் நினைவு விருதுகளைப் பெற்றவர்.

அவரது கவிதைகளின் படிமங்கள் மற்றும் குறியீடுகளின் அடர்த்தியே அவரைத் தனித்துவமாக இந்த இலக்கிய உலகில் தரம்பிரித்துக் காட்டுகிறது. இக்கால நவீனத்துவக் கவிதைகளில் இம்மாதிரியான படிமம், குறியீடுகள் மற்றும் தொன்மங்களை வைத்து எழுதும் ஒருசிலரில் முதன்மையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்.

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

எதையும் எதிர்பார்க்காமல் இந்த மண்ணில் பெய்யும் வான்மழையைப் போன்றது அன்பு. அன்பால் செழித்திருப்பதே இந்த மண்ணுலகுக்கு என்றும் அழகு. அன்பின் ஈரம் மண்ணில் சேர்கையில் இயற்கையின் சிரிப்பினைக் கேட்கலாம்.

எல்லோரும் நம் மேல் அன்பு வைக்கிறார்கள். நாமும் அவ்வாறே அன்பினைப் பகிர்கின்றோம். அன்பையும் கடந்து நம் மேல் மதிப்பும், நம் எதிர்காலம் குறித்த அக்கறையுடன் கூடிய அறிவுரைகளையும் வழங்குபவர்கள் மிகக் குறைவே. அப்படியான குறைந்த எண்ணிக்கையிலானவர்களுள் ஒருவராக என் மனம் நிறைந்தவர் கவிஞர் கவிமுகில்.

கவிஞரது கவிதை நூல் குறித்த ஒரேயொரு கடிதம், இரண்டொரு இலக்கிய விழாக்களில் சில நிமிடங்கள் முகம் பார்த்துக் கைகுலுக்கல் மற்றும் பகிர்வுகள். இவ்வளவுதான் கவிஞர் கவிமுகிலுக்கும் எனக்குமான சந்திப்புகள். ஆனாலும் என் மேலும் என் செயல்பாடுகளின் மீதும் இப்படியொரு பேரன்பா, உடன்பிறவாப் பாசமா, கவிஞர்களின் மீதான தீரா நேசமா..? எதுவென எனக்குச் சொல்லத் தெரியவில்லை. சொன்னாலும் தீர்ந்துவிடுவதில்லை.

சரியாய் 20 ஆண்டுகளுக்கு முன்னர், நிரந்தரப் பணியேதுமின்றிச் சிற்சில நூல்பணிகளை மட்டும் நான் செய்துவந்த காலமது. கவிஞர் கவிமுகில் என்னைப் பார்க்க வரச் சொன்னதாக நண்பர் ஒருவர் மூலமாக எனக்குச் செய்தி வந்தது. அதுவரை சென்னைக்கு அதிகமாகச் சென்றிராத நான், ஆதம்பாக்கத்தில் இருக்கும் கவிஞர் கவிமுகிலின் ‘சக்தி கார்ஸ்’ அலுவலகத்திற்குப் பலரிடம் விசாரித்தபடியே போய்ச் சேர்ந்தேன்.

அன்பொழுக வரவேற்ற கவிஞர், என்னை அழைத்துப்போய் அலுவலகத்தின் பல இடங்களையும் காட்டினார். அதுவரை கவிஞரைப் பற்றி அதிகம் அறிந்திராத என்னிடம், தன்னைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினார். இந்த உயரத்தை அடைவதற்கு அவர் கடந்துவந்த பாதைகளைப் பற்றிப் பகிர்ந்தார். எனக்கு வியப்பாக இருந்தது.




வாழ்வில் உயர்ந்த மனிதர்களையெல்லாம் வியந்து பார்க்கிறோம். பெருமைப்படப் பேசுகிறோம். ஆனால் அவர்கள் கடந்துவந்த பாதைகளில் சந்தித்த துயரங்கள், அதனால் உண்டான வலிகள் நாம் அறியாதவை. அறிய விரும்பாதவை. சில மனிதர்களே தன்னை வெளிப்படையாகச் சமூகத்தின் முன்னே திறந்த புத்தகம் போல் வைப்பார்கள். அப்படியானவர்களுள் ஒருவராக என் மனதில் உயரத் தொடங்கினார் கவிமுகில்.

மதிய உணவுக்குப் பின், என் எதிர்காலம் குறித்தும், எனக்கான பணி வாய்ப்புகள் குறித்தும் உள்ளார்ந்த கரிசனத்துடன் கேட்டுக்கொண்டார். அன்றாட வாழ்வின் அத்தியாவசிய செலவுக்குக் கொஞ்சமாகவேனும் நிரந்தர வருவாய் இருக்க வேண்டுமென்றார். அன்றைய சூழலில் எனது வேலைவாய்ப்புக்கான நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார். எதுவானாலும் நீங்கள் யோசித்துச் செய்யுங்கள் என்றவர், நிறைவாக அவசியம் சேமிப்பு வேண்டுமென்பதைக் கொஞ்சம் அழுத்தமாகவே வலியுறுத்தினார். என் சகோதரர்கள் கூட அதுவரை சொல்லியிராத நல் ஆலோசனையாக அது எனக்குப் பட்டது.

கனிந்த நன்றியுடன் கவிஞரிடம் விடைபெற்றுக் கிளம்பிய அந்த நாளும், அன்றைய நாளில் கவிஞர் கவிமுகில் என்மேல் காட்டிய அன்பும், அணுக்கமான அக்கறையும் மறக்கவே முடியாதவை. என்னை ரொம்பவும் யோசிக்க வைத்தவை. அதுவரை கவிஞராக மட்டுமே அறிமுகமாயிருந்த கவிமுகில், அன்று முதல் என் சகோதரர்களுள் ஒருவராகிப் போனார்.

தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்களுக்கு ஆத்திமாலையினைத் தயாரித்துக் கொடுக்கும் மரபு வழியினரின் குடும்பத்தில் ஒருவராகப் பிறந்தவர் கவிஞர் கவிமுகில். இயற்பெயர் ஆ.பா.சக்திவேல். பெற்றோர் பாவாடை ஆர்சுத்தியார் - ரூபாவதி அம்மாள். 1968ஆம் ஆண்டு ஜூன் 16 அன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆர்சுத்திப்பட்டு எனும் கிராமத்தில் கவிமுகில் பிறந்தார்.

வறுமை நிலையிலான குடும்பம், உயர்கல்வி படிக்க வாய்ப்பில்லாமல் செய்தது. இளைய வயதிலேயே லாரி கிளீனராகப் பணி செய்யத் தொடங்கினார். சென்னைக்கு வந்த பிறகு, சில காலம் வாடகை ஆட்டோ ஓட்டுநராகவும் பணியாற்றினார். கொஞ்சம்

கொஞ்சமாகத் தன் அயராத உழைப்பினால் முன்னேறிய கவிஞர் கவிமுகில், சக்தி கார்ஸ் எனும் நிறுவனத்தைத் தொடங்கினார். பழைய கார்களை வாங்கி விற்கும் நம்பிக்கையான நிறுவனம் எனும் பெயரை வெகுவிரைவிலேயே பெற்றார்.

பள்ளிக்காலம் முதலே தமிழின் மீதும், கவிதைகளின் மீதும் கவிஞருக்கு மிகுந்த ஆர்வமிருந்தது. நூல்கள் வாசிப்பில் எப்போதும் ஈடுபாடும் இருந்தது. அவ்வப்போது தோன்றும் சில கவிதைகளை நோட்டில் குறித்து வைத்துக்கொள்வார். கவிஞர் தாராபாரதியின் அறிமுகமும் நட்பும் கவிஞருக்குக் கிட்டுகிறது. அன்றிலிருந்து கவிஞர் தாராபாரதியைத் தனது மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டார்.

ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் மேல் ஈடுபாடு கொண்டு, ஹைக்கூ கவிதைகளை எழுதிக்கொண்டும், ஹைக்கூ நூல்களைத் தேடியெடுத்து வாசித்துக் கொண்டுமிருந்த தொண்ணூறுகளின் பிற்பகுதி காலமது. அப்போது ‘குமுதம்’ வார இதழ் எழுத்தாளர் சுஜாதாவை ஆசிரியராகக் கொண்டு ‘குமுதம் ஸ்பெஷல்’ எனும் இதழினைக் கொண்டுவந்தது.

1998இல் ‘குமுதம் ஸ்பெஷல்’ இதழில் பத்துக்கு மேற்பட்ட ஹைக்கூ கவிதைகள். குமுதத்தில் ஹைக்கூ கவிதைகளா... ஆச்சரியம்! அனைத்தும் ‘சூரியத் துளிகள்’ எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஒவ்வொரு கவிதைக்கும் சிற்பங்களே ஓவியங்களாக அணிவகுத்தன. எழுதியவர் கவிமுகில் என்றிருந்தது. இதழில் இருந்த முகவரிக்குக் கடிதமெழுதி, அந்த நூலினை வாங்கினேன்.

அட... என்ன அழகான - நேர்த்தியான தயாரிப்பு. நல்ல வழவழப்பான தாளில், பல வண்ணத்தில் நூல் இருந்ததோடு, ஒவ்வொரு கவிதைக்கும் ஓவியர் செழியன் உருவாக்கிய அர்த்தமிக்க நவீன சிற்பங்களின் படங்கள் இடம்பெற்றிருந்தன. மீண்டும் மீண்டும் படித்தேன். பலரிடமும் காட்டி வியந்தேன். இத்தொகுப்பில் பல ஹைக்கூ கவிதைகள் எனக்குப் பிடித்திருந்தாலும் ரொம்பவும் பிடித்த ஹைக்கூவென்று கீழுள்ள கவிதையைச் சொல்வேன்.

‘அடுப்பெரியும் விறகு
கண்ணீர் சிந்தியது
எரிகின்றது வண்ணத்துப்பூச்சி.’

பிடித்த நூலைப் படித்தால் மட்டும் போதுமா? உடனே கவிஞர் கவிமுகிலுக்குப் பாராட்டுக் கடிதமொன்றை எழுதினேன். அவரும் பதிலிட்டார். எனது ஹைக்கூ தொடர்பான செயல்களை விசாரித்தார். சென்னை வரும்போது சந்திக்கலாமே என்றார். நானும் சரியென்றேன். பிறகு மூன்றாண்டுகள் கழித்துத்தான் கவிஞரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தாலும், கவிஞரின் தொடர் கவிதை முயற்சிகளையும் நூல்களையும் நான் வாசித்தபடியே இருந்தேன்.

கவிமுகிலின் ஒரிரு கவிதைகளை எந்தக் கூட்டத்தில் சொன்னாலும் பலத்த வரவேற்பினைப் பெறும். அப்படியான கவிதைகளுள் கீழுள்ள இரு கவிதைகளும் அடங்கும்.



‘இறுக்கிக் கட்டுங்கள்
இடுப்பு வேட்டியை
போகுமிடம் சட்டசபை!’
‘இருப்பவரே வரவில்லை
இறந்தவர் வந்துபோனார்
வாக்குச்சாவடி.’

கவிதைத் தாகத்தைப் போலவே கல்வியின் மீதும் கவிமுகிலுக்கான தாகம் குறையவில்லை. இளங்கலை (தமிழ்) படிப்பைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முடித்து, பட்டம் பெற்றார்.

எதையும் நேர மேலாண்மையோடு திட்டமிட்டுச் செய்வதில் வல்லவர் கவிஞர் கவிமுகில். தொடர் அலுவலகப் பணிகள் விடாது துரத்தினாலும் அதற்கிடையிலும் நேரமொதுக்கி, நூல்களை வாசிப்பதையும் கவிதைகள் எழுதுவதையும் வழக்கமாக்கிக் கொண்டார். ‘இவருக்கு மட்டும் ஒரு நாளென்பது 28 மணி நேரமா?’ என்றுகூட பல நேரங்களில் நான் யோசித்திருக்கின்றேன்.

‘கவிமுகில் கவிதைகள்’ எனும் முதல் கவிதை நூலைத் தொடர்ந்து ‘சூரியத் துளிகள்’ ஹைக்கூ நூல் வெளிவந்தது.



பிறகு, 'சின்ன உளிகள்' எனும் ஹைக்கூ நூல், குப்பைகள், ஆர்ச்சுத்திப்பட்டு, மொட்டுவளை, பூட்டாங்கயிறு, சுருக்குப் பை, சொக்கப்பனை, காலச் சப்பரம், கவிமுகில் கவிதைகள் (2, 3 தொகுதிகள்), வானவில்லின் எட்டாவது நிறம், மௌனம் கலைத்த வினாக்கள், மரத்தை உலுக்கிய பறவைகள், கல்பொரு சிறுநுரை எனப் பல கவிதை நூல்களைப் படைத்து, பல அமைப்புகளின் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றார். 2017இல் தனது 8 கவிதை நூல்களின் பெருந்தொகுப்பாக 792 பக்க அளவில் 'தீக்கொழுந்து தேனருவி' எனும் நூலையும் வெளியிட்டார்.

கவிதைகளை எழுதுவதோடு நில்லாமல், கார்காலம், எதிரே உன் ஏணி ஆகிய உரைநடை நூல்களையும், முச்சந்தி, வெள்ளாவி எனும் இரு நாவல்களையும் படைத்தார் கவிமுகில். இதில், 'எதிரே உன் ஏணி' குறும்படமாகவும் வெளிவந்து பாராட்டைப் பெற்றது.

கவியரங்க மேடைகளில் தனது கம்பீரமான குரலால் கவிதைகளை வாசித்து, அதிலும் தனது வெற்றிக்கொடியை நாட்டினார் கவிமுகில். எழுதும் கவிதை வாசக மனதைச் சென்று சேர வேண்டுமென்பதில் உறுதியுடையவர் கவிமுகில். எளிமையும் கவித்துவமும் நிறைந்த உணர்ச்சி ததும்பும் கவிதைகளை எழுதுபவராக இலக்கிய வட்டத்தில் அறிமுகமானார்.

'சொக்கப்பனை' நூலிலுள்ள கவிதைகள் சில இப்போதும் விரும்பி வாசிக்கப்படுபவையாக உள்ளன. அதிலொன்று;

**கை நீட்டும் கரைகள்**

0

'துயரங்களை
ஏற்றிக்கொண்டு
படகில் பயணிக்கிறேன்...
எங்காவது தொலைத்துவிட
வேண்டுமென்று!
என்னையே
தொலைக்கப் பார்க்கிறது
தொடர்ந்து வீசும்
சூறாவளி.

அலைகளின் முதுகில்
மேலும் கீழுமாய்ச்
சாவு வாய் பிளக்கும்

சருக்கு விளையாட்டு.

என்னையே
நான் தாங்கிக்கொள்கிறேன்

கரைகள் கை நீட்டுகின்றன
ஆனாலும், மனமில்லை
படகின் பாரங்களை
அலைகளிடம் விட்டுவிட்டு
நான் மட்டும் கரையேற...'

*அதேபோல், 'பூட்டாங்கயிறு' நூலில் எழுதியிருக்கும் சின்னச் சின்னக் காதல் கவிதைகளும் ரசமானவை. இதோ... ஒரு துளி;*

'உன்னைப் பற்றி
ஒரு கவிதை...
என்னைக்
கைப்பற்றும்
கவிதை நீ!'

*-என்றெழுதி, நம் மனங்களைப் பற்றியிழுத்திருப்பார் கவிமுகில்.*

*கவிஞர்களுக்கு மட்டுமா, ஒவ்வொரு மனிதருக்குள்ளும் பரவசத்தைத் தரவல்லது காதல்தானே! 'வானவில்லின் எட்டாவது நிறம்' எனும் அற்புதமானதொரு காதல் கவிதை நூலில் கவிமுகில் எழுதியிருக்கும் வரிகள் ஈர்ப்பானவை.*

'மழை மேகங்களை விரட்டுகிற
காற்றுப் பந்தாய்
என்னைக் கலைத்து விடுவாய்!'

*- என்று காதலியின் இருப்பைக் கவிதையாய்ப் பகிர்ந்துகொள்வதிலும்,*

'நீ சிந்திச் செல்லும் புன்னகையைக்
காற்று பத்திரப்படுத்தி
நீ இல்லாத பொழுதுகளில்
திருப்பித் தருகிறது என்னிடம்.'

*-என்று காதலின் ரகசியத்தைப் பகிரங்கமாகச் சொல்வதிலும் வெற்றி பெறுகின்றன கவிமுகிலின் காதல் வரிகள்... இல்லையில்லை... கவிதை வரிகள்.*

*இலக்கியப் பணிகளைச் செய்வதைப்போலவே சமூகப் பணிகளைச் செய்வதிலும் ஆர்வமுடையவர் கவிமுகில்.*




*தாராபாரதி அறக்கட்டளை மற்றும் கவிமுகில் அறக்கட்டளையின் மூலமாக எண்ணற்ற ஏழை எளிய மக்களுக்கு உதவிகளையும், பள்ளி-கல்லூரிகளில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகைகளையும் வழங்கியுள்ளார்.*

*எனது அன்பின் வேண்டுகோளையேற்று, கவிஞாயிறு தாராபாரதி பெயரால் தமிழில் வெளியாகும் சிறந்த ஹைக்கூ நூல்களுக்கு விருதுகளை வழங்குதல், தான் பிறந்த கிராமத்தில் தாராபாரதி பெயரால் நூலகம் கட்டியது, தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் மற்றும் பணமுடிப்புகளையும் வழங்கி வருதல் எனத் தொடர்ந்து சமூகப் பணியாற்றும் கவிமுகில், சுனாமிப் பேரிடரின்போதும், சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போதும் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உதவிகளைச் செய்துள்ளார்.*

*கவிமுகிலின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு, Feathered Festoons, Burning Street என இரு நூல்களாக வந்துள்ளன. முதல் முதலாய்..., பிரமாதம், மலரினும் மெல்லிய, புழுதி, கருப்பன், சீற்றம் ஆகிய திரைப்படங்களுக்குப் பாடல்களையும் எழுதியுள்ளார். ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் சில காலம் 'முகில் முரசு' எனும் இதழினையும் வெளிக்கொண்டு வந்தார். 'ஹைக்கூ' இதழின் சிறப்பாசிரியராகவும் பங்களிப்பு செய்துள்ளார்.*

*தனது தொடர் இலக்கியப் பங்களிப்புகளுக்காகச் சாதனை இளைஞர் விருது, சிறந்த பாடலாசிரியர் விருது, மதிப்புறு முனைவர் பட்டம் ஆகிய சிறப்புகளைப் பெற்றுள்ள கவிஞர் கவிமுகில், 'பூட்டாங்கயிறு'*

நூலுக்காகத் தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசினைப் பெற்றுள்ளார்.

இத்தகைய சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான கவிமுகில், ஒருநாளும் நான் பெரிதாய்ச் சாதித்துவிட்டேன் என்று இறுமாப்பு கொண்டதில்லை. இந்த எளிய மனிதரின் வெற்றிப்பயணம் 'வெற்றி நாயகன் கவிமுகில்' எனும் ஆவணப்படமாகவும் வெளிவந்துள்ளது இன்னொரு சிறப்பு.

தனது பணி மற்றும் இலக்கியம் சார்ந்து சீனா, வியட்நாம், ஹாங்காங், சிங்கப்பூர் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணம் சென்றிருக்கிறார். கவிஞரது படைப்புகள் பல கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் இடம்பெற்றுள்ளன. மாணவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, நூலாகவும் வந்திருக்கின்றன.

தொடர்ந்து இலக்கியத் தளத்தில் செயலாற்றிவரும் கவிஞர் கவிமுகிலுக்குள் ஒரு தேர்ந்த கதை சொல்லியும் இருக்கிறார். கவிஞரின் கவிதைகளுக்குள் ஏராளமான கதைகளும் உள்ளடங்கி இருக்கின்றன. என்றாலும், 'காலச் சப்பரம்' தொகுப்பிலுள்ள பல கவிதைகள், கதைகளாக உள்ளன. அதிலுள்ள கவிதைகளில், எனக்குப் பிடித்த கதைக்கவிதையிது;

**தலைப்பு: பொணத்துக்கு வழி**

'நிலா வட்டத்திற்குள்
அவ்வைக் கிழவி
நூல் நூற்பதுபோல்
வட்ட முகத்தில்
ஒடுக்கு விழுந்த கன்னம்!

வெளுத்த மீசையில்
எண்பது வயது தள்ளாட்டத்திலும்
சுரக்கும் வீரம்!

தடியூன்றி நிமிர்ந்து
அடியெடுத்து வரப்பில் நடந்தால்
நகரும் கடந்த காலப் பதிவுகள்!'

- என்று தொடரும் கவிதையில், நீரை வீராச்சாமி ஆர்ச்சுத்தியார், குடுகுடுப்பைக்காரன், பூம்பூம் மாட்டுக்காரன் ஆகியோரும் கதாமாந்தர்களாக வருவார்கள். ஊரில் சாவு விழுகிறது. பேச்சு அத்திசை நோக்கி நகர்கிறது.

"புளுவுணி சாமிநாதன்
பொண்டாட்டி செத்தப்ப
தூக்கிட்டுப் போவ வழிவிடலய்யா
அந்தப் பயலுவ"ன்னு மோலப்பன் குமுற,

"பொணத்துக்கு வழிவிடாதவன்
வாழ்ந்தாலும் பொணந்தான்
விடுறா மோல"ன்னு மெதுவா நடந்தாரு!

கீழவரப்புல அடிவச்சு குந்துனப்ப
வரப்பு தகராறுல
வடக்கூட்டு வகையறாவே
வெட்டிக்கிட்டுச் செத்தது நியாபகம் வர...
"வரப்பே இல்லாமல் பண்ணனுண்டா
மோலே,
குடு வெத்தலய போடுவோம்"ன்னு
பெருமூச்சு விட்டு
வெத்தலைக் காம்ப கிள்ளினாரு...
"வேப்புடி என்னடா ஆனான்
மோலே?"

"அட யேய்யா கேட்குறீங்க!
முப்பது குழி சண்டைக்கு
முன்னூறு குழிய வித்துட்டாய்யா
வக்கீலு செலவுக்கும்
வாயிதாவுக்கும்!"

"பொசக்கெட்ட பயலுவன்னு"
போக்கவாப் பல்லா மென்னு
நடந்தாரு!

"விடியாமூஞ்சி ஊருய்யா இது
விடியவே விடியாது"ன்னான்
மோலே!
பளிச்சின்னு விடிஞ்சிடுச்சு
பொழுது!

மனிதர்கள் தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டாலும் காலம் தன்போக்கில் விடிவதும் முடிவதுமாகத்தானே சுழன்றுகொண்டிருக்கிறது.

கவிஞர் கவிமுகிலின் தமிழ்ப் பணிகளும், சமூகப் பணிகளும் காலத்தின் பக்கங்களில் என்றென்றும் பதிந்திருக்கும்.

- இன்னும் வரும்...

அம்மையார் ஹைறூன்பீவி நினைவு
'சிறுகதைப் பரிசுப்போட்டி'

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

நர்மதா தேவி

# செல்லாக்காசு



*மாரியம்மா எங்கள் மாரியம்மா... உன்னை வணங்க வந்தோம் கருமாரியம்மா...*

தெருமுனைக் கோவில் கூம்பு ஒலிப்பெருக்கி அலறத் தொடங்கியது. செல்வி திடுக்கிட்டு எழுந்தாள். 'ஐஞ்சாச்சா? தண்ணி வந்து நின்னே போயிருக்குமே!' பக்கத்து வீட்டுக் காளியம்மா கட்டை விளக்குமாறைப் போட்டு வாசலை பிறாண்டிப் பெருக்கிக்கொண்டிருந்த சத்தம் பாட்டுச் சத்தத்தையும் மீறி நன்றாகவே கேட்டது. 'எம்மா நேரம் தூங்கிருக்கோம் பாரு!' பதட்டத்துடன் பிளாஸ்டிக் குடத்தைத் தூக்கிக்கொண்டு பைப்படிக்கு ஓடினாள். கம்பிபோல மெலிதாக வந்துகொண்டிருந்ததைக் குடத்தில் பிடிக்கத்தொடங்கினாள்.

செல்வி மீது மெத்தனப் பார்வையை வீசியவாறு வாசலுக்குத் தண்ணீர் தெளித்துக் கோலம் போடத்தொடங்கினாள் காளியம்மா. 'இவளோட எகத்தாளப் பார்வைக்குப் போயி தீனி போட்டுக்கிட்டு... வேற எங்கயாச்சும் பாத்து வப்போம்!' தெருவை அளக்கத்தொடங்கினாள் செல்வி. ஓட்டுவீடுகள் குறைவாகவும், கூரை வீடுகள் அதிகமாகவும், ஒன்றிரண்டு மாடி வீடுகளும் இருந்த தெரு. சுண்ணாம்புக்கு வழியில்லாத வீட்டுச் சுவர்களில் புதிய தேர்தல் விளம்பரங்கள், தேர்தல் நாளையும் சின்னங்களையும் நினைவுபடுத்திக்கொண்டிருந்தன. சிறுவர்கள் கிட்டிப்புல் அடித்துக்கொண்டிருந்தார்கள். சிறுமிகள் சில்லுக்கோடு விளையாட்டைத் தொடங்கியிருந்தார்கள். நடுத்தெருவில் ஆற அமர உட்கார்ந்து அசைபோட்டுக்கொண்டிருந்தன ஆடுகள்.

தெருமுனை கட்டைச்சுவரில் உட்கார்ந்திருந்த இளைஞர்கள் தத்தமது ஆண்டிராய்டு ஃபோன்களை நோண்டிக்கொண்டே அரட்டை அடித்துக்கொண்டிருந்தார்கள். ‘இந்தத் தெருவுலேயே இந்த ஆடுவளுக்கும், இந்தப் பயலுவளுக்குந்தான் ஒரு கவலையுமில்லே... சரி, நம்ம பொழப்ப பாப்போம்!’ குடத்தைப் பார்த்தாள். கால்வாசிகூட இன்னும் நிரம்பியபாடில்லை.

காளியம்மா பைப்படிக்கு வந்து செல்வியிடம், “ஒங்கூட்டு கொள்ளப் பக்கத்தொட்டியில நாலு குடம் நிரப்பிட்டேன், பயப்படாத!” என்றாள். அப்பாடா என்றிருந்தது செல்விக்கு.

“கொஞ்சம் அசந்துட்டேன்”, தலை சொரிந்து அசடு வழிந்தாள்.

“புல்லறுக்கக்கூட வராம அப்படியென்ன தூக்கம்? பெரிய விருந்தோ? ஆட்டுக்கறியா?”

“ம்கூக்கும்...! சுடுசோத்துக்கே வழியக் காணோம் நீ வேற! நேத்து ரைஸ் மில்லுல வேலை ரொம்பக்கா. நெல்ல அள்ளிக் குவிச்சு பெருக்கிக் கூட்டினது இடுப்பொடிஞ்ச மாதிரி போச்சு. அதான் மதியானம் சாப்புட்டு செத்த படுத்து எழுந்திரிப்போம்னு நினைச்சு, கண் அசந்தது அப்புடி தூங்கிருக்கேன் பாத்துக்கோ...”

“என்ன சாப்பாடு மதியானம்?”

“சுடுசோறுதான். கருவாட்டை சுட்டு வச்சிக்கிட்டு முருங்கக்கீரை தாளிச்சு தின்னேன். நெத்தாட்டம் போடுறாங்க ரேசன் அரிசி. அது வேவுறதுக்குள்ள உசிரே போவுது. சிலிண்டர் விக்கிற விலைக்கு எங்க வாங்குறது? கேஸ் அடுப்ப சாக்கு போட்டு கட்டிவச்சிட்டு, விறவடுப்பத் திரும்ப கட்டியாச்சு. சாணி அள்ளியாந்து காயவச்சி அடுப்பெரிச்சு...ஏதோ அத்துக்கும் பாட்டுக்கும்னு ஓடுது.”

“புளிக்கொழம்பு ஏதும் வக்கெலயா?”

“தீந்துபோச்சுக்கா புளி.”

“வாரத்துக்கு மூணு நாலு நா வச்சா வருசத்துக்கு எப்படி தாங்கும்?”

“ஆமாக்கா, இந்தக் கோடையில புளிய கொஞ்சஞ் சேத்தெடுக்கணும். இப்பலாம் ரோட்டு மரத்துல வேற எடுக்கவுட மாட்றாவோல... ஃபைன் போடுறாவ. பயந்து பயந்துல்ல எடுக்க வேண்டியதா இருக்கு.”

“புளி இருந்தாலாச்சும் ஏதோ குப்பையில விளையிற கத்திரி, சுண்டை, பரங்கிணு போட்டு குழம்பு வக்கெலாம்.”

“பருப்பு வேற சுத்தர இல்ல. ரேசன்ல இன்னும் வரலனுட்டான். அது கிடைச்சாலாச்சும் வறுத்து, கொஞ்சம் புளி வச்சித் தொவைய அரைக்கலாம். உடப்புடாது போயி கேக்கணும்” உறுதியாகச் சொன்னாள் செல்வி.

“என்னிக்கு ஊருக்குப் போற நீ!”

“இந்த வாரம் வெள்ளிக்கிழமை.”

“எலெக்சன் அன்னிக்கேவா போறே?”

“ஸ்... ஆமா அன்னிக்கு எலெக்சன் இருக்குல. ஐய்யோ ஏஜன்டுகிட்ட அன்னிக்கி கிளம்புறதால்ல வாக்கு குடுத்துட்டேன். சரி, ஓட்டுப் போட்டுட்டு சாயங்காலமா போவலா.”

வயிற்றுப்பாட்டைப் பற்றி விலாவரியாக நெடுநேரம் பைப்படியிலேயே பேசிக்கொண்டிருந்தவர்கள் மெதுவாக நகர்ந்து காளியம்மா வீட்டுத் திண்ணையில் வந்தமர்ந்தார்கள்.

செல்வி தேர்தல் பற்றிய பேச்சைத் தொடங்கினாள். “ஆமா, என்ன இந்த முறை எலெக்சன் களையாவே இல்ல?”

“என்னமோ சிங்கப்பூர்லருந்து இப்பத்தான் திரும்பி வந்த மாதிரி புதுசால்ல கேக்குற? பத்துப் பயிஞ்சு வருசமாவே இப்படித்தானே இருக்கு. முன்னலாம் திருவிழா மாதிரி ஜேஜேன்னு எலெக்சன் இருக்கும். இப்ப என்னென்னா, ரொம்ப நேரம் மைக் செட் வச்சிப் பிரச்சாரம் பன்னப்புடாது, வீட்டுக்கு ஓட்டுக் கேக்கக்கூட கொஞ்சமாத்தான் ஆளுவ போவணும், சுவருல விளம்பரம் பன்னக்கூட அனுமதி கேட்டுத்தான் பன்னணும்னு நிறைய கெடுபிடி பன்றாங்க.”

“ஆமாக்கா, தேர்தல் நடக்குற மாதிரியே தெரியல.”

தேர்தல் குறித்த இவர்களுடைய கலந்துரையாடலுக்கு இடைவேளை விடச்சொல்லும் தொனியில், ஃபைனான்ஸ்காரப் பையன் சைக்கிளில் பெல் அடித்துக்கொண்டு காளியம்மா வீட்டின் முன் வந்திறங்கினான்.

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

பேச்சு மாறியது.

"தவணை முடியலையா உனக்கு இன்னம்?" செல்வியிடம் கேட்டாள் காளியம்மா.

"எங்கிட்டு முடியுது? இன்னையோட ஆறு நாளைக்குப் போவும்."

"இன்னையோட முடிக்க வேண்டிதான் நானு" வீட்டுக்குள் போன காளியம்மா புதிய ஐநூறு ரூபாய் தாள் ஒன்றை எடுத்துவந்து மிடுக்காகத் தவணைக்காரப் பையனிடம் நீட்டினாள்.

'அம்மாடியோவ்... எங்கிருந்து இவளுக்கு இவ்வளவு காசு தீடீர்னு!?' செல்விக்குத்தான் வியப்பே ஒழிய, தவணை வசூலுக்கு வந்த பையன் முகத்தில் எந்தவிதமான ஆச்சர்யக்குறிகளும் இல்லை.

அட்டையைக் கொடுத்து அவனிடம் காளியம்மா கையெழுத்து வாங்கிக்கொண்டிருந்தபோதே, அவளது பிள்ளைகள், 'அம்மா ரொட்டி வேணும் இன்னிக்கி. மிச்ச காசு இருக்குல' என்று கேட்டார்கள். "கடையில பேரு சொல்லி ஆளுக்கு மூணு பரோட்டா வாங்கிக்கச் சொல்லிருக்காங்க. எலெக்சன் முடியிற வரைக்கும் வாங்கியாந்து சாப்பிடுங்க போங்க..." அம்மா சொன்னதும் பிள்ளைகள் மனதில் சந்தோஷம். குடுகுடுவென ஒயர்கூடையைத் தூக்கிக்கொண்டு ஓடின. "எலேய், ஏழு மணியாவும். இப்பவே ஓடுறீயளே...?!" காளியம்மா சத்தம்போட்டாள். "நாங்க கடத்தெருவுக்குப் போயி விளையாடிட்டு சுடச்சுட வாங்கியாறோம். உனக்கும், அப்பாயிக்கும், அப்பாக்கும் பொட்டலமா வாங்கியாந்துடுறோம். நாங்க அங்கனவே சாப்டுக்கவா?" குழந்தைகள் விண்ணப்பம் போட்டன. 'சரி போய் சாப்புடுங்க!' எனத் தாயின் அனுமதி கிடைத்ததும், ஐய்யா, ஜாலீயெனக் குதூகலமாகக் கிளம்பிப்போனார்கள் அந்த வாண்டுப்பிள்ளைகள்.

"என்ன திடீர்னு ஒரே அமக்கலமா இருக்கே?!" செல்வி கேட்டாள்.

"நீங்களும் தர்றீங்களா?" செல்வியிடம் தவணைக்காரப் பையன் குறுக்கிட்டுக் கேட்டான். தலைப்பில் முடிந்துவைத்த பத்து ரூபாயைத் தந்தாள். வீட்டுக்குப் போய் அட்டையை எடுத்து வந்து கையெழுத்து வாங்கிக்கொண்டாள்.


அட்டையைச் சரிபார்த்து, கணக்கு சரியா தம்பி எனச் செல்வி சந்தேகம் கேட்டதும், "இந்தத் தவணையில் நூறு ரூபாய் வாங்கி இருக்கீங்க. பத்து ரூபாய் பிடிச்சுக்கிட்டு, தொன்னூறு ரூபாய் குடுத்தது. இன்னியோட அஞ்சு நாள் முடிஞ்சிருச்சி. இன்னும் அஞ்சி நாள் கட்டணும் நீங்க, சரிதானா?" விளக்கினான் பையன்.



நூறு ரூபாய்க்குப் பத்து நாட்களில் பத்து ரூபாய் வட்டி. இப்படித்தான் பலருக்கும் பிழைப்பு ஓடியது.

“ஒனக்கின்னும் காசு தரலையா செல்வி?” ஃபைனான்ஸ் பையன் இருக்கும்போதே கேட்டாள் காளியம்மா.

“என்ன காசு? ரேசன்லயா? பொங்க பணம்தான் வாங்கியாச்சே” வெள்ளந்தியாகப்



பதில்கேள்வி கேட்ட செல்வியை ஏறஇறங்க ஒரு பார்வை பார்த்துவிட்டு, இது தேறாது போல என்ற தொனியில் ஒரு பெருமூச்சை விட்டுவிட்டுக் கிளம்பிச் சென்றான் அந்தப் பையன்.

“என்னது புரியாம பேசுற? எலெக்சன் காசு இன்னம் நீ வாங்கலயா?” பையன் அப்பால் போனதும் காளியம்மா கேட்டாள்.

“எலெக்சனுக்குத் தராங்களா?” செல்வியின் கண்முழிகள் வியப்பில் புடைத்து வெளியே வந்தன.

“ஆமாடி, ஒரு ஓட்டுக்கு ஐநூறு ரூவாயாம். நம்ப கட்சி குடுக்குது. நேத்து தங்கராசு அண்ணே எங்க வீட்டுக்கு வந்து ஆயிரத்தைனூறு தந்துச்சு. மூணு ஓட்டுக்குக் கணக்குப் பன்னி கரெக்டா கட்சியில குடுத்துருக்காங்க பாத்துக்க. அத வச்சி இப்ப தவணை குடுத்தாச்சு. கறிக்குழம்பு வச்சோம் இன்னிக்கி. இன்னும் ஐநூறு சொச்சம் இருக்கு. இந்த மாசம் செலவுக்கு ஓடும். நம்ம கட்சி குடுக்குறதப் பாத்து அந்தக் கட்சிக்காரனுங்களும் காசு எடுத்துட்டு வருவாங்கணு பேச்சு அடிபடுது. ஆனா, உறுதியா இவங்க நமக்குப் போடுவாங்கணு தெரிஞ்சாதான் அவனுங்க குடுக்குறாங்களாம். அங்கிட்டு முடுக்குத் தெருவுல முன்னூறு ரூபா நேத்து தந்ததுக்கு, பத்தாதுணு சனம் சொல்லி சண்ட போட்டுருக்குவ. கடைசித் தெருவில பேச்சி… எப்படியோ, இந்த மாத்தைக்குத் தேர்தல்னால பொழப்பு போயிரும்.”

காளியம்மா சொன்ன தேர்தல் புதுக்கதைகளை அதிசயமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள் செல்வி.

“நெசமாவே உனக்கின்னும் காசு தரலையா செல்வி?”

“எனக்கெல்லாம் யாரும் தரல” எரிச்சலோடு பதில் சொன்னாள்.

“அதெப்படி தராம இருப்பாங்க? இன்னிக்கு நாளைக்குள்ள தந்துடுவாங்க வருத்தப்படாத…நா வேணா செலவுக்குக் காசு தரட்டா?”

“ச்சேச்சே வேணாம் ஒன்னும்.”

செல்வி மகள் சாந்தி முதுகில் பையோடு வீட்டுக்கருகில் நடந்துவந்து கொண்டிருந்தாள். கான்வென்ட் பள்ளியில் விடுதியில் தங்கிப் படிக்கிறாள். இந்த ஆண்டு பன்னிரெண்டாவது. கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் இருந்தாலும், இவளுடைய பள்ளிதான் தேர்தல் மையம் என்பதால், இன்னும் சில நாட்களுக்குப்

பள்ளியும், விடுதியும் விடுமுறை.

"ஏம்மா இவ்வளவு லேட்டு?" வாஞ்சையாக மகளைக் கேட்டாள் செல்வி. "பஸ் ரொம்ப நேரம் வரலம்மா."

"சரிக்கா நாங்க வாறோம்" எனக் கிளம்பிய செல்வியிடம், "இந்தாடி... புள்ள வந்திருக்கு, ஒரு நிமிசம் பொறு! நான் கறிக்குழம்பு தாரேன் எடுத்துப்போ!" என்றாள் காளியம்மா.

"இல்லல்ல வேணாக்கா.. நாங்க வர்றோம்" எனப் பதறிப்போய், கிளம்பி விடுவிடுவென வீட்டுக்கு மகளை அழைத்து வந்தாள். ஏன் இப்படி படபடப்பாகக் கிளம்புகிறாள் என வியந்தாள் காளியம்மா.

பூண்டு வரமிளகாய்த் துவையல் அரைத்து, கோதுமை மாவு கரைத்து தோசை ஊற்றி மகளுக்கு சுடச்சுடத் தட்டில் வைத்தாள். "கறிக்கொழம்பு இருந்திருக்கலாம். கொடுத்தாங்கல அத்தை, ஏன் வேணாம்னே..." மகளுக்குப் பதில் சொல்ல வாயைத் திறக்கையில் வெளியே சத்தம்.

"ஆரு ஊட்ல" என உரக்கக் குரல் கொடுத்தவாறே தலைவாசலில் தலையைத் தாழ்த்திக் கூன்போட்டு வீட்டுக்குள் நுழைந்தார் தங்கராசு.

"இருக்கோம் மாமா வாங்க. நல்லாருக்கியளா? சாப்புடுங்களேன்... என்ன விசயம்?" குசலம் விசாரித்த செல்வியிடம், "இந்தாயீ ஐநூறு ரூவா... எலெக்சன் பணம்" நீட்டினார் தங்கராசு.

"என்னத்துக்குப் பணம்?" தெரியாதது போலவே கேட்டாள் செல்வி.

"எல்லா ஊட்டுக்கும் கரக்டா கணக்குப் பன்னிக் குடுத்துட்டோம் ஆயி. உன் வூடுதான் பாக்கி. நேத்து வந்து பாத்தப்ப நீ மில்லுல இருந்து வரல. அதான் இன்னைக்கி வந்தேன். நானாருக்குற வாசி ஒருத்தரயும் உடாம, எல்லாருக்கும் கரெக்டா பட்டுவாடா பன்னிட்டு வாரேன். மத்தவனா இருந்தா ஏமாத்திப்புடுவான்னு கட்சியில என்னிட்ட காச ஒப்படைச்சிருக்காங்க." தன்னுடைய 'நேர்மையான' நடத்தை குறித்த கர்வத்தோடு, நெஞ்சை நிமிர்த்திச் சற்று கூடுதல் சத்தத்தோடே பேசினார் தங்கராசு.

"ஓட்டுக்கு ஐநூறு ரூவா. நம்ப மோகன் இருந்திருந்தா ஆயிரம் ரூவா உங்கூட்டுக்கு வந்திருக்கும். பாவம் தவறிப்போயிட்டான். நானும் நம்ப எம்எல்ஏ உதவியாளர்கிட்ட மோகன் இல்லாட்டியும் அவன் சம்சாரம் செல்விக்கு ஆயரூவா தரனும்னு சொல்லிருக்கேன். நாளைக்குப் பேசிட்டு ஐநூறு ரூவா சேத்துத் தாரேன். இப்போதைக்கு இதப்பிடி" ஐநூறு ரூவா தாளை நீட்டினார்.

"வேணாம் மாமா, நான் வாங்கல" எரிச்சலோடு மறுத்தாள் செல்வி.

"ஏன் வேணாங்குற? மத்தவங்களுக்கெல்லாம் ஆயரம், ரெண்டாயரம் தாராங்க, நமக்கு மட்டும் ஐநூறு ரூவாயானு நெனைக்கிறியா? அடுத்த எலக்சனுல பாப்பாவுக்கும் ஓட்டு வந்துரும்ல. இப்பதிக்கி பிடி. ஐநூறுவா குறைவுதான். அதான் நாளைக்கு இன்னும் ஐநூறு கேட்டு வாங்கித் தாறேன்னு சொன்னேன்ல."

"அதெல்லாம் ஒன்னும் வேணாம். ஓட்டுப் போடுறதுக்கு என்னாத்துக்குக் காசு தர்றீய? பொழப்பேதும் இல்லாட்டியும் இந்தக் கட்சி ஜெயிக்கணும்னு காலம்பூரா ஒழச்ச மனுசன் அவரு. உசிரா நினைச்சு கையில சின்னத்தை பச்ச குத்திக்கிட்டாப்புல. இந்த சின்னத்துக்குத் தவிர நாங்க வேறெதுக்காச்சும் ஓட்டு போட்டிருக்கோமா? இப்ப என்னாதுக்கு வந்து காசு தர்றீய?" செல்வி இப்படித் துடுக்காகக் கேட்பாள் எனத் தங்கராசு சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"ஆயி, புரியாம பேசாத! நிலைமை மாறிப்போச்சு. அந்தத் தொகுதியில காசு குடுத்தியலே, இங்கயும் குடுங்கன்னு சனம் கொடையுது. கட்சியில இந்த முறை கரெக்ட்டா இவ்வளவு ஓட்டுக்கு இவ்வளவுன்னு காசை கணக்குப் பன்னி பட்டுவாடா செய்யிறாங்க. போன முறை காசு குடுக்கச் சொல்லி ஒரு பைசாகூட குடுக்காம முழுசையும் அமுக்கிட்டாப்பள அந்த மந்திரி. இந்த முறை தலைமை கூப்பிட்டுக் கண்டிசனா சொல்லிருச்சு. ஒழுங்கா பணத்தை சனத்துகிட்ட ஏமாத்தாம தரணும்னு. அதனால, இந்த எலெக்சன்ல ஊழல் ஏதும் இல்லாம பணப்பட்டுவாடா ரொம்ப கரக்ட்டா நடக்குது



பாத்துக்க. என்ன மாதிரி ஆளுங்க கராரா கணக்குப் பாத்து யாருக்கும் பாக்கி வைக்காம நேர்மையா பட்டுவாடா பன்னிட்டு வாரோம். நீ வாங்கலன்னா சரியா இருக்காது. நான் குடுக்காம ஏச்சிட்டதா என்னைய தப்பா சொல்வானுவ. ஒழுங்கா வாங்கிக்க" தேர்தல் பணப்பட்டுவாடா 'முறையாக' நடைபெறுவதற்காகத் தனது கட்சி வகுத்திருக்கும் 'நெறிமுறைகளைப்' பற்றி அளந்தார் தங்கராசு.

செல்வி சற்றும் அசையவே இல்லை. அவருடைய கண்களையே ஊடுருவிப் பார்த்தாள்.

"இந்தா ஆயி... வாங்கி அந்த சாமி மாடத்துல வையி" இப்போது சாந்தியைத் தங்கராசு உசுப்பியதும், "வேணாம் மாமா, பாப்பா வாங்காத" என இருவருக்கும் இடையில் நடக்க இருந்த பணப்பரிமாற்றத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

"என்ன இப்படி நாடகமாக்குற. புடிவாதம் பன்னாத!" கடிந்துகொண்ட தங்கராசு அடுப்படி நிலைப்படிக்கு இடப்பக்கத்தில் இருந்த முக்கோண வடிவ சாமி மாடத்தில் வைக்கப்போனார். சாமிகிட்ட போயி வைக்கிறீங்களே என அவரைத் தடுத்து மல்லுகட்டினாள் செல்வி. நிலைப்படிக்கு வலப்பக்கத்தில் இருந்த இன்னொரு மாடத்தில் அந்தப் பணத்தை வைத்துவிட்டு, அவள் மேற்கொண்டு பேசுவதற்கு இடம்கொடுக்காமல், 'ஓட்டு போட்டுரு ஆயி' எனச் சொல்லிவிட்டு விடுவிடுவென வாசலுக்கு விரைந்தார். வாசலை எட்டியவர் எதையோ யோசித்துவிட்டு, "மோகன் இல்ல. நாளைக்குக் கேட்டு மேக்கொண்டு ஐநூறு வாங்கித்தர வரைக்கும் காத்திருக்கணுமா என்ன? இந்தா இப்பவே புடி! அவனுக்கும் ஐநூறு வச்சிக்க" எனச் சொல்லி மீண்டும் அதே மாடத்தில் மேலும் ஒரு ஐநூறு ரூபாய் தாளை வைத்தார். "அவம்பேரு இன்னும் ஓட்டு லிஸ்ட்ல இருக்கு. இன்னும் எடுக்கல. அவனோட ஓட்ட குத்திக்குற வாய்ப்பிருந்தா போட்டுக்குறோம். எதுக்கு வேஸ்ட் பன்னிகிட்டு? அவன் இருந்தா நம்ப கட்சிக்குத்தானே போட்டுருப்பான்" நுணுக்கமாகத் திட்டமிட்டுத் தனது கட்சிக்கு வேலை பார்க்கும் திருப்தியில் கிளம்பிப்போனார்.

"இதுநா வரை இந்தக் கட்சிக்குத்தான் போட்டேன். இனி சாகுறவரை இவனுவளுக்குப் போட மாட்டேஞ்சாமீ" இடப்பக்க மாடத்தில் இருந்த ஏற்றாத அகல்விளக்கைப் பார்த்துச் சொன்னாள் செல்வி.

“பின்ன யாருக்குப் போடுவ...” துணுக்குற்று வினவிய மகளுக்கு “தோனுறவங்களுக்குப் போடுவன்” வைராக்கியத்துடன் பதிலளித்தாள்.

சற்று நேரம் நிலவிய அமைதியைக் கலைத்து, “அம்மா நான் கோச்சிங் கிளாசுக்குக் காசு கேட்டேன்ல” என ஆரம்பித்தாள் சாந்தி. “என்னவாம் அதுக்கு?” அதட்டினாள் செல்வி.

“அதான் காசு குடுத்தாருல்லா மாமா...” தயங்கித்தயங்கி வார்த்தைகளை மென்று முழுங்கினாள் சாந்தி.

“தார்றியானு கேக்குற...அப்படித்தான?... என்னா தைரியம் உனக்கு? திருட்டுக் காசுல பொழப்பு நடத்துற அளவுக்கு இளப்பமாயிட்டோமா நாம...” பொரிந்து தள்ளினாள்.

“இல்லம்மா நீயும் தவணைதான் வாங்குற... ஊர்ல சரியா கூலி வேலையே கிடைக்கிறதுல்ல... வேலை குடுத்தாலும் பொம்பள செய்யிற வேலைன்னு உனக்கு சரியா கூலியும் தரமாட்டீங்கிறாங்க... என்ன பன்னுவ நீயும்? அப்பாவும் இல்ல இப்ப...” மகள் சாந்தி அம்மாவைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

“அறிவிருக்காடி உனக்கு. அதுக்காக இந்தப் பாவக் காசைப் போயி படிப்புக்கு எடுத்துட்டுப் போறேங்குறியே? யார அடிச்சி ஒலையில போட்டு சம்பாதிச்சானுவளோ தெரியாது. இத செலவழிச்சா உருப்புட்டாப்லதான்.”

“பணத்துக்கு இப்ப என்ன பன்றது மா?”

“அதான், திருப்பூர்ல ரெண்டு மாசம் வேலைக்குக் கூப்பிட்டுருக்காங்கல்ல. இந்த வெள்ளிக்கிழமை கிளம்புறேன். ரெண்டு மாசம் ஆவும் நான் வரதுக்கு. முன்பணம் கேட்டிருக்கேன். வெள்ளிக்கிழமை ஏஜென்ட் தந்ததும் உங்கிட்ட குடுத்தனுப்பி, உன்னைய ஹாஸ்டல்ல கொண்டி விட்டுட்டுத்தான் நான் ஊருக்குப் பஸ் ஏறுவேன்.”

“ஊர்ல இருக்க மாட்டியா அப்ப?”

“பின்ன எப்படி மா பொழைக்கிறது நாம... புரியாம பேசுறியே நீ? அடுத்த வருசம் உன்னைய காலேஜுல சேக்கணும்னா எங்க காசுக்குப் போறது? திருப்பூர்ல ஹாஸ்டல்ல தங்கி வேலை பாக்கணுமாம். ரெண்டு மாசம் போனா வரும்போது இருபதாயிரம் கொண்டுட்டு வரலாம்னு சொல்றாவ.”

**

வெள்ளிக்கிழமை ஓட்டுப்போட்டுவிட்டு மகளுக்குப் பணம் கொடுத்தனுப்பி, அவளை விடுதியில் விட்டுவிட்டுக் கிளம்பி திருப்பூருக்குப் போயாச்சு. திருப்பூரில் ஆறு மாதம் வேலை, ஒரு மாதம் விடுப்புக்கு ஊருக்கு வருவது என இரண்டாண்டுகளுக்கு மேல் ஓடிவிட்டது. முன்பணம் வாங்கி மகளைக் கல்லூரியில் சேர்த்தாச்சு. மகள் இப்போது கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படித்துவருகிறாள்.

இன்றைக்குப் பனியாரம் செய்துவந்து மகளை விடுதியில் பார்க்க வந்திருந்தாள். காசு சேமித்து மகளுக்கு ஆன்ராய்ட் செல்ஃபோனும், தனக்கு ஒரு பட்டன் ஃபோனும் வாங்கி வந்திருந்தாள். மகள் புது ஃபோன் கைக்கு வந்ததும் அதையே நோண்டிக்கொண்டிருந்தாள்.

“பனியாரத்தை நாளைக்கு வரை வச்சி சாப்பிடலாம் ஆயி” அம்மா சொன்னது காதிலே விழாததுபோல, ஃபோனில் ஏதோ வீடியோவைப் பார்த்துக்கொண்டிருந்தாள் சாந்தி. சற்றுநேரம் கழித்து அதிர்ச்சியுடன் திடீரெனச் சொன்னாள், “அம்மா! இந்தாப்பாரு... ஐநூறு ரூவா, ஆயிரம் ரூவா நோட்டெல்லாம் செல்லாக்காசாக்கிட்டு கவுருமென்டு. பழைய நோட்ட பேங்குல கொடுத்துதான் மாத்திக்கணுமாம். கருப்புப் பணத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்குறதா இப்ப பிரதமர் பேசிட்டிருக்காரு!” வீடியோவைக் காட்டினாள்.

“உன்கிட்ட காசிருந்தா மாத்திடும்மா!”

“நம்பகிட்ட ஏதும்மா பெரிய நோட்டு?”

இருவருக்கும் ஒரே சமயம் ஞாபகம் வந்தது...

“அம்மா அந்த ரெண்டு ஐநூறுவா தாளு. இரண்டு வருசமா அந்த மாடத்துலயே கிடக்கே.”

“ஆமா... அது எப்பவோ செல்லாக்காசு ஆயிட்டு... அதுக்கென்ன இப்ப...?”

■

அமிர்தம் சூர்யா

# சட்டையை உரித்துக்கொள்ளும் பாம்பு

## (வாழ்வினூடாக இலக்கிய இஸங்களை அறிதல்)



வணக்கம் நண்பர்களே.. படைப்பு குழுமத்தின் தகவு இதழில் எனது இலக்கிய அபிப்பிராயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் அடைகிறேன். இந்த எளிய தொடரின் மூலமாக எனது வாழ்வில் இலக்கியத்தின் பங்கு குறித்தும் நான் எதிர்கொண்ட இலக்கிய அனுபவத்தையும் அதனூடாக இலக்கிய வெளியில் நிலவும் இசங்கள் குறித்தும் உங்களோடு பேசவிரும்புகிறேன். இதில் நான் கற்றுக்கொடுக்கவோ பாடம் எடுக்கவோ வரவில்லை. தெரிந்ததைப் பகிர்ந்துகொள்வதே பிரதான நோக்கம். தெரிந்ததில் சரியும் இருக்கலாம் தவறும் இருக்கலாம். ஆனால் இதில் இடம்பெறும் அனைத்து நபர்களும் சம்பவங்களும் அசலானதே.. கற்பனை அல்ல.

******

தாத்தா ஒரு கூத்துக் கலைஞன். அரிச்சந்திர மயான காண்டத்துப் பாடலை அரைமணி நேரம் நிறுத்தாமல் பாடக்கூடியவர். `அப்படி பாடித்தான்டா உம்பாட்டியை மயக்கினேன்` என்று தாத்தா சொல்வார். ஆனால் பாட்டியோ, `அந்த ஆள் ஒரு கிறுக்கன்டா. அந்தப் பாட்டைத்தான் காதலித்தேன், இந்த ஆளையில்ல` என்பாள். இருவர் வாக்குமூலத்திலும் எவ்வளவு முரண். எவ்வளவு நுட்பம்.. தாத்தாவின் சொல்லில் ஆணாதிக்கத் திமிரும் பாட்டியின் குரலில் கலையின் மீதான காதலும். என் இலக்கிய ருசியின் விதை இங்கிருந்துதான் முளைவிட்டிருக்கக் கூடும்.

அப்பா ஒரு நாடக எழுத்தாளன். நாடகக் காதல் என்ற மட்டமான சொல்லாட்சியை இங்க யோசிக்காதீங்க. சமூக நாடகங்கள் எழுதி மக்கள் முன் அரங்கேற்றம் செய்யும் எழுத்துக் கலைஞன்.

அப்பாதான் சொல்வார் - `பத்தோடு பதினொன்னா இருக்காதே கதிர். நீ பணக்காரன்னு சொல்றதை விட எம்புள்ள எழுத்தாளன் கவிஞன்னு சொல்றதுதான் எனக்குப் பெருமை...` `இப்படிச் சொல்லி வளர்த்தா எந்தப் புள்ளை உருப்படும்`னு அம்மா திட்டுவாங்க. `எழுத்தைப் பிடிச்சவன் குடும்பம் நடத்த யோக்கியதை இல்லாதவன் நாடோடியாத்தான் சுத்துவான்`னு அம்மா அடிக்கடி சொல்லும். எப்படியோ நான் உருப்பட்டுட்டேன். அப்பா ஆசையையும் நிறைவேத்திட்டேன், அம்மா யூகத்தையும் முறியடிச்சுட்டேன். இந்த முன்கதைச் சுருக்கம் ஏன்? எங்கிருந்து இங்கு வந்தேன் என்பதைச் சொன்னால்.. யார் என்னை இலக்கியம் பக்கம் இழுத்து வந்தது என்பதெல்லாம் சொன்னால்தான்.. வாழ்வினூடாக என்ற பதத்திற்குப் பொருத்தமாயிருக்கும்.

ஒருமுறை நண்பன் கவின் கவிகிட்ட சொன்னேன். `டேய் மாமு.. ரொம்பப் படிக்கிறேன். அதிகமா படிச்சா மரை கழன்றும்னு சொல்றாங்க. அப்படி எதாவது நான் ஒரு மாதிரி லூசா தெரிஞ்சா வேப்பிலை அடிக்கிறது பில்லி சூன்யம்னு டைம்மை வேஸ்ட் பண்ணாம நல்ல டாக்டரா பாத்துச் சரி பண்ணு மாமு. எனக்கு இலக்கியத்தை விட குடும்பம்தான் முக்கியம்`னு 2000இல் சொன்னேன். நல்லவேளை இலக்கியம் அப்படியான மனப்பிசகைத் தரவில்லை. ஒருபோதும் இலக்கியம் அப்படித் தராது. வாழ்வில் இருக்கும் மனப்பிசகை வேண்டுமானால் எதிரொலிக்கலாம்.

இந்தத் தொடரின் அனுபவங்கள், வாசிப்பு குறித்தான செய்தி, சில இஸங்கள் பற்றிய குறிப்பு உங்களுக்கு ஏதாவது ஒரு உந்து சக்தியாக அமையக்கூடும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில். ஏன் இதைச் சொல்றேனா நான் கவிதை எழுத வந்ததற்குப் பாரதியோ பாரதிதாசனோ காரணம் இல்லை. சிங்கார சடையப்பன் என்ற ஒரு திமுக பேச்சாளர் கவிஞர்தான் காரணம்.

இப்போ இருக்கும் வியாசர்பாடி ஜீவா ரயில்ஸ்டேசன் எதிரே ஒரு தெருமுனை திமுக கூட்டம். அநேகமா 90 வாக்கில். இருபது பேர் நின்னுக்கிட்டு இருந்தாங்க அங்க. அந்தக் கூட்டத்தில் ஒருவர் தோளில் துண்டை இரு கைகளால் பிடிச்சபடி பாடுகிறார்.

அந்த ரிதம் அந்த எதுகை மோனை புரிதல் அப்போதான் வந்தது. பாரதியார் எல்லாம் அப்போ மனப்பாடப்பகுதிதான். ரசிக்க வைக்கல அல்லது அப்போ நம்ம நாலேஜ் அவ்வளவுதான். அந்தக் கணீர் குரலில் அவர் வாசித்தது இதுதான்..

**சாதி இல்ல மதமும் இல்ல**
**சரக்கிருந்தும் தகராறு இல்ல**
**கால்வழியா காததூரம் நடந்தோம்**
**அந்தக் காரணத்தால நோயில்லாம**
**கிடந்தோம்**
**இன்னிக்கு மோதிக்கிறான்**
**முட்டிக்கிறான்**
**மூளையத்தான் குழப்பிக்கிறான்**
**வாதிக்கிறான் இலக்கியத்தைப் பத்தி**
**என்ன வாரிக்கிறான் தெருதெருவா சுத்தி.**

- இன்னிக்கும் இலக்கியச் சூழலுக்குப் பொருந்துகிற வரியாகத் தெரிகிறதுதானே.

எல்லாத் தமிழ் இலக்கண கவிமரபுகள் தெரிந்து இருந்தும் கேட்கும் பாமரனுக்கு எப்படிப் போய்ச் சேர்ப்பிக்க வேண்டும் என்பதில் கவனமாயிருந்து சொற்களைச் சேர்ப்பது அதை மைக்கில் ஒலிப்பது எப்படியென்பதைப் பாமரப்புலவன் சிங்கார சடையப்பன் என்பவரிடம் அறிந்துகொண்டேன்.. கவிஞரும் பாடலாசிரியருமான கபிலன்தான் அவரைப் பாமரப்புலவன் என்ற அடைமொழியோடு அழைக்கவைத்தார்.

சிங்கார சடையப்பன் என்கிற யதார்த்த விருட்சத்தைத் திமுக வெறும் பேச்சாளராக வைத்துப் போன்சாய் ஆக்கியது என்பது தவிர்க்க முடியாத விமர்சனம்தான்.

எதுகை மோனை கொண்டு கவியரங்கக் கவிதை எழுதுவது.. சக்கரையைத் தூவி எறும்புகளை ஈர்ப்பது போல. அன்றைய அரசியல் சமூக அவலங்களை உணவில் கூட்டு பொரியல் மாதிரி சேர்த்துக்கொள்வது, வாசிக்கும்போது கடுகு போட்டுத் தாளிப்பது போல் ஒரு ரிதம் வரும்படியும் வாசிப்பது, முடிக்கும்போது ஒரு அறைகூவல் அறிவுரை

அல்லது எச்சரிக்கையோடு கொதிக்கும் குழம்பில் மீனைப் போடுவது போல அல்லது கொதி வரும் முன் ரசத்தைப் பக்குவமாய் இறக்கிவிடுவது போல் மிக நேர்த்தியாகச் செய்யும் கவிதை சமையல் - கவியரங்கக் கவிதைகள். குரல் வழியாகக் காதுகளைக் கைப்பற்றி மூளையோடு முடிச்சி போடும் வித்தை - கவியரங்கக் கவிதை.. அந்த நேரத்தில் நீங்கள் கைத்தட்டல் வாங்காவிட்டால் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பேச்சு போல அல்லது டெபாஸிட் இழந்த எலக்ஷன்வாதி போல.. எப்படியோ அதில் நான் தேர்ச்சி அடையத் தொடங்கினேன்.

ஆனா பாருங்க என்னவொரு மாற்றம் முரண்.. கல்கியில் தலைமைத் துணையாசிரியரா இருக்கும்போது எனக்கு அலுவலகத்தில் முகநூல் பயன்படுத்த அனுமதி (அதை வாங்கியது சுவாரஸ்யமான தனிக்கதை). சிலர் சாட்டில் கவிதை அனுப்பிக் கருத்து கேட்பர் அல்லது கல்கியில் இதைப் பிரசுரிக்க முடியுமா என்று கேட்பர்.

அவர்களில் பெரும்பாலோர்க்கு நான் காட்டிய வழி இப்படித்தான். `தோ.. பாருங்க. கவிதையில் இந்த எதுகை மோனை வரவே கூடாது. ரிதம் கவிதையில் இருக்கக்கூடாது. போல, ஆகவே, எனவே என்ற மூன்று சொல் கட்டாயம் வரக்கூடாது. இதனால் அறிவிப்பது யாதெனில் என்பது போல அறிவுரை டோனில் சொல்லக்கூடாது. வாசகன் முட்டாள் இல்ல உன் அறிவுரையைக் கேட்க அல்லது நீ அவ்வளவு பெரிய அப்பாடக்கர் இல்லை அறிவுரை சொல்ல. இதெல்லாம் வானம்பாடி கால ஸ்டைல். உன்னுடைய உணர்வுகளை எழுதுங்க. இப்போ உங்க கவிதையை நான் சொன்னபடி இந்த விதியை பாலோ பண்ணி எடிட் பண்ணி மறுபடி அனுப்புங்க` என்பேன். அப்படி மாற்றி வந்த கவிதையைக் கல்கியில் அச்சிட வைத்தேன். போட்டோவுடன் கவிஞர் எனக் கொண்டாடினோம். மறுத்தவர்களை நான் கண்டுக்கல. இந்தப் போக்கு கவியரங்கக் கவிதைக்கு எதிரானது. அங்கிருந்து வந்த நான் அந்த விதிகளுக்கு எதிராக இருந்தேன் அல்லது மாறினேன்.

கவிதைப் பயணத்தில் நான் உரித்துக்கொண்ட சட்டையில் இதுவும் ஒன்று. சரி இந்தத் தொடருக்கு ஏன் சட்டையை உரித்துக்கொள்ளும் பாம்பு என்று பெயரிட்டேன்.. நீட்சேவின் பிரபலமான மேற்கோள் - சட்டையை உரித்துக்கொள்ளாத பாம்பு செத்து மடியும். மாற்றத்தை உள்வாங்க மறுக்கும் சமூகமும் அப்படியே- என்பது. எனவேதான் எனது மாற்றங்களையும் இலக்கிய உலகில் நிலவிய இசங்கள் குறித்தான மாற்றங்களையும் சொல்ல இந்தத் தலைப்பு வைத்தேன். விரும்பினால் நீங்களும் சட்டையை உரித்துக்கொள்ளலாம்.

95களில் எனது கவியரங்க வாசிப்பு மேடைப்பேச்சு களைகட்டத் தொடங்கியது எனலாம். கவிப்பேரரசு அருமையார் நடத்திய தாய்மண் இலக்கியக் கழகத்தின் மூலமாகத்தான் நான் கவியரங்க மேடையில் கால் பதித்தேன்.

கவிப்பேரரசு அருமையார் என்று சொன்னவுடன் சட்டென்று உங்களுக்கு வைரமுத்துவைத் தாண்டி இது யார் கவிப்பேரரசு என்று எண்ணம் வந்திருக்கக் கூடும். ஆம் நண்பர்களே, ஒருமுறை அருமையாரிடம் இந்த அடைமொழி குறித்துக் கேட்டபோது அவர் சொன்னார், `இங்கு கவிதை வாசிக்கும் ஒவ்வொருவரும் அரசர்கள்தான். நான் உருவாக்கிய அரசர்கள், நான் உற்சாகப்படுத்தும் அரசர்கள், நான் கொண்டாடும் அரசர்கள் எல்லாம் மேடையில் கவிதை வாசிக்கும் கவிஞர்கள்தான். இத்தனைப் பெரிய அரசர்களைக் கொண்டு இந்த இலக்கியக் கழகத்தை நான் நடத்துவதால் நான் அரசர்களின் அரசன் பேரரசன். நீங்கள் கவியரசர்கள் நான் கவிப்பேரரசன்` என்று பதில் அளித்தார். 95களில் அந்தப் பதில் எங்களுக்குப் போதுமானதாக இருந்தது.

அதன் தொடர்ச்சியாகத்தான் சுரதா, மு.மேத்தா, வலம்புரி ஜான், அப்துல் ரகுமான் ஆகியோருடைய தலைமையில் கவியரங்கக் கவிதையை வாசிக்கத் தொடங்கினேன் அல்லது கவியரங்க மேடையில் வலம் வந்தேன். எனக்குக் கைத்தட்டலைப் பெறும் மொழி லாவகமும் உணர்ச்சியைத் தூண்டி சபாஷ் வாங்கும் சொல் ஜாலமும் தினத்தந்தியைக் கூட கவிதை போல வாசித்துவிடும் குரல் பயிற்சியும்

பலமாகி இருந்ததால் நான் கவியரங்க மேடைகளில் விஸ்தாரமாகப் பவனி வந்தேன்.

98களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை புளியந்தோப்பில் நடந்த கவியரங்கத்தில் நான் கவிதை வாசிக்கத் தொடங்கினேன். நன்றாக நினைவிருக்கிறது சில வரிகளுக்கு மீண்டும் மீண்டும் வாசிக்கச் சொல்லிக் கைதட்டல் வாங்கியது.

**சிராய்ப்பு ஒருபோதும் வடுக்களாகாது**
**வகுடின் அழுத்தத்தால்**
**தலை வழுக்கையாய்ப் போகாது**
**சூடு இல்லை என்றால்**
**சூரியனில் கூட**
**சுவரொட்டி ஒட்டுவார்கள்**
**தவணை முறையில்**
**உன் தண்டுவடத்தை**
**வளைப்பவர்கள்.**
**சோம்பலாய்த் தேங்கிய**
**குட்டை நீரில்**
**எருமைக்கருவும் கலக்கிட**
**ஆசைக்கொள்ளும்**
**எதிர்படுபவைகளை இழுத்து**
**நதியாக ஓடு**
**நானெனும் திமிரோடு...**

- என்பதான வரிகளின் மூலம் கைத்தட்டலை மீண்டும் மீண்டும் பெற்றேன். மேடை இறங்கியபோது கவிஞர் அண்ணன் நிமோஷினி மூலமாகச் செந்தூரம் ஜெகதீஷை முதன்முறையாகச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது அந்த மேடையில்தான். செந்தூரம் ஜெகதீஷ்தான் `இந்தக் கவியரங்கக் கவிதைக்கான கைதட்டல் நிலையான புகழ் அல்ல. ஒரு கட்டத்தில் நீங்கள் தேங்கிப்போவீர்கள். இது உங்கள் வளர்ச்சிக்குத் தடையாக மாறிவிடும். இதில் கிடைக்கக்கூடிய விருதுகள், கைத்தட்டல், புகழ் ஒரு மாயை. அசலான கவிதை வேறு, உங்கள் இருப்புக்கான இலக்கியம் வேறு` என்று என்னைத் திசை மாற்றியவர். `இன்றைய இலக்கிய உலகம் எதைக் கவிதையாகக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.. நீங்கள் எந்த இடத்தில் இப்போது இருக்கிறீர்கள் என்பதைப் பற்றி எல்லாம் புரிந்துகொள்ள



இதுதான் சரியான நேரம்` என்று அவர் வீட்டுக்கு அழைத்து வந்து நவீன இலக்கிய நூல்களை எல்லாம் வாசிக்கக் கொடுத்தார். அந்த வாசிப்புதான் என் தலைகீழ் மாற்றத்துக்கு வழி வகுத்தது என்று சொல்லலாம். அப்படி கவியரங்கக் கவிதையில் கவிதை வாசித்துக் கைதட்டல் பெற்றுக் கவியருவி, கவிச்சுடர், கவிமாமணி, கவிப்போராளி போன்ற விருதுகள் வாங்கிய பின்பே (சிரிக்காதீங்க) நான் நவீன கவிதை வெளிக்கு வந்தேன். இப்போ அந்த அடைமொழி அடையாளங்களை வீட்டில் வைக்கக்கூட கூச்சம். பரணில் இருக்கு.

கவியரங்கக் கவிதைகளை வாசித்துக்கொண்டிருந்த நான் சட்டென நவீன கவிதை வெளிக்கு அல்லது நவீன இலக்கிய வெளிக்குப் பாய்ந்தேன் என்று சொல்லலாம். நான் வாசித்த முதல் புத்தகம் நீட்சே எழுதிய கடவுள் இறந்துவிட்டார் என்ற நூலும் பிச்சுமணி

கைவல்யம் எழுதிய கவிதை பற்றி என்கின்ற ஒரு நூலும்தான் நவீன இலக்கிய வெளிக்கு என்னைத் திரும்பிப் பார்க்க வைத்தன என்று சொல்லலாம்.

அதற்குப் பிறகு அடுத்தடுத்து தேவதேவன், தேவதச்சன், ரமேஷ் பிரேம் இப்படியான நவீன கவிஞர்களுடைய படைப்பும் சந்ரு மாஸ்டரின் பழக்கமும் அவர் மூலம் வந்த கலை குறித்தான புரிதலும் என்னை முற்றிலுமாகப் புரட்டிப் போட்டுவிட்டது என்று சொல்லலாம்.



அதற்குப் பிறகான சந்தர்ப்பங்களில்தான் எழுத்தாளர் என் ஆசான் ஜெயமோகனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சென்னைக்கு அவர் வரும்போதெல்லாம் அவரைச் சந்தித்து இலக்கியம் பேசுவது வழக்கம். நான் பேசுவது என்றா சொன்னேன். இல்லை இலக்கியம் சார்பா ஒரு கேள்வி கேட்டா அதற்குப் பதிலாக அரை மணி பேசுவார். நாங்கள் கேட்போம். அந்த அரைமணி நேரப் பதிலில் சந்தேகங்களும் உப கேள்விகளும் வரும். அதை மனதில் குறித்துக்கொண்டு அடுத்த முறை அவரை மடக்க ஆயத்தமாக வருவேன். நான் தொடங்குவதற்கு முன்பாகவே என் எல்லா உப கேள்வி சந்தேகத்துக்கும் பதில் தருவது போல் பேசத் தொடங்குவார்... ஆக ஒவ்வொரு முறையும் அவர் பேசுவார், நாங்கள் கேட்போம். அந்த அபரிமிதமான அறிதல்தான் ஞானம்தான் அவர் நண்பர் என்றாலும் ஆசானாகவே மதிக்கவைக்கிறது.

அதன் தொடர்ச்சியாகவே எனது அமிர்தம் என்ற சிற்றிதழ் தொடர்பாக ஞானக்கூத்தன் சந்திப்பு கவிதாசரண் சந்திப்பு அழகிய சிங்கர் சந்திப்பு தேவதேவன் சந்திப்பு பிரம்மராஜன் சந்திப்பு என்பதாக ஒரு நேரடிப் பயிற்சிப் பயணம் தொடங்கியது என்று சொல்லலாம்.


இந்த நவீன கவிதை வாசிப்பு, அது தந்த அனுபவம், அது தந்த ஒரு பெரும் மாற்றம், அது கற்றுக் கொடுத்த வாழ்க்கையை அணுகும் முறைகள், எழுத்தில் எதையெல்லாம் பதிவு செய்யலாம், எப்படியான யுக்தியில் பதிவு செய்யலாம், நவீன கவிதைக்கான அடிப்படை என்ன.. இவையெல்லாம் மெல்ல மெல்லப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன்.

சரிப்பா இந்தக் கவியரங்கக் கவிதைகள் எந்த இஸத்தில் வரும்? நேச்சுரலிஸம், ரியலிஸம், சர் ரியலிஸம், மாடனிஸம், போஸ்ட் மாடனிஸம், ஸ்டெச்சரலிஸம், மேஜிக்கல் ரியலிசம், இமேஜிஸம், எக்ஸிஸ்டென்ஷியலிஸம், சிம்பலிஸம், எக்ஸ்பிரஷனிஸம்.. இதுல எதுல வரும்?

இவ்வளவு இஸங்கள் இருக்கா? அம்மாடியோவ்.. இலக்கியத்தில் சிம்மாசனமிட இதெல்லாம் தெரிந்து இருக்கணுமா என்ன? மேலே நான் வாசித்த கவியரங்கக் கவிதையில் சூரியனில் போஸ்டர் ஒட்டுவது என்ற கற்பனை மேஜிக்கல் ரியலிசத்தில் வருமா? எருமைக் கன்று கலக்கிட ஆசை கொள்ளும்னு சொல்லல எருமை வயிற்றில் இருக்கும் எருமைக் கருவும் குளத்தைக் கலக்க ஆசைப்படும் என்றேன். இந்தப் புனைவை எந்த இஸத்தில் வைப்பது.. சர் ரியலிசமா? வகிடு என்பது முடியுள்ள தலைப்பகுதியில் நாம் போடும் ஒற்றையடிப் பாதைபோல.. அது எப்படி தலையையே அழுத்தும். அப்படி அழுத்தி.. வகிடின் அழுத்தத்தால் தலை வழுக்கையாய்ப் போகாது. அப்படி என்றால் அது உண்மைதானே.. ரியல்தானே.. அப்போ அது ரியலிஸமா? இப்படியெல்லாம் வாதம் – விவாதம் அமைந்தா தொடரின் பாதை சரியா வராது. என்னைக் கேள்வி கேட்காதே பதில் தெரியாது. நான் சொல்வதில் தப்புன்னு தோணுச்சின்னா தனியா ஒரு கட்டுரை தாக்கி எழுது. சரியா? நல்ல தமிழ் வளமும் கற்பனை வளமும் கொண்ட கவியரங்கக் கவிதைகளில் எல்லா இஸங்களும் வரும். அது இஸங்களுக்கு அப்பாற்பட்டதும் கூட. இந்தக் கவிதை மொழியை வேறு எந்தக் கவிதை வடிவத்துடனும் ஒப்பிடக்கூடாது. அது அம்மாவின் தாலாட்டு போல. அதை ஆராயக்கூடாது. அதன் தேவை வேறு. இந்த அறிதல் இருந்தா போதும். சரி அறிதல் என்றால் என்ன?

- அடுத்த சட்டையை உரிக்கும் ■

ஆதிரன்



# வானவில் வண்ண மின்னல்

## மதம்

*“Teach a child what is wise, that is morality. Teach him what is wise and beautiful, that is religion!” - Thomas Huxley, biologist*

*“Religion is the sigh of the oppressed creature, the sentiment of a heartless world and the soul of soulless conditions. it is the opium of the people” - karl marx.*

மதம் என்பது ஒரு மனித / சமுதாயக் கூட்டுச் செயல்பாடு. அது சமூகத்தையும் தனிமனித இருப்பையும் இணைக்கவும் அதன் உறவுமுறைமையைப் புரிந்துகொள்ளும் அமைப்பை நிர்வகிப்பதற்குமான ஒருவகை வணிக முறையாய் இருக்கிறது. உலகளவில் மதம், கடவுள் என்கிற நிகழ்வுப்போக்கை (*phenomina*) அதனின் அலகாய்க் கொண்டிருக்கிறது. ஆக, கடவுள் என்கிற பண்டத்தின் அடிப்படையில் மதம் மூன்று நிலைகளில் சமூகத்திலும் தனிமனிதப் புரிதலிலும் செயல்படுகிறது. ஒன்று கடவுள் இருக்கிறார், இரண்டாவது கடவுள் இல்லை, மூன்றாவது கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று தெரியாது. உலகின் அனைத்து மதங்களும் இந்த மூன்று சிக்கல்களின் ஊடாகச் செயல்படுகின்றன எனலாம். இதனடிப்படையில்தான் உலகம் முழுவதிலும் பல்வேறு விதமான உணர்வுகளுடன் பலவகைப்பட்ட மதங்கள் செயல்படுகின்றன.

இதுவரையில் உலகம் முழுவதும் நிறைய மதங்கள் உருவாகியிருக்கின்றன, நிலைத்திருக்கின்றன, அழிந்தும் இருக்கின்றன. உலக மதங்களில் அதிகம் உருவான மதங்களின்

வரலாறு இந்தியாவிற்கே இருக்கிறது என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. அதே நேரம், மதம் என்கிற செயல்பாட்டு இயக்கம் ஆதித்தமிழர் வரலாற்றில் இல்லை. தமிழரின் சமூகச் செயல்பாடு முழுவதும் நிலம் மற்றும் வேளாண்மை அடிப்படையிலான பொருள் முதல் வாதம் ஆகும். இங்கு மதம் என்கிற உணர்வே இல்லாத நிலையில் மொழியை மட்டுமே சிந்தித்த ஒரு பேரியக்கம் தமிழர்களுடையது. அதைப் பற்றித் தனியாகப் படிக்க வேண்டும். மதம் பற்றிய இந்தச் சிறு அறிமுகக் குறிப்பிற்குள் இது வராது.

நிற்க, மதம் என்கிற ஒரு செயல்பாட்டை அறிவியல்பூர்வமாக உலகளாவிய அறிஞர்கள் எவ்வாறு விளக்குகிறார்கள் என்பதைச் சொல்வதன் மூலம் நாம் மதத்தை முடிந்தளவுக்கு எவ்விதமான சார்புமற்ற உணர்வில் எப்படி புரிந்துகொள்கிறோம் என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒரு வாதத்திற்கு மதத்திலிருந்து கடவுள் என்கிற விடயத்தை எடுத்துவிட்டால் மதத்தின் அடிப்படை என்பது என்ன என்கிற கேள்வியிலிருந்து தொடங்கலாம். கடவுள் இல்லை என்று சொல்பவர்களுக்கு மதம் பற்றிய அக்கறை இல்லை என்பது தெளிவு. அப்படியான நிலையில் நாத்திகவாதிகள் கடவுளே இல்லை பிறகு மதம் என்கிற ஒரு விடயம் எதற்கு என்று சொல்வதன் மூலம் இந்த வாதத்தை முடித்துவிடுவார்கள். ஆனால் நாஸ்திகர்களுக்கும் குழப்பவாதிகளுக்கும் அதாவது கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்குப் பதில் தெரியாதவர்களுக்கும் மதம் என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

மக்களுக்கு ஏன் மதம் தேவையாக இருக்கிறது என்று கேட்டால் உண்மையில் அதுவொரு தவறான கேள்வியாக இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் மதம் என்கிற உணர்வு மனிதர்களிடையே நம்பிக்கை என்ற பெயரில் உருவேற்றப்பட்டிருக்கிறது. உற்றுக் கவனித்தால் அந்த மத அடிப்படையிலான கடவுள் நம்பிக்கையை இழந்துவிட்டால் வெகுசனங்களின் அன்றாட வாழ்வு செயலிழந்து போகிறதை நாம் பார்க்கலாம் அல்லவா. அந்த நம்பிக்கையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள உலகின் அனைத்து மத நிறுவனங்களும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன என்பதே உண்மை என்கிறார்கள் சமூக அறிவியலாளர்கள்.

போலவே மதம் என்கிற விவாதம் எங்கிருந்து உருவாகிறது என்ற கேள்விக்கு அவர்கள் எப்படி பதிலளிக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்; இரண்டு தீவிரமான எதிரெதிர் உணர்வுகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளும்போது தமக்குள் புதுவிதமானதும் குழப்பமானதுமான தன்னுணர்வு ஒன்றைப் பெறுகின்றன. ஆதியில் மனிதர்களுக்கு இருந்த இயற்கையின்பாலான அறிவும் மனிதர் வேளாண்மைக் கண்டுபிடிப்புகளுக்குப் பின்னாக 'சும்மா' இருந்த காலத்தில் உண்டான தத்துவவிவாத அறிவிற்குமான எதிர்கொள்ளலில் உண்டான தவறுதான் *(mistake)* பின்னாட்களின் மதமாக உருவானது. மனித குலத்தைத் தனது இயற்கையின் அறிவிலிருந்து ஒரேவகையான மதம் என்கிற கருத்தை நம்பவைக்கும் ஒரு காலகட்டத்தை நோக்கி அதிகாரம் படைத்த அமைப்பு வெகுசனங்களை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றது. கடைசியாக அது எளிய மக்களை இறையாண்மை என்ற ஒரு சட்டத்திற்குள் *(frame)* அடைத்தது. ஒரு கட்டத்தில் எளிய மக்களைச் சிந்தனை செய்ய திராணியற்றவர்களாய் விதியையும் கடவுளையும் நம்பிச் செயல்படும் ஒரு சமுதாயத்தின் உறுப்பினராய் மட்டுமே வாழச் செய்துவிட்டது.

பழைய நிலவுடமைவாதமும் இன்றைய முதலாளித்துவமும் தனது சுரண்டல்தனத்தை மறைக்க மதத்தைக் கேடயமாக உபயோகிக்கின்றன என்கிறது பொருள் முதல் வாதம். கருத்து முதல் வாதம் இதனை மறுத்துக் கடவுளின் இருப்பை உறுதியாக நம்பவைக்க முயற்சித்து அதில் வெற்றி பெறுகிறது. இதில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பது அவரவர் சிந்தனைக்கு உட்பட்டது. கருத்து

முதல் வாதம், கடவுளை உணரவேண்டும் அதற்கு வெகுசனங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும், அந்த நம்பிக்கை மனிதர்கள் செய்யும் பாவத்திற்கும் அவர்களது சிரமங்களுக்கும் தீர்வைத் தரும் என்று போதிக்கிறது. அதற்கு மாற்றாக பொருள் முதல் வாதமோ, அனைத்து மத நிறுவனங்களும் நிலவுடமைவாதத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் கீழே வேலை செய்கிறது; அதற்கு அரசு அதிகாரிகளும் மதத் தலைவர்களும் வேலைக்காரர்களாக இருக்கிறார்கள்; அரசு அதிகாரப்பலத்திலும் பூசாரித்தனம் அனுசரணையான நிலையிலும் மக்களிடையே வேலை செய்கிறது என்பதை நம்புகிறது. போலவே இந்த இரண்டு வாதங்களைத் தவிர உலகில் மதம் பற்றி விவாதிக்கக்கூடிய வேறு வகை வாதங்கள் இல்லை என்பது புலப்படுகிறது.

இதனடிப்படையில் மதம் என்றால் என்ன என்ற கேள்விக்கு இரண்டு பதில்களை நாம் தெரிந்துகொள்ளலாம். ஒன்று மதம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒருவகை நிறுவனம். அதை நிர்வகிப்பவர்களைக் கொள்ளைகொள்ளையாக லாபம் அடையச் செய்ய உபயோகப்படும் சாதனம். இரண்டாவது, மதம் என்பது கடவுளுக்கான தொண்டு நிறுவனம். அதைக் கேள்வி கேட்க மக்களுக்கு உரிமை இல்லை. இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடையில் சமகாலச் சமூகம் அல்லாடிக்கொண்டிருக்கிறது.

அறிவியல் அடிப்படையில் மதம் எப்படிச் செயல்படுகிறது என்பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம். பொதுவாக மதத்தின் கூறுகள் ஐந்து வகை அடுக்குகளில் இயங்குகிறது. முதலாவதாக ஒரு மனிதனை நம்பிக்கைவாதியாக உருவாக்குவது. மனிதர்களிடையே, முக்கியமாக குழந்தைகளிடையே அவர்களின் மனத்தில் தனது சமூக அறத்தையும், ஒழுக்கத்தையும் தொடர்ந்து போதித்து தமக்குள் நம்பகத்தன்மையை உருவாக்கி தான் இந்தப் பெரும் சக்தியின் முழு அடிமையாக இருக்கிறேன் என்பதை உணரச்செய்வது. அதற்குப்பின் வளர்ச்சிப்போக்கில் வாழ்விற்கான சிந்தனையை முழுவதும் தனது மதத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் வைத்துக்கொள்வது. மதமே தனது வாழ்விற்கு முழுதான விடுதலை என்பதை முழுவதுமாக நம்பி, தன்னை ஒட்டுமொத்தமாக ஒப்படைத்துக்கொள்வது. அனைத்தும் விதியின் பயன் என்று நம்புவது.

முதலாவது அடுக்கில் இவ்வாறான ஒழுங்கமைவு பெரும்பாலும் பெற்றோர்களால் உருவாக்கப்படுகிறது. இரண்டாவது அடுக்கு சுயஅறிவு என்கிற வகையில் மதம் என்பதைத் தனது உள்ளுணர்வின் இயற்கையான வெளிப்பாடு என்பதை நம்பவைக்கிறது. மதத்தின் சட்டதிட்டங்களை மீறுவதின் விளைவுகளை உணரச் செய்வது. எடுத்துக்காட்டாக ஹிந்து மதம் பாவத்தின் தண்டனை மறுபிறப்பு என்கிறது. போலவே கிருத்துவம் பாவத்தின் தண்டனை மரணம் என்கிறது. இம்மாதிரியான கடும் சட்டதிட்டங்களும் ஒழுக்கங்களும் மதத்திற்கு மதம் மாறுபடுகிறது. என்றாலும் அவற்றின் அடிப்படை என்பது விதிகள் மீறக்கூடாது என்பதே. சாமி கண்ணைக் குத்தும் என்கிற உள்ளுணர்வு இன்றைக்கும் என்னுள் இருக்கிறது. மூன்றாவது அடுக்கு ஒரு மனிதனைத் தான் ஒரு மதவாதியாக அடையாளம் கொள்ளச் செய்வது. தனது வெளிப்படையான செயல்களாலும் உடை நேர்த்திகளாலும் மற்றும் பல்வேறு வகையான அடையாளச் சின்னங்களாலும் தன்னை இன்னார் என்று வெளிப்படையாகச் சமூகத் தளத்தில் காட்டிக்கொள்வதும் இந்த அடுக்கின் முக்கியச் செயல்பாடாகும். நான்காவதாக, தனது மதத்திற்கு ஆதரவாக எந்தவகையான வன்முறையிலும் ஈடுபடலாம் என்று மதங்களின் நிர்வாக அதிகாரம் போதிப்பது. ஐந்தாவதாக மதத்திற்காக எவ்வளவாகினும் சகித்துக்கொள்வது. அது மரணத்தைக் கூடவும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வதுமாக இருக்கிறது. புத்த பிச்சுகள் தம்மைத் தாமே எரித்துக்கொள்வதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

நான் படித்த வகையில் மதம் என்றால்

என்ன என்பதை மேற்சொன்ன இரண்டு வகைமைகளில் அடக்கிவிடுகிறார்கள். இதனடிப்படையில் ஆன்மீகம் என்றால் என்ன, இயற்கைக்கு மீறிய ஒன்று என்றால் என்ன, முடிவற்று விரிந்துகொண்டிருக்கும் இப்பிரபஞ்சத்தின் விளிம்புகள் நோக்கி அறிவியலாளர்கள் அனுப்பிக்கொண்டிருக்கும் செயற்கைக் கோள்களின் நோக்கம் என்ன போன்ற பல என்ன- கள் உண்டாவது இயல்பு.

அடுத்தபடியாக அறிவியல், பண்பாடு மற்றும் தத்துவம் ஆகிய மூன்றிற்கும் மதத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் என்ன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

முதலாவதாக அறிவியல்: அறிவியல் என்பது இயற்கையின் அமைப்பை விஞ்ஞானப்பூர்வமாக நேரடி அனுபவத்தின் மூலம் குறிப்பிட்ட வகை செயல்முறைகளின் விதிகளை உருவாக்கி அதனைச் சோதனை செய்வதன் விளைவாகக் கிடைக்கும் விடைகளின் மூலம் விளக்க முயல்கிறது. அறிவியல் விதிகள் தொடர் முயற்சியில் உண்மை நிலை ஒன்றைக் கண்முன்னால் நிறுத்துகிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளின் தன்மைகள் தற்காலிகமானது என்றாலும் அடிப்படை விதிகள் மாறாதது. அறிவியல் முறை பிரபஞ்சத்தின் ஒற்றைத் தன்மையை மறுக்கிறது. மாறாக மதத்தின் விதிகள் பூமி, சூரியன், கோள்கள் உள்ளிட்ட பிரபஞ்சத்தைக் கடவுள் என்கிற புள்ளியில் ஒற்றையாக இணைக்கிறது. இந்த விதியை மதம் வெறும் கருதுகோள்களின் அடிப்படையில் நம்பச் செய்கிறது.

இரண்டாவதாக பண்பாடு (culture). பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் புலன்களுக்கு அகப்படாத சொத்து ஆகும். அவை சமுதாயத்தின் நம்பிக்கைகள், மதிப்புகள், அறிவு, தொழில்நுட்பம் போன்ற பலவகைத் தன்மைகளுடன் உருவாகிறது. மிருகங்களுக்குக் கூட பண்பாடுகள் இருப்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கிறார்கள். ஆதி மனிதர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு மட்டுமான பண்பாட்டை, கலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். பின்பாக, தொழில்நுட்பம் என்கிற வகையில் பல்வேறு பண்பாடுகளை மனிதர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

உண்மையில் மனிதர்களின் பண்பாடு மதங்கள் உருவாவதற்கு முன்பே இருந்தது என்பது வெளிப்படை. பண்பாட்டிலிருந்து மதம் எவ்வகையில் வேறுபடுகிறது என்றால், மதம் சமூகத்தில் ஒழுக்கம் மற்றும் அறம் ஆகியவற்றை விதிகளாகச் சமைத்து அவற்றினைச் சமூக வெளியில் செயல்படுத்துவது மூலம் மனிதகுல நல்வாழ்வை நிறுவ முயல்கிறது. மதம் தன்னைப் பண்பாட்டின் ஒரு அங்கமாக முன்னிறுத்துகிறது. அவ்வளவே.

மூன்றாவதாக தத்துவமும் மதமும் எவ்வாறு வேறுபடுகிறது என மிகச் சுருக்கமாகப் பார்க்கலாம். மதம் ஆன்மீகத் தன்மையாலானது. பிரபஞ்சத்தைக் கடவுள் அல்லது ஆன்மா என்கிற வகைமைக்குள் ஒற்றையாக அடக்கிவிடுகிறது. தத்துவம் இதே ஒற்றைத் தன்மையாக்கத்தைச் சமூகஅறிவியல் அடிப்படையிலான உரையாடல்கள் (dialectics) மூலம் - கடவுளை நிராகரித்து – நிறுவ முயல்கிறது. முடிவாக மதத்தின் அகக்கூறுகளின் செயல்பாடுகள் எவற்றாலானது என்பதைக் கூறி முடித்துக்கொள்ளலாம்.

மதம்: 01. இயற்கையின் பொதுவான உணர்வுகளைத் தனிமனிதன் எவ்வாறு புரிந்துகொள்கிறான் என்பதை வரையறை செய்கிறது. 02. மனிதர்களின் கனவுகளை ஆராய்வதாகக் கூறிக்கொண்டு அவற்றின் பலன்களை முன் தீர்மானமாகச் சொல்கிறது. 03. மனிதர்களின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்துகிறது. 04. மற்ற மதங்களை ஒப்புமை செய்து தம்மை முதன்மைப்படுத்துகிறது. 05. இயற்கையின் வரம்புக்கு மீறிய தெய்வீக அதிசயங்களை (mystical) நம்பச் செய்கிறது. மதம் பற்றிய இந்தச் சிறிய அறிமுகம் சமூக அறிவியல் அடிப்படையிலானது. மற்றபடி மதத்தின் தேர்வு அவரவர் உரிமை. நன்று.

## இரவின் பிறப்பும் இறப்பும்

கடந்த கால நினைவற்ற
அரும்பொழுது இது.
உயிரைச் சிலிர்க்கும் ஏகாந்தம்.
தன்னைத்தான் சுமந்து
திசையெல்லாம் பயணம்.
துக்கம் எதுவுமில்லை.
சுவாசம் அறியாமல்
சிறு வலி தெரியாமல்
கண்கள் மூடி
தன்னளவில் யாக்கை
காதல்கொள்ளும்
இந்நேரத்தை
உறக்கம் என்பீர்கள் நீங்கள்.
வாழ்க்கை என்பேன் நான்.

**- யாழ் தண்விகா**

## மலை உச்சியை அடைதல்

இரண்டு நாட்களாக
அந்த மலை உச்சியை
அடைய வேண்டுமென
மலையின் சில பகுதிகளை
சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறேன்
மலை உச்சியை அடைவது
மிக வலிமையான பணி என
விபரிக்கத் தொடங்கின
அங்கு செலவளித்த பொழுதுகள்
ஆதலால் அங்கு
சுற்றித் திரிந்த காற்றிடம்
மலை உச்சியை அடைவதற்கான
யோசனையை
கேட்டுக்கொண்டேன்
முன்பொருகாலத்தில்
ஒருவன் மலை ஏறிய கதையை
அது விபரித்தது
இடையில்
சிறிது மழை பெய்யத் தொடங்கியதும்
காற்று வீடு திரும்பிவிட்டது
நானும்தான்.

**- ஏ.நஸ்புள்ளாஹ்**

**எ**ன் கவிதையின் முதல்வரிக்கு
அவளின் இசையளித்த
பச்சை வனமே
பாதை

அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான்
வந்தேன்.

ஒரு வனப் பயணம்
போகிறேன்.

அவள் வருவாள்

நதியோடு உறவாடுவேன்
பூக்களை ஏந்துவேன்
பறவைகளின் மொழிகளைப் பேசி
பறந்து திரிவேன்

வண்ணத்துப்பூச்சி
பறக்கும் உணர்வில்
சொற்களை
தமிழில் சொல்லிப் பார்ப்பேன்

மலையிலிருந்து
சிறுபாதையில்
காயமின்றி ஓடி விழுவேன்

என் ஒருநாளை அள்ளி
மலை மீது
இழுத்து வந்த நகரத்தின் மூச்சை
பரிசோதிப்பேன்

அவளே மேகங்கள்
அதில் மலைபோல
ஒளிந்துகொள்வேன்

அவள் பிரிவாள்
அழுகின்ற சிறு மழை வரும்

அவள் போகட்டும்
என் நிஜங்களிலிருந்து
என்றோ போய்விட்டவள்.

**- குமரன்விஜி** ■

சிறுகதை

ஆண்டன்பெனி



# மனைவிக்கு ஒரு காதல் கடிதம்

நீண்ட காலமாகவே மனைவிக்கு ஒரு காதல் கடிதம் எழுதிவிட ஆசை. இதுபற்றி மனைவியிடம் சொன்னபோது, 'காதல் கடிதம் எழுத காதல் இருக்கணுமே' என்றாள். அவளின் வாழ்க்கையும், அவளைச் சுற்றிய வாழ்க்கையும் அதற்கு சாட்சிகளாக இருக்கின்றன. இதையே இன்னொரு சந்தர்ப்பத்தில் சொன்னபோது, 'எழுதுறது இருக்கட்டும்.... முதல்ல அந்தக் காதலைச் செயலில் காட்டுங்க' என்றாள். இப்படியாக, காதல் கடிதம் எழுதும் என்னுடைய ஆசை தள்ளிக்கொண்டே போனது. இன்று எப்படியாவது எழுதிவிட வேண்டும் என்றிருக்கிறேன். அதற்கு வசதியாக அவளும் வீட்டில் இல்லை. பிள்ளைங்களோடு ஊருக்குச் சென்றிருக்கிறாள்.

இல்லாத ஒன்றைத் தேடி மனது அலையும். அவளின் இன்மையை முதன்முதலாக ஒரு வலியாக மனதுக்குள் உணர முயற்சிக்கிறேன். "தண்ணி கொண்டுவா... கண்ணாடிய எடு... ஏசி ரிமோட் எங்கே... கதவைச் சாத்திட்டியா... ஏசி ஓடும்போது, ஃபேனை போடாதேன்னு எத்தனை முறை சொல்றது.... காலையில நாலு மணிக்கு அலாரம் வைக்கச் சொன்னேனே வச்சிட்டியா...." இப்படியான ஏவல்கள் அனைத்திற்கும் "இதோ... இங்கே... சரிங்க... இந்தாங்க..." என்கிறவள் இல்லாத வீடு இதற்குமுன் வெறுமையாகத் தெரிந்ததில்லை. அவளின் வெற்றிடத்தை இந்தக் காதல் கடிதத்திற்காக வெறுமையாக உணர்கிறேன்.

இதற்கு முன்னும் இப்படி ஊருக்குச் சென்றிருக்கிறாள், அப்படியொரு தருணத்திற்காகக் காத்திருப்பேன். "எப்பப்பாரு மொபைல்... ராத்திரி பத்து மணிக்கு மேல எதுக்கு பிரண்ட்ஸ்கிட்ட போன்ல பேசணும்... ஆபீஸ் போனா வீட்டு நினைப்பு வர்றதில்ல, வீட்டுல இருந்தாலும்

வீட்டு நினைப்பு இருக்கிறதில்ல, என்ன ஜென்மமோ... படுத்ததும் குறட்டை விடுறது... நான் ராத்திரி முழுக்க புருசனுக்குப் பதிலா விட்டத்தைத்தானே பாத்துக்கிட்டுக் கெடக்கேன்... பிள்ளைங்களுக்கு ஒதுக்குற நேரத்துல கால்வாசி பொண்டாட்டிக்கு ஒதுக்கலாமே...'' இப்படி எதுவுமில்லாத ஒரு அமைதியான வீடு கிடைப்பதில் உண்மையில் நான் மகிழ்ச்சியில் இருக்கவேண்டும். அதுவும் இப்படியொரு அமைதி வெகுநாட்களுக்குப் பிறகு கிடைத்திருக்கிறது, இந்த நாளையும் அவள் நினைப்பில் ஏன் வீணாக்க வேண்டுமென்று ஒரு கணவனாக எனக்கும் தோன்றியது. நினைவில் இருக்கும் காதல் கடிதத்தை எழுத இப்படியொருநாள் இனியெப்போதும் கிடைக்காது என்றுணர்ந்த அந்த நொடியில், மனதுக்குள் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த காதல் கடிதத்தை எழுதிவிட நினைத்தேன்.

எப்படித் தொடங்கி எப்படி முடிப்பது என்பதில் மனதுக்குள் ஒரு போராட்டம் ஆரம்பமானது. கடிதம் எழுதுவது ஒன்றும் எனக்குப் பெரிய பிரச்சனையில்லை, பள்ளியில் படித்த காலத்திலேயே நிறையக் கடிதம் எழுதியிருக்கிறேன். வெளியூரில் இருக்கும் கணவன்மார்களுக்கு ஊரில் இருக்கும் மனைவிகள் எழுதிய கடிதங்கள் எல்லாமே நான் எழுதியவையே. கடிதங்களை வாசிக்கவும் என்னையே தேடுவார்கள். எனக்கு முன்பாக இந்த வேலையைச் செய்துகொண்டிருந்த ரங்கநாதனும், சீனிவாசனும் அந்தக் கடிதங்களில் இருக்கும் கணவன் மனைவி ரகசியங்களை வெளியில் அவுத்துவிட்டதால் ஊரில் இருந்தவர்கள் என்னையே நம்பினார்கள். அம்மை கேட்டால்கூட கடிதத்தில் இருக்கும் விசயங்களைச் சொன்னதில்லை.

அதுதவிர எனக்கென்று இரண்டு காதல் கடிதங்கள் எழுதிய அனுபவமும் இருக்கிறது. முதல் காதல் கடிதம், நான் பத்தாம் வகுப்புப் படிக்கும்போது மஞ்சுவுக்கு எழுதினது. அப்போது அவள் ஒன்பதாம் வகுப்பு. நான் கொடுத்ததும் பயத்தில் பிராக்டிகல் ரெக்கார்டு நோட்டுக்குள் வைத்தவள், பதட்டத்தில் அப்படியே வரிசையில் ஆசிரியர் டேபிளில் வைத்துவிட, அதையும் சேர்த்துத் திருத்திய மகாலிங்கம் சார்... பிராக்டிகல் நோட்டை மஞ்சுவிடமும், கடிதத்தை அவளின் அப்பாவிடமும் சேர்த்துவிட்டார். "காதலுடன் நானே'' என்று முடித்தவன், கடைசியாக என் பெயரை எழுதத் தோன்றாததால் விட்டுவிட்டேன். அடுத்த நாள் முகம் வீங்கியபடி வகுப்புக்கு வந்தாள் மஞ்சு... அவளுக்கும் என்னைப் பிடித்திருக்கிறது, அதனாலே என்னைக் காட்டிக்கொடுக்கவில்லை. பெயர் இல்லாததால் நானும் தப்பித்திருந்தேன். முகவீக்கம் வற்றிய நாளில் என் காதலும் இல்லாமல் போயிருந்தது. அதன்பிறகு மஞ்சுவைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டார்கள்.

கல்லூரியில் எழுதிய இரண்டாவது காதல் கடிதத்திலும் என் பெயரை எழுதவில்லை. முதல் காதல் கடிதத்தில் கிடைத்த அனுபவம் அப்படி எழுத வைத்தது. "உன் பெயரை எழுதவே தைரியம் இல்லை... உன்னை நம்பி எப்படி? நீ எனக்கு செட்டாக மாட்ட'' எனக் கடிதம் கொடுத்த ஒரு மணி நேரத்தில் லைப்ரரி வாசலில் வைத்துச் சொல்லிவிட்டுப் போன காயத்திரி, பெயர் எழுதிக் கடிதம் கொடுத்த மேத்ஸ் டிபார்ட்மெண்ட் சிவாவைக் காதலித்து, இறுதியாண்டு முடிக்கும் முன்பே, யாரோ ஜெகதீசைக் கல்யாணம் கட்டிக்கொண்டு போய்விட்டாள்.

அதன்பிறகு இருந்த வாழ்க்கை, காதல் கடிதம் எழுத அனுமதிக்கவில்லை. ஆனாலும் ஒரு காதல் கடிதம் எழுதி யாரிடமாவது சேர்த்துவிட வேண்டும் என்கிற எண்ணம் மட்டும் அப்படியே இருந்தது. திருமணத்திற்கு முன்பான காதல் எல்லாமே கடந்துபோக, இந்தக் காதல் கடித ஆசையை மனைவி பக்கம் திருப்பிவிட வேண்டியதாகிவிட்டது. எனக்குள் இருக்கும் வார்த்தையில் சொல்லிவிட முடியாத அன்பைக் கடிதத்தில் சொல்லிவிட முடியும்.

மாலை நேரமும், முன்னிரவும் காதல் கடிதம் எழுத உகந்த நேரமாக முன்னோர்கள் முடிவுசெய்திருந்தது உண்மைதான் போலிருக்கு. பூமிப் பந்தே இந்த நேரங்களில் இலகுவாக இருக்கிறது. மனதுக்குள்ளும்

அப்படியொரு வாஞ்சை வந்து சேர்கிறது. காதல் கசிந்துருகும் முன்னிரவில் சன்னல் திரைச் சீலையை அசைத்தபடி உள்ளே வரும் காற்று, உறங்கிக்கொண்டிருக்கும் மனைவிபோல் இதமாக இருந்தது. "கூடவே இரு போதும்" என்பதே மனைவி மீதான காதலின் அதிகபட்ச எதிர்பார்ப்பாக இருக்கிறது.

கூடவே இருப்பது போர்க்களத்தில் நிற்பதற்குச் சமமானது என்பது சராசரி கணவர்களின் நம்பிக்கை. நானும் உணர்ந்திருக்கிறேன். என்ன கேட்பாளோ, என்ன சொல்வாளோ, என ஒவ்வொரு வார்த்தையையும் தோட்டாக்களாக எதிர்கொள்ளும் மனநிலையில் காதல் கடிதம் எழுதமுடியவில்லை. காதலுக்கு இருப்பதும் இல்லாததுமான மனநிலை தேவைப்பட்டது. அது இன்று வாய்த்திருக்கிறது. மானே, தேனே, பொன்மானே தாண்டி எதையாவது எழுதிவிட இந்தத் தனிமை எனக்கு உதவக்கூடும்.

மாலை அலுவலகத்திலிருந்து திரும்பி கதவைத் திறந்த அந்த நொடி, அவள் இல்லாதபோதும், விட்டுச் சென்ற அவளின் வாசனை, முகத்தில் பட்டதும் காதல் கடிதத்திற்கான முதல் வரி கிடைத்துவிட்டது. இனி எந்தத் தயக்கமுமின்றி எழுதிவிட முடியும். வழக்கத்துக்கு மாறாக நலம் விசாரிக்க போன் செய்திருக்கக்கூடாது. குழந்தைகளிடம் பேசிய பிறகு, அவளுக்கான நேரத்தை, "எடுத்த பொருளை எடுத்த இடத்துல வைக்கணும், வீட்டுக்குள் நடக்கும்போது தரையில் கால்கள் எந்த அழுத்தத்தில் படவேண்டும்" வரை கொடுத்த ஆலோசனைகள் மற்றும் அன்பதிகாரங்களே கடிதம் எழுதவிடாமல் இதையெல்லாம் யோசிக்க வைத்திருக்கிறது. மனைவிக்கு நாலு பக்கம் காதல் கடிதம் எழுதுவதற்கே இப்படித் தயாராக வேண்டியிருக்கிறது. எழுதிய பின்னர் அதை எப்படி உதாசீனப்படுத்துவாள் என்பதை இப்போதே நினைத்துப் பார்த்தால் ஒரு பக்கம்கூட தாண்டமுடியாது.

ஒரு கணவன் மனைவியை உதாசீனப்படுத்துவதற்கும் மனைவி கணவனை உதாசீனப்படுத்துவதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. மனைவியின் உதாசீனம் வேறுவகையான அன்பின் வெளிப்பாடு. பக்தன் கடவுளிடம் கோபித்துக்கொள்வது மாதிரியானது. அல்லது அதை அன்பின் கவன ஈர்ப்பு என்றும் சொல்லலாம். எப்படியாவது அவன் தன்னைக் கவனிக்க வேண்டும் என்பதைத் தனக்கு இயல்பாக வரும் மொழியில் செய்கிறாள். வண்டிமாடுகளைக் காயப்படுத்தி இயக்குவதுபோல் இருக்கிறது மனைவிகளின் உதாசீனங்கள்.

நான் எழுதத் தொடங்கினேன். 'அன்புள்ள மனைவிக்கு' என்று தொடங்கினால், அந்த வார்த்தைகளை நம்புவாளா என்று தெரியவில்லை. இதே கடிதத்தைத் திருமணமாகி முதல் இரண்டு மாதங்களில் எழுதியிருந்தால் ஒருவேளை நம்பியிருக்கக்கூடும். ஒரு முழம் மல்லிகைப் பூவுக்கு நெனப்பில்ல.... லவ்வாமில்ல லவ்வு என்பாள்.

என் தலைமுறையில் தங்கள் மனைவியிடம் யாரும் காதலைச் சொன்னதாகத் தெரியவில்லை. அப்பாவிடம், 'அம்மாவுக்குக் காதல் கடிதம் எழுதியிருக்கிறீர்களா?' என்று கேட்டபோது "அவளுக்கு எதுக்கு எழுதணும்?" என்றார். ஒருவேளை அம்மாவைக் காதலித்துத் திருமணம் செய்திருந்தால்கூட இவர் காதல் கடிதம் எழுதியிருக்கமாட்டார். அவரின் வடிவமைப்பு அப்படி.

அப்பாவின் "நீ சாப்டியா?" என்ற விசாரிப்பே அம்மாவுக்கு ஆகச் சிறந்த காதல் கடிதமாக இருந்திருக்கும். அதையே நாள் முழுக்கச் சொல்லிக்கொண்டிருந்திருப்பாள். அது தெரிந்தும்கூட அப்பாவிடமிருந்து இன்னொரு "நீ சாப்டியா?" உடனே வந்திருக்காது. ஒரு அன்பான வார்த்தைக்கும் இன்னொரு அன்பான வார்த்தைக்கும் போதிய இடைவெளி இருக்கவேண்டும் என அப்பா நினைத்திருப்பார். இந்த வாழ்க்கையின் மிகப் பெரிய சவாலே மனைவியிடம் கணவன் தன் அன்பை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

"கணவனின் அன்பை எதிர்பார்த்தே, மனைவிகள் காலங்காலமாகக் காத்திருக்கோம், தலைமுறை தாண்டியும்கூட. அன்புன்னா உள்ளங்கையில வச்சித் தாங்கணும்னு இல்ல,

வெளியில போகும்போது, இல்லேன்னா வெளியிலேருந்து வரும்போது கையளவு தூரத்துல இருக்கிறவளை, அப்படியே இழுத்து நெஞ்சில் சாய்ச்சிக்கிட்டா போதும். தெனம்கூட வேண்டாம் வாரத்துல ஒருநாள்... இல்லேனா மாசத்துல மூணுநாள் போதும். பெத்த புள்ளை அத பார்க்கும்போதுனாலும் சரிதான். அத பார்த்தாவது அவனுக்கும் அறிவு வந்து அவன் பொண்டாட்டிய அப்படிச் சாச்சிக்கட்டும்...” ஒரு கடுமையான கோபத்தில் வெகு நிதானமாக என் மனைவி இதை என்னிடம் சொல்லியிருக்கிறாள். அந்த வார்த்தை என்னைத் தைத்திருக்க வேண்டும். ஒருவேளை அதற்காகத்தான் இந்தக் காதல் கடிதத்தை எழுத நினைக்கிறேனோ என்னவோ?

அப்பா சொன்னதுபோல் “அவளுக்கு ஏன் காதல் கடிதம் எழுதணும்?” என்று எனக்குச் சொல்லத் தோன்றவில்லை என்பதே, எனக்கே எனக்கான ஆறுதலாக இருக்கிறது. இப்போதே சேட்டன் பகத்தின் *‘Half a Girl friend’* நாவல் படித்துக்கொண்டிருக்கும் மகனுக்கு இப்படியான துயரம் இருக்கப் போவதில்லை. கொலின் ஹூவர் எழுதிய *It starts with us* மற்றும் *It end with us* நாவல்களைக் கேட்டிருப்பவனை ஒரு காதல் கடிதத்திற்காக மனைவிவரைக்கும் காத்திருப்பான் என்று நினைக்கத் தேவையில்லை. ஒருவேளை அவனுடைய காதல் கடிதத்தை என்னிடமே கொடுத்து ஆலோசனை கேட்கவும் வாய்ப்பிருக்கிறது. அதற்கு முன்பாக இந்தக் கடிதத்தை எழுதி முடித்துவிட நினைக்கிறேன்.

இந்தச் சமூகத்திற்கு, மனைவியைச் சார்ந்தே ஒருவனின் பெரும்பகுதி வாழ்க்கை இருக்கிறது என்பதை ஒளிவுமறைவின்றி எழுத வேண்டும். அதையும் தவிப்பும் தயக்கமுமாக, வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் என்னையும் என் காதலையும் அவளுக்குப் புரியும்படியாகக் காட்சிப்படுத்த வேண்டும். அதையும் அவள் நம்பும்படியாகச் செய்யவேண்டும். எனக்கும் துவக்கத்திலிருந்தே, மனைவி மீதான காதல் பற்றி நினைப்பதென்றாலே உடலும் மனதும் ஒருசேர ஒத்துழைப்பதில்லை. மனைவியைக் காதலிப்பது ஒரு பைத்தியக்காரத்தனம் என்ற பொதுநம்பிக்கையில் எனக்கும் உடன்பாடு இருந்தது. இப்போது மனதும் உடலும் ஒருசேர வந்திருக்கிறது.

அதற்குத் தகுந்தமாதிரி மனைவி பக்கத்தில் இருந்தால் உடனே வரும் உறக்கமும் தள்ளிப்போயிருக்கிறது. என் அன்பைச் சுமந்து அவளிடம் செல்ல வெள்ளைக் காகிதங்கள் படபடக்கின்றன. இல்லாத நாட்களில் அரூபமாக அருகில் இருப்பவள் இப்போதில்லை. காதலின் வார்த்தைகள் என்னைச் சுற்றிலும் வட்டமடித்தன. ஒவ்வொன்றாக எடுத்துக் கோர்க்கத் தொடங்கினேன்.

தூக்கத்திலிருந்து என்னை மனைவி எழுப்பியதில் தெரிந்தது, என் காதலிரவு கடந்துபோயிருந்த விபரம். அவள் என்னை எழுப்பிய வேகத்திலும், ஆவேசத்திலும் தெரிந்தது ஒரு பிரளயத்திற்கான எல்லா அறிகுறிகளும். என் மேசையில் அலங்கோலமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த காகிதங்களை அடுக்கினேன். “அன்புள்ள மனைவிக்கு” எனத் தொடங்கியிருந்த காகிதத்தைத் தவிர மற்ற எல்லாமும் இருந்தன. எல்லாவற்றையும் படித்திருக்கிறாள், முதல் தாள் இல்லாமல் அதை அவளுக்காக எழுதியதாக நிரூபிக்க முடியாது.

படுக்கையறை முழுக்கத் தேடுகிறேன். அகப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. “அன்புள்ள மனைவிக்கு” எழுதவில்லை என்றும், எழுதினேன் என்றும் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது மனது. மஞ்சுவிடம் கொடுத்த முதல் கடிதத்தின் இறுதியில் என் பெயரை எழுதவேண்டுமென்று தெரியவில்லை. காயத்திரியிடம் கொடுத்தபோது, மஞ்சுவின் அப்பா நினைவுக்கு வந்ததால் பெயரை எழுதாமல் தவிர்த்துவிட்டேன். இப்போது பெயரை எழுதியும், அவளுக்கானதென்று நிரூபிக்க முடியாத நிலையாகிவிட்டது. என் காதலுக்கென்று பெரிய ஆசையெதுவும் இருந்ததில்லை, ஒரேயொரு காதல் கடிதம் அதையும் உரியவரிடம் சேர்த்துவிட நினைத்தது, மனைவியிடம்கூட சாத்தியமில்லாமல் போகுமென்று நானும் நினைக்கவில்லை.

■

கவிஞர் ஏகாதசி




# மிஸ் யூ செல்லம்...

இன்றைய கலை இரசிகர்கள் பெரும் எதார்த்தத்தை விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள், கவித்துவத்தைக்கூட குறைவானவர்களே ரசிக்கிறார்கள். அதனால்தான் சிம்பு, தனுஷ், சிவகார்த்திகேயன் போன்ற நடிகர்கள் எழுதும் பாடல்கள் வெகுவாக இன்றைய இளைஞர்களுக்குப் பிடித்திருக்கிறது. அவசர உலகம் மனித மூளையைத் தகவமைக்கிறது. அது கவித்துவத்தை ரசிக்க முனைவதை நேரக்கேடெனச் சொல்லித் தருகிறது. அவித்த முட்டையைத் தோல் நீக்கும் நேரம் விரயமெனக் கொள்கிறது மனம். இதை பழைய மனங்கள் ஏற்கத்தான் வேண்டும். காரணம் இது கால ரயில், நாமெல்லாம் பயணிகள். நமக்கு முன்னால் ஏறியவர்கள் இறங்கிவிட்டார்கள். நாம் நாளை இறங்கப் போகிறவர்கள். அதன் பிறகும் புதிதாகப் பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கத்தான் போகிறார்கள்.

எனது பத்திரிகை தொலைக்காட்சி நேர்காணலின்போது பலரும் கேட்ட ஒரே கேள்வி, முன்பு போல் இப்போது ஏன் பாடல்கள் அர்த்தச் செறிவோடும் கேட்கும்படியாகவும் இல்லை என்பதுதான். அவர்கள் எல்லாருக்கும் நான் ஒரே பதிலைத்தான் சொல்லியிருக்கிறேன், இலக்கியத்தையும் இசையையும் எல்லாக் காலகட்டத்திலும் இளைஞர்களே கொண்டாடியிருக்கிறார்கள். இளைஞர்களால் கொண்டாடப்படுகிற கலைப்படைப்புகள்தான் சிறந்தனவாகும். ஆகவே இன்றைக்கும் இளைஞர்களால் கொண்டாடப்படுகிற அனைத்தும் சிறந்ததாகும். இன்றைய போக்கைக் கடுமையாக விமர்சிக்கிற உங்கள் மூளை பழையது. நீங்கள் விரும்பும் ஒன்றும்

அன்றைக்கு விமர்சிக்கப்பட்ட பழைய புதியதுதான். ஞாபகம் பண்ணிப்பாருங்கள்.. நீங்கள் கொண்டாடிய பாடல் ஒன்றை உங்கள் அப்பா அன்றைக்கு வெறுப்புடன் பார்த்திருப்பார். அதே வேலையை இன்று நீங்கள் செய்கிறீர்கள். உங்கள் மகன் ரசிக்கிறான். நாளை இன்றைய பாடலை உன் மகன் கொண்டாடப்போகிறான், உங்கள் மகன் வெறுப்படையவும் ஒரு பாடல் எதிர்காலத்தில் வரும். அதை உங்கள் பெயரப் பிள்ளைகள் கொண்டாடும். இது இப்படித்தானா என்றால் இல்லையெனவும் என்னால் மறுக்க முடியும். நாம் நம் மூளையைப் புதுமையை உள்வாங்கிக்கொள்ளும் தன்மையில் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் ஒரு கட்டத்தில் நின்றுவிட்டால் காலமும் நின்றுவிடாது.

நான் பொதுவாக தனியிசைப் பாடல்கள் எழுதுகிறபோது சமூக விடுதலைப் பாடல்கள், பெண் விடுதலைப் பாடல்கள், திருநங்கை குறித்து, சாதி மத ஏற்றத்தாழ்விற்கு எதிரான பாடல்கள், அம்மா அப்பா உறவுகளைப் பற்றிய பாடல்கள் மற்றும் காதல் பாடல்கள் என எழுதுவது வழக்கம். அதிலும் கவித்துவம் இல்லாமல் கால் அடியும் எழுதுவதில்லை. ஆனால் திரைத்துறையில் இருக்கும் நானே இன்றைய இளைஞர்களுக்கான பாடல்களைத் தனியிசையில் தராமல் இருந்தது குற்ற உணர்வாக இருந்தது. அதன் முன்னெடுப்பாக எழுதியது miss you chellam என்கிற காதல் சோகப் பாடல்.

பொதுவாகவே காதல் சோகப் பாடல்கள் எனக்குப் பிடிக்கும். ‘பொன்மானைத் தேடி நானும் பூவோடு வந்தேன்’ எனும் பாடலைக் கேட்கும்போதெல்லாம் என் மனம் உறைந்துபோகும். அந்தப் பாடலில் வருகிற அத்தனை வரிகளும் நெஞ்சை அறுக்கும். அதிலும் பாடலின் கடைசி வரிகளான,

இன்னொரு ஜென்மம் இருந்தா
அப்போது பிறப்போம்
ஒண்ணோட ஒண்ணா கலந்து
அன்போட இருப்போம்
அது கூடாமப் போச்சுதின்னா
ஏ ராசாவே...
நான் வெண்மேகமாக விடிவெள்ளியாக
வானத்தில் பொறந்திருப்பேன - என்ன
அடையாளம் கண்டு நீ தேடி வந்தா
அப்போது நான் சிரிப்பேன்

என்பதைக் கேட்டால் கண்களில் நீர் பனிக்காமல் இருக்க முடியாது. ஆனால் இந்தப் பாடல் இன்றைய இளைஞர்களின் மனதைத் தொடுவதில்லை. காதல் துயரை எப்படி எழுதினால் இவர்கள் தோளில் தூக்கி வைத்துக்கொள்வார்கள், எந்த எழுத்தில் அவர்களின் காதல் இருக்கும், எந்த எழுத்தில் அவர்களின் வலி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சித்ததுதான் இந்த miss you chellam பாடல்.

miss you chellam
ஏன்டி என் phone அ எடுக்கல பத்துநாளா
whats up லயும் ஒரு emogi கூட போடவில்ல

நா serial பாக்குற aunty போலத்தான்
ஒன்ன நெனச்சு அழுவுறேன்
தெரு நாய் கடிச்ச காலப்போல
heart pain ல துடிக்கிறேன்

chemistry work out ஆகாம
எடுத்தெறிஞ்சு நீ பேசிட்ட
carry bag ல love எடுத்து
Dustbin ல வீசிட்ட ...

இது பல்லவி. இந்தப் பாடலை எழுத அவர்களின் உலகத்தில் நுழையும்போது என் உணர்வும் அசைந்தது. இதை நீ எழுது, இதை மட்டுமே நீ எழுது என்று என் உள்ளுணர்வு சொல்லியது. சமகாலக் காதலர்களின் புழங்கு பொருட்கள் இதன் வரிகளில் வந்து வரிசைகட்டி நிற்கின்றன. அசல் தன்மை ஓர் இலக்கியத்தில் மிகுதியாக இருப்பது எத்தனை உண்மையானது.

அதே போல் இந்தப் பாடலுக்கு ட்யூனும் அது தரும் சோகத்தின் நவீன காலப் பரிமாணமும் வேறொன்றாக இருக்கிறது. இந்த மேற்கத்திய உணவு உடை மற்றும் கலை கலாச்சாரம் முழுவதும் நமக்கு உகந்ததாக இருக்கின்றனவா என்றால் இல்லை என்றுதான் சொல்வேன். காரணம் அதிலிருக்கும் தீமைகளை நாம் விலக்கிக்கொள்ளாமல் இருப்பது நல்லதன்று. ஆனால் தீமை நீங்கலான நல்ல விசயங்கள் உலகத்தின் எந்த நாட்டிலிருந்து வந்ததெனினும் பின்பற்றலாம். இது இந்தப் பாடலின் முதல் சரணம்.

beach ல சுண்டல்காரன்
அக்கா வல்லியான்னு கேக்குறான்
park க்குல ஏ story சொன்னா
watchman kerchief நீட்டுறான்

நா bike ல நீ இல்லாம போனா
எதிர் காற்று திட்டிப் போது
ஓ face  நா பாக்காதனால
பகல் கூட night ஆ கீது

ஒரு வாரமா fever எனக்கு
உன் friend கிட்ட சொல்லி விட்டும்
ஏன்டி நீ கண்டுக்கல... ஏன்டி... ஏ..
ஏன்டி நீ கண்டுக்கல

chemistry work out ஆகாம
எடுத்தெறிஞ்சு நீ பேசிட்ட
carry bag ல love எடுத்து
Dustbin ல வீசிட்ட ...

பல் போனால் சொல் போச்சு என்பது பழமொழி. இப்போது செல் போனால் சொல்போச்சு என்பது புதுமொழி. செல் இல்லாமல் எப்படி காதலிப்பது அல்லது செல் இல்லாமல் எப்படி சுவாசிப்பது என்றாகிவிட்டது. செல்லிலிருந்து புதிய புதிய இளைஞர்களை வசீகரிக்கும் நூற்றுக்கணக்கான லவ் சிம்பல் வருகின்றன.



பற்களை மொத்தமாகக் காட்டிச் சிரிக்கும் பொம்மைப் படம், இரண்டு கண்ணிலும் நீர் வடிக்கும் சாவுக்கு அழும் பொம்மைப் படம், ஒரு கண்ணில் நீர் வடிக்கும் காதலுக்கு அழும் பொம்மைப் படம், நூற்றுக்கும் மேற்பட்ட பூக்களின் படம், எத்தனையோ விதமான உதடுகள்.. இப்படி இதன் பட்டியலை நீட்டிக்கொண்டே போனால் நாளும் பத்தாது நூலும் பத்தாது. அதிலும் குறிப்பாக பெரிய அளவிலான துடிக்கும் இதயப் படமும் சிவந்த உதட்டின் படமும் செல்லமாகக் குத்தப் பயன்படுத்தப்படும் முஷ்டி படமும் ரொம்ப பிரபலம். இதில் ஒரு ஆணோ பெண்ணோ ஒரு தவறான அல்லது தாங்கள் ஏற்கவியலா மெஸேஜுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்பது திட்டிவிடுவது, இனிமேல் நமக்குள் பேச்சுவார்த்தை வேண்டாமென முறித்துக்கொள்வது அல்லது அவரின் எண்ணை பிளாக் செய்வதாகும். அதே நேரத்தில் அதே நபரின் அந்த மெஸேஜுக்கு முஷ்டி பொம்மைப்

படம் போடுவது பொய்க்கோபத்தின் வெளிப்பாடுதான். அதைப் பிற்காலங்களில் துடிக்கும் பொம்மைப் படம் தொடங்கி சிவந்த உதட்டுப் பொம்மை வரைகூட வளர்க்கலாம். இதுதான் இன்றைய உலகம். இதை மிக அழகாக நிஜத்தின் அருகில் நின்று சொல்லிய ஒரு திரைப்படம் பிரதீப் ரங்கநாதன் இயக்கிய “லவ் டுடே”. இது இரண்டாவது சரணம்.

ஓ lipstick ஒட்டிய t-shirt இன்னும்
Washing பண்ணல
ஏ mummy தட்டில் போட்டு வச்ச
சோறு துண்ணல

கடைசி bench பையன் என்ன
கவித கிறுக்க வச்சிப்புட்ட
காத்துக் கருப்போன்னு ஏ அப்பா
மந்திரிக்க கூட்டிப் போக செஞ்சுபுட்ட

ashtray ரொம்ப cigrate புடிக்கிறேன்
வராத beard வளக்கிறேன்..
உன்னாலே.. அடி உன்னாலே

chemistry work out ஆகாம
எடுத்தெறிஞ்சு நீ பேசிட்ட
carry bag ல love எடுத்து
Dustbin ல வீசிட்ட ...

இன்றைய இளைஞர்களின் காதலை இந்த ஒரு பாடலில் எழுதித் தீர்த்துவிட்டேனா என்றால் இல்லை. அப்படியெல்லாம் சொல்லிவிடவும் முடியாது. இப்படியான சில வரிகளை வைத்துக்கொண்டு இக்காலத்தைக் கொஞ்சம் உரைநடைப்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் என் உள்ளார்ந்த நோக்கம்.

பிரேக் ஒயர் அறுந்துவிட்ட கார் போல ஓடிக்கொண்டிருக்கும் நிதானம் தப்பிய இந்த உலகம், காதல் மட்டும் இல்லையென்றால் என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. தாய் தந்தை மீதான அன்பும், உடன் பழகியவர்களின் நட்பும், பக்கத்து வீட்டுக்காரர்கள் மீதான சிநேகமும் காலாவதியாகிப்போன இக்காலகட்டத்தில் காதல் மட்டும்தான் கடைசி இழையாகத் தாக்குப் பிடித்து நிற்கிறது. அந்தக் காதலை மனித குலம் கொண்டாடவேண்டும். ஆதரிக்க வேண்டும். வளப்படுத்த வேண்டும். அதுதான் சாதி மதக் கொடூரத்தைச் சாய்க்கவல்லது. பிரபஞ்சத்தின் கோள்கள் ஒன்பது என்கிறார்கள். ஆனால் காதல் என்பதும் ஒரு கோள்தான். இது எண்ணிக்கையற்றது. காதலிப்பவர்கள் அத்தனை பேரும் ஒன்றை வைத்திருக்கிறார்கள். இதைத்தான் வயிற்றுக்கும் தொண்டைக்கும் உருவமில்லா ஒரு உருண்டையும் உருளுதடி எனக் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் சொல்லியிருப்பார் என நினைக்கிறேன். அந்தக் கிரகத்தை வைத்துக்கொண்டு சிலர் பந்து விளையாடுகிறார்கள். சிலர் லட்டு உருண்டையைப் போல இனிமையாக வைத்திருக்கிறார்கள். பூச்செடிகளை நட்டுவைத்து ரசிக்கும் சிலரையும் பறவைகளை வளர்த்துக்கொண்ட சிலரையும் குதிரைகளோடு சிலரையும் கூட நான் பார்த்திருக்கிறேன். ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் விருப்பம் கொள்ளக்கூட இயலாதபடி சாதியைக் குறுக்கே நிறுத்திச் சதி செய்கிறார்கள். மதம் என்கிற விசத்தை நாக்கில் தடவிக்கொண்டு பார்ப்பவர் முகத்தில் எல்லாம் துப்பிவிடும் காரியத்தைத் தொடங்கி நாளாயிற்று. கடவுளின் பெயரால் மூடநம்பிக்கை மூட்டையை மக்கள் மத்தியில் இறக்குமதியும் செய்துகொண்டிருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் அழித்துவிடும் பேராற்றல் காதலுக்கு இருக்கிறது. அதை நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டும். காதல் திருமணம் செய்வோரைக் கவுரவப்படுத்த வேண்டாம். கவுரவக் கொலை செய்யக்கூடாது. இலக்கியத்தில் கூட காதல் படைப்பை ஏதோ இயலாதவனின் எழுத்தாகப் பாராமல் அதன் உன்னதத்தை உயர்த்திப் பிடிக்கவேண்டும். இயக்குநர் பிரபுசாலமன் இயக்கிய மைனா படத்தில் ஒரு சிறந்த உரையாடல் வரும்,

லவ் பண்ணுங்க சார் லைஃப் நல்லாருக்கும்!

■

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு
'சிறுகதைப் பரிசுப்போட்டி'

சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை

சப்திகா

# சிவப்பு சேலைக்காரி



நிறைமாத வயிற்றோடு நடக்க முடியாமல் அங்கும் இங்கும் அசைந்து அசைந்து நடந்து வரும் கர்ப்பிணியைப் போல் வந்துகொண்டிருந்தது திருச்செந்தூரில் இருந்து நாகர்கோயில் செல்லும் பேருந்து. 'வரும்போதே இவ்வளவு கூட்டமா வருதே இதுல ஏறவா வேண்டாமா?' என்று ஒரு நிமிடம் மனதில் நினைத்தாள் லதா.

அளவான உயரம், உயரத்திற்கு ஏற்ற எடை, கோதுமை நிறம், வட்ட வடிவ முகத்தில் அழகு சேர்ப்பது போல் அடர்த்தியான, வடிவமற்ற புருவங்கள். அதற்கு இடையில் சிகப்பு சாந்துப் பொட்டு, நேர் வகுடு எடுத்து நேர்த்தியாகப் பின்னப்பட்ட கூந்தல், அதில் பாதி காய்ந்துபோன மல்லிகைப் பூச்சரம், வெள்ளை நிறத்தில் மஞ்சள் சிகப்பு வண்ணங்களில் பூ போட்ட பருத்திச் சேலை, தோளில் கருப்பு நிறக் கைப்பையுடன் யோசனையோடு நின்றாள் லதா.

அன்று வெள்ளிக்கிழமை என்பது அவளுக்கு அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது. உடனே வேறு எதைப் பற்றியும் யோசிக்காமல் அவளுக்கு முன் வந்து நின்ற பேருந்தின் கடைசிப் படியில் ஏறிவிட்டாள். படிக்கட்டில் நின்றவாறு பயணிகளிடம் "உள்ளே போங்க", என்று நாலு முறை சத்தம் போட்டு, இடித்துப் பிடித்து படிக்கட்டில் இருந்து மேலே ஏறுவதற்குள் அடுத்த நிறுத்தமே வந்துவிட்டது. பயணிகள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்துகொண்டும் ஒருவர் நிற்க வேண்டிய இடத்தில் மூன்று பேர் நின்றுகொண்டும் இருந்தனர். 'நல்லவேளை காட்டன் புடவையாகப் போச்சு. இல்லன்னா இறங்கும்போது சேலை கையோடு அவுந்து வந்திருக்கும்' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டாள் லதா.

"லதா டீச்சர்... நாகர்கோவில் வரைக்கும் நின்னுட்டுப் போக முடியாது. வள்ளியூருக்கு டிக்கெட் எடுப்போமா? யாரும் இறங்குறது போலத் தெரியலையே!", என்றாள் லதாவின் பேருந்து தோழி சுதா. இருவரும் இரண்டு வருடங்களாக ஒரே பேருந்தில் பயணம் செய்பவர்கள்.

"இல்ல டீச்சர்... வள்ளியூரில் இறங்கினாலும் இதே நிலைமைதான். இன்னைக்கு வெள்ளிக்கிழமை பாத்தீங்களா... எல்லா வண்டியும் கூட்டமாகத்தான் வரும். நான் நாகர்கோயிலே எடுக்கிறேன். நீங்க வேணும்னா வள்ளியூரில் இறங்குங்க டீச்சர்", என்றாள் லதா.

"ஆமா... நீங்க சொல்றதும் சரிதான் டீச்சர். நானும் நாகர்கோயிலே எடுக்கறேன். நாகர்கோயில் போய் இறங்குற வரைக்கும் நிக்க வேண்டியதுதான் போல இருக்கு", என்று நொந்துகொண்டாள் சுதா.

பொதுவாக வெள்ளிக்கிழமைகளில் வெளி மாவட்டத்திலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லும் பேருந்துகளில் கூட்டம் அதிகமாகவே இருக்கும். அங்கு வேலைக்காகவோ, படிப்பதற்காகவோ தங்கி இருப்பவர்கள் ஊர் திரும்புவதால் இந்தக் கூட்டம். கூட்ட நெரிசலைச் சமாளித்து கைப்பையில் இருந்து பணம் எடுத்து டிக்கெட் வாங்கி முடிப்பதற்குள் இருவரும் ஒருவழி ஆகிவிட்டார்கள். ஒவ்வொரு நிறுத்தத்திலும் பேருந்தில் இருந்து இறங்குபவர்களை விட ஏறுபவர்களே அதிகமாக இருந்தனர். அப்படி ஒரு நிறுத்தத்தில் ஏறிய பெண்கள் கூட்டத்தில் ஒருவர் மட்டும் பார்ப்பதற்குச் சற்று வித்தியாசமாக இருந்தார்.

நல்ல உயரம், வாட்ட சாட்டமான உடம்பு, மாநிறம், முகத்தில் கொஞ்சம் முரட்டுத்தனம், அளவுக்கு அதிகமான ஒப்பனை, இடுப்புக்கும் தோளுக்கும் இடைப்பட்ட கூந்தலில் கனகாம்பரப் பூக்கள், கம்பீரமான தோற்றத்துடன் இருந்த அவர் தங்க ஜரிகை வைத்த சிவப்பு சேலை அணிந்து இருந்தார்.

"லதா டீச்சர்... அந்த சிவப்பு சேலைக்காரிய பாருங்க... கொஞ்சம் வித்தியாசமா தெரியலையா? அது ஆணா? பெண்ணா?" என்று அவளைச் சுட்டிக்காட்டி லதாவின் காதோரமாகக் கிசுகிசுத்தாள் சுதா.

அவளது கேள்வியின் அர்த்தம் புரியாமல் சுதாவை உற்றுப் பார்த்தாள் லதா.

"அந்த சிவப்பு சேலையைப் பார்த்தா பொம்பளையைப் போலத் தெரியலையே! கோயிலுக்கு நேந்துகிட்ட சில பேரு பெண் வேடம் போடுவாங்களே... அந்த மாதிரி ஏதாவது இருக்குமோ!", என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்னும் இல்ல டீச்சர். அப்படின்னா அவங்க ஆம்பளைங்க பக்கம் நின்னு இருப்பாங்க. இங்க வர மாட்டாங்க. இவங்க திருநங்கையா இருக்கும்", என்றாள் லதா.

"முன்னாடி எல்லாம் எங்கேயாவது ஒரு இடத்துல எப்பயாச்சும் ஒரு ஆள, ரெண்டு ஆள இப்படி பாப்போம். இப்ப பாத்தா திரும்புற பக்கம் எல்லாம் இவங்கதான் இருக்கிறாங்க", என்று சுதா சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் அருகில் இருந்த இருக்கை ஒன்று காலியானது.

ஒரு இருக்கையில் இருப்பதற்கு நான்கு பேர் போட்டியிட்டதில் இறுதியாக வெற்றிக்கனியைத் தட்டிப் பறித்தாள் சுதா. இத்தனைக் கூட்ட நெரிசலிலும் உட்கார இடம் கிடைத்த மகிழ்ச்சி அவள் முகத்தில் தாண்டவம் ஆடியது. பேருந்தில் உட்கார இடம் கிடைத்தால் போதும் உலகத்தில் எந்தப் பெரிய விஷயமாக இருந்தாலும் அதைப்பற்றிய சிந்தனையை எல்லாம் மறந்துவிடுவாள் சுதா. இருக்கையில் அமர்ந்த சில மணித்துளிகளில் அனைத்தையும் மறந்து நித்திரையில் ஆழ்ந்தாள் சுதா. பேருந்தின் அசைவுகளுக்கும், வளைவுகளுக்கும் ஏற்றாற்போல் அவள் தலை அங்கும் இங்கும், முன்னும் பின்னுமாக நாட்டியமாடிக்கொண்டிருந்தது. அவ்வப்போது ஒலி எழுப்பும் ஓட்டுனரின் ஒலிப்பானும், நடத்துனரின் சீட்டியும் அவளின் தலையசைவிற்குப் பக்கவாத்தியம் வாசிப்பது போல் இருந்தது. இதைப் பார்த்த லதாவிற்குச்

சிரிப்பு வந்தது. சத்தம் இல்லாமல் ஒரு இசைக் கச்சேரி நடந்துகொண்டிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. வேலை பார்க்கும் பெண்களுக்கு ஓய்வு நேரம் இதுதான். பாவம் உறங்கட்டும் என்று நினைத்தாள்.

அவர்கள் சென்றுகொண்டிருந்த வண்டி மெல்ல ஆடி அசைந்து வள்ளியூர் பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. அங்கே சில பயணிகள் இறங்கியதும் ஒரு சில இருக்கைகள் காலியாயின. லதாவும் காலியாக இருந்த இருக்கை ஒன்றில் சன்னலோரமாக அமர்ந்தாள். அவள் அருகில் தயங்கியபடி சிவப்பு சேலைக்காரியும் அமர்ந்தார்.

இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை லதா. அப்படியே ஆடிப் போய்விட்டாள். அவளுக்குச் சட்டெனப் படபடப்பு தொற்றிக்கொண்டது. ஏன் என்று தெரியவில்லை? அவளது இருதயம் வேகமாகத் துடித்தது. அவளுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. அப்படியே மெதுவாக சுதாவை எட்டிப் பார்த்தாள். அவள் தலை இன்னும் ஆடிக்கொண்டிருந்தது.

பக்கத்தில் இருக்கும் சிவப்பு சேலைக்காரியை ஓரக்கண்ணால் பார்த்தாள். அவர் பின்னாடி பார்ப்பதும், திரும்புவதும் மீண்டும் பின்னாடி பார்ப்பதும், திரும்புவதுமாக அமைதியின்றி இருந்தார்.

அதைக் கவனித்து லதாவிற்கு என்ன விஷயம் என்று சிவப்பு சேலைக்காரியிடம் கேட்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் கேட்கவில்லை. லதாவின் மனதில் ஒருவித பயம் இருந்தது. இவர்களும் நம்மைப் போல் சாதாரணமான, ரத்தமும் சதையும் உள்ள மனிதர்கள்தான் என்று லதாவின் அறிவிற்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் ஒரு பயம். 'நாம பேசுறத ஒருவேளை தவறாகப் புரிந்துகொண்டால்?? திடீர்னு கோபப்பட்டுட்டா?? எல்லாருக்கும் முன்னாடி சத்தம் போட்டுட்டா??' என்று ஒவ்வொன்றாக நினைத்துப் பேசாமல் அமைதியாகவே இருந்தாள் லதா.

ஆனாலும் அவள் மனம் கேட்கவில்லை. அந்தச் சிவப்பு சேலைக்காரி என்ன செய்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள் லதா. இந்த முறை லதா அவரைப் பார்ப்பதைச் சிவப்பு சேலைக்காரி பார்த்துவிட்டார்.

லதாவின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்த சிவப்பு சேலைக்காரி சிறிய தயக்கத்துடன் லேசாகப் புன்னகைத்தார். அந்தப் புன்னகைக்குள் பல கேள்விகளும் ஏக்கங்களும் புதைந்து இருப்பது போல் உணர்ந்தாள் லதா. பயத்தை மூட்டை கட்டி ஒரு ஓரமாக வைத்துவிட்டு லதாவும் பதிலுக்குச் சிரித்தாள்.

"என்ன ஆச்சு? எதுக்கு பின்னாடி திரும்பித் திரும்பிப் பாக்குறீங்க?", என்றாள் லதா.

"ஒன்றும் இல்லை அக்கா, வள்ளியூர் வரைக்கும்தான் டிக்கெட் எடுத்தேன். கூட்டமா இருந்தது பார்த்தீங்களா! உக்கார இடம் கிடைக்குதோ இல்லையோ! வள்ளியூரில் இறங்கிடலாம்னு நினைச்சேன். இப்பதான் இடம் கிடைச்சிருச்சே. டிக்கெட் எடுக்கணும்ல. அதான் கண்டக்டரைப் பார்க்கிறேன். அவரும் பின்னாடியேதான் நின்னுட்டு இருக்காரு", என்றவர் சட்டென்று திரும்பி அவர்கள் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த பெண்மணியிடம்,

"அக்கா கண்டக்டர் வந்தா கொஞ்சம் சொல்லுங்க அக்கா", என்று கூறிவிட்டு லதாவை நோக்கினாள்.

"நாம தெரியாத்தனமா டிக்கெட் எடுக்க மறந்துட்டோம்னா அவ்வளவுதான்! அப்புறம் அவர்கிட்ட இருந்து யாரு திட்டு வாங்குறது? கண்டமேனிக்குத் திட்டிப் போடுவாரு. என்ன செய்றது அசிங்கமாப் போயிடும் இல்லையா! ஆமா நீங்க டிக்கெட் எடுத்துட்டீங்களா அக்கா?", என்றார் சிவப்பு சேலைக்காரி.

"ஆமாமா நான் அப்பவே எடுத்துட்டேன்", என்றாள் லதா.

"சரி அக்கா. ஆமா எந்த ஊருக்குப் போறீங்க", என்று கேட்டார் சிவப்பு சேலைக்காரி.

'இது என்னடா வம்பாப் போச்சு தெரியாத்தனமா பேச்சு கொடுத்துட்டோமோ' என்று மனதுக்குள் யோசித்த லதா அதை வெளிக்காட்டாமல் நாகர்கோயிலுக்குப் போவதாகக் கூறினாள். சிவப்பு சேலைக்காரியும் விட்டபாடு இல்லை.

"நாகர்கோயிலுல எங்க அக்கா?", என்று மீண்டும் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

இந்திய வரைபடத்தில் ஏதோ ஒரு சின்ன புள்ளியைப் போல் இருக்கும் அவளது ஊரின் பெயரைச் சொன்னவுடன் தெரியவா போகிறது என்ற அசட்டுத் தைரியத்தில் அவள் வசிக்கும் கடற்கரைக் கிராமத்தின் பெயரைக் கூறினாள்.

"ஓ அந்த ஊரா உங்களுக்கு! எங்க ஊர்ல இருந்து கூட ரெண்டு பேரை அந்த ஊர்லதான் கட்டிக் கொடுத்திருக்கு. அவங்கள உங்களுக்குத் தெரியுமா?", என்று ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் அவள் முகத்தில் ஒளிர்ந்தது போல் பிரகாசமான முகத்தோடு இரண்டு நபரின் பெயரைக் குறிப்பிட்டார்.

அந்த இருவர் யார் என்று லதாவிற்குச் சுத்தமாகத் தெரியவில்லை. ஆனால் அந்தச் சிவப்பு சேலைக்காரியோ லதாவிடம் அந்த இருவரைப் பற்றியும், அவர்கள் திருமணம் செய்து கொடுத்த குடும்பத்தைப் பற்றியும், அவர்களின் உறவினர்கள் பற்றியும் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தார். லதாவிற்கு வேறு வழி தெரியவில்லை. இறுதியில் அவர்கள் இருவரையும் தெரிந்தது போல் காட்டிக்கொண்டாள்.

"அவங்க ரெண்டு பேரையும் பார்க்கவா நீங்க இப்ப ஊருக்குப் போறீங்க", என்று பேச்சை மாற்றினாள் லதா.

"இல்லக்கா. எங்கள போல உள்ளவங்களுக்கு யாது ஊரு? யாது குடும்பம்? யாது சொந்தம்? ஒன்றும் இல்லை. எங்களுக்கு இரண்டு தலைவர் இருக்கிறாங்க. ஒருத்தங்க பெரிய அக்கா. இன்னொருத்தவங்க சின்ன அக்கா. இவங்கதான் எங்களைப் போல உள்ளவங்களுக்கு எல்லாமே. இன்னைக்கு எங்க சின்ன அக்காவுக்குப் பிறந்தநாள். எங்க





கூட உள்ளவர்கள் எல்லாம் அவங்களப் பார்த்து வாழ்த்து சொல்ல நேரமே போயிட்டாங்க. நான்தான் கொஞ்சம் லேட் ஆயிட்டேன்", என்றார்.

அப்படி பேசிக் கொண்டிருக்கும்பொழுது அவருடைய கைபேசி ஒலித்தது. அதை எடுத்துச் சற்று சத்தமாகவே பேசினார். அவர் பேசியதிலிருந்து ஏதோ பணம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று மட்டும் லதாவிற்குப் புரிந்தது. அதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று லதாவின் மனது சொன்னாலும் அப்படி கேட்பது நாகரீகம் அல்ல என்று நினைத்து அவள் அமைதியாகவே இருந்தாள். கைபேசியைத் துண்டித்துவிட்டு மீண்டும் அவராகவே பேச்சைத் தொடர்ந்தார்.

சிவப்பு சேலைக்காரியின் அப்பா கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு இரண்டு வருடத்திற்கு முன் இறந்துவிட்டார் என்றும் அவருக்கு வைத்தியம் பார்ப்பதில் ஏகப்பட்ட கடன் ஆகிவிட்டது என்றும் கூறினார். அந்தக் கடனை அவர்தான் அடைத்து வருவதாகவும் அது தொடர்பாக ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்ததால் சின்னக்காவின் பிறந்தநாளுக்குத் தாமதமாகப் போக வேண்டியதாகிவிட்டது என்றும் அந்தக் கடன்காரர்தான் இப்பொழுது தொலைபேசியில் அழைத்துப் பேசினார் என்றும் கூறினார்.

"நீங்க எப்படி கடனை... உங்களுக்குக் கூடப் பொறந்தவங்க யாருமே இல்லையா?", என்று குழப்பத்தோடு கேட்டாள் லதா.

"இருக்கான் அக்கா. ஒரு அண்ணன் இருக்கான். ஆனா எதுக்கும் பிரயோஜனம் இல்ல. அப்பா இறந்ததும் வீட்ட நீயே வச்சுக்க கடனையும் நீயே அடச்சுக்கனு சொல்லிட்டு அவன் பாட்டுக்கு ஒதுங்கிட்டான். நான் காலையில கடைத் தெருவில் போய்க் கலெக்ஷனுக்குப் போவேன் அக்கா, சாயங்காலம் ஏதாவது கோயில்கள்ல ஆட்டத்துக்குப் போயிட்டு வருவேன். அதுல கிடக்கிறத வெச்சு கடன் அடைச்சிட்டு வரேன்.

நான் பொறந்தது என்னமோ ஒரு

கிறிஸ்தவக் குடும்பத்துலதான் என்றாலும் எல்லாக் கோயிலுக்கும் போவேன். எல்லா சாமியும் எனக்கு ஒன்னுதான். ஒன்றும் பெரிய வித்தியாசம் எல்லாம் இல்லக்கா. எங்கள எல்லோரும் கிண்டல் பண்ணும்போதும், வக்கிரமாக நடத்தும்போதும் எல்லா சாமியும் பாத்துட்டு வாய மூடிட்டுச் சும்மாதானே இருக்குது. எங்களுக்காக எந்த சாமியும் எந்த மதமும் பேசுறது இல்லையே!

இந்த சாமிங்க மேல எனக்கு ரொம்ப கோவம் அக்கா. எங்கள இப்படி ஒரு பிறவியா படச்சு இவ்வளவு வேதனையும் வலியும் எங்களுக்குக் கொடுக்கிறதே இந்த சாமிதானே. நாங்க என்ன பாவம் செஞ்சோம்", என்ற சிவப்பு சேலைக்காரியின் கேள்வி லதாவின் மனதில் ஆணியடித்தது போல் இறங்கியது.

அவரின் வார்த்தைகளில் நிறைந்திருந்த வலிகளை உணர்ந்தவளாய் அமைதியாக இருந்தாள் லதா. சிவப்பு சேலைக்காரியே மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

"எனக்கு ஒரு பதினாறு பதினேழு வயசு இருக்கும் அக்கா. அதுக்கு மேல என்னால என்னுடைய ஆசைகள் எல்லாத்தையும் அடக்கிக்கிட்டு இருக்க முடியல அக்கா. நான் எனக்கு விருப்பப்பட்டது போல பூ வைக்க, பொட்டு வைக்க, சேலை கட்ட ஆரம்பிச்சேன். நான் ஒரு திருநங்கை அப்படிங்கிறது எங்க ஊர் முழுக்க பையப் பையப் பரவிடுச்சு.

என்ன பெத்தவங்களுக்கு என்ன நெனச்சு மனசுல பயங்கர வேதனைதான். ஆனாலும் என்கிட்ட அதைப் பத்திப் பேசுவோ, கோவப்படவோ மாட்டாங்க. அவங்க மனசுக்குள்ளேயே இதை வச்சு நொந்துக்குவாங்க. பார்த்துப் பார்த்து வளத்த பையன் இப்படி ஆயிட்டானேனு நெனச்சு சந்தோஷமா படுவாங்க? நிச்சயமா அவங்களுக்கு வேதனைதானே!

ஒருநாள் எங்க அண்ணன் கடற்கரையில் இருந்து வேகமா ஓடி வந்தான். அவன் வீட்டுக்குள்ள வந்ததுமே வந்த வேகத்துல என்னை அடி அடின்னு அடிச்சுட்டான். அம்மா அவனைத் தடுத்து எதுக்குடா இப்படி தம்பியை அடிக்கிற அப்படின்னு கேட்டதுக்கு என்ன சொன்னான் தெரியுமா அக்கா? இந்த பொட்டப் பயலால எனக்கு ஊருக்குள்ள தல காட்ட முடியல. உன் தம்பி என்னலே பொட்டும், பூவும் வச்சிட்டு ஒரு மாதிரியா நடக்கிறான்னு ஊர்ல எல்லாப் பயலுகளும் கேக்குறாங்க. இதனால எனக்கு ஒரே அவமானமா இருக்கு. இன்னும் இவனை எதுக்கு வீட்ல வச்சுக்கிட்டு இருக்கீங்க? எங்கேயாவது அவன அனுப்பித் தொலைங்க. அப்படின்னு ரொம்ப ஆவேசமா சொன்னான்.

இதை கேட்டு எனக்கு அழுகை அழுகையா வந்துச்சு. எங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சங்கடம் தாங்க முடியல. எங்க அம்மா என்னைக் கட்டிப்பிடிச்சு ஓ...ன்னு அழுதாங்க. அப்ப எங்க அப்பா ஒரு வார்த்தை சொன்னாங்க அக்கா. அது இன்னும் அப்படியே என் மனசுல பசுமரத்தாணி போலப் பதிஞ்சிருக்கு", என்றாள் சிவப்பு சேலைக்காரி.

"அப்படி என்ன சொன்னாங்க", என்று மிகவும் ஆவலோடு கேட்டாள் லதா.

"எங்க அப்பா ஒரு தெய்வப்பிறவிக்கா. அவர் என்ன சொன்னார் தெரியுமா? இவன் எங்க மூலமா இந்த உலகத்துக்கு வந்தவன். இவன் இப்படி ஆனதுக்கு அவன யாரும் குத்த சொல்ல முடியாது. அவனுக்கு எங்களை விட்டா வேற யாரும் கிடையாது. இந்த உலகத்துல நாங்க ரெண்டு பேரும் உயிரோட இருக்குறது வற அவன் எங்களோடதான் இருப்பான். உனக்கு அவன் வீட்டில் இருக்கிறது கஷ்டமா இருந்தா நீ வேணும்னா வீட்டை விட்டு வெளியே போ. அப்படின்னு எங்க அப்பா சொன்னாங்க", என்று சொல்லும்போது சிவப்பு சேலைக்காரியின் கண்கள் சிவந்து கண்ணீர் வடிந்தன.

"நீங்களே சொல்லுங்க அக்கா, இப்படிப்பட்ட அப்பாவ கேன்சர் நோய் வந்துடுச்சுன்னு வைத்தியம் பார்க்காமல் விட்டுவிட முடியுமா? எங்க அண்ணன் எனக்கென்னன்னு கண்ணை மூடிட்டு இருந்துட்டான். ஆனால் என்னால அப்படி

இருக்க முடியலை. என்னால முடிஞ்ச மட்டும் கடன உடன வாங்கி எங்க அப்பாவுக்கு எவ்வளவு வைத்தியம் பார்க்க முடியுமோ அவ்வளவும் பார்த்தோம்.

அஞ்சு வருஷம் அப்பாவை உயிரோட வச்சிருக்க முடிஞ்சது. அவ்வளவுதான். அப்பா இறந்த கொஞ்ச நாளிலேயே துக்கம் தாங்காமல் அம்மாவும் போய்ச் சேர்ந்துட்டாங்க. அடக்க செலவுக்கும் கூட கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைதான். எப்படியோ எல்லாக் காரியத்தையும் நானே ஒத்தையில செஞ்சு முடிச்சேன். அப்போ கடன் வாங்குனதுதான் இப்போ கொஞ்சம் கொஞ்சமா அடிச்சுட்டு இருக்கேன்'', என்றவர் பட்டெனத் திரும்பி நடத்துனரைப் பார்த்தார். நடத்துனர் இப்பொழுதும் பின்னாடிதான் நின்றுகொண்டிருந்தார்.

''உங்ககிட்ட பேசிட்டு இருந்ததுல டிக்கெட் எடுக்கறதையே மறந்துட்டேன் அக்கா'', என்று சொல்லி அவர்கள் இருக்கையின் அருகில் நின்றுகொண்டிருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணியிடம் ரூபாயை நீட்டினார்.

''கொஞ்சம் பின்னாடி கொடுத்து ஒரு டிக்கெட் வாங்கித் தாங்கக்கா'', என்று கேட்டார்.

அந்த பெண்மணியோ காதில் கேட்காதது போல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். இதைப் பார்த்த லதாவிற்கே மனசு வலித்தது. அந்தப் பெண்மணியின் செயலைப் பார்த்ததும் சிவப்பு சேலைக்காரியின் முகம் சட்டென மாறியது. அவளுடைய கைப்பையை என்னிடத்தில் கொடுத்துவிட்டு இருக்கையில் இருந்து எழுந்தார். கடகடவென்று வேகமாக நடத்துனர் நின்றுகொண்டிருந்த பக்கம் சென்றார். அவரிடம் போய் டிக்கெட் வாங்கிக்கொண்டு மீண்டும் இருக்கையில் வந்து அமர்ந்தார். அதன்பிறகு பேருந்து நாகர்கோயில் வந்தடைவது வரை இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை.

பேருந்தில் இருந்து இறங்கும்பொழுதுதான் சிவப்பு சேலைக்காரியின் பெயரைக் கேட்கவே இல்லையே என்று நினைத்தாள் லதா. படிக்கட்டில் இறங்கிக்கொண்டிருந்த சிவப்பு சேலைக்காரியிடம், ''உங்க பெயர் என்னன்னு சொல்லவே இல்லையே?'', என்றாள் லதா. இதைக் கேட்டதும் சிவப்பு சேலைக்காரியின் முகத்தில் வெற்றுப் புன்னகை ஒன்று சில மணித்துளிகள் தோன்றி மறைந்தது.

''பெயரைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன பண்ணப் போறீங்க? அந்தப் பெயரைச் சொல்லித்தான் நீங்க கூப்பிட மாட்டீங்களே! நீங்க எல்லாரும் சேர்ந்து எங்களுக்கு ஒரு பேர் வச்சிருக்கீங்களே, அதைச் சொல்லித்தானே கூப்பிடுவீங்க! அப்புறம் என் பேரு உங்களுக்கு எதுக்கு?

ஆனா ஒண்ணு மட்டும் உங்ககிட்ட சொல்றேன் அக்கா. நாங்களும் இந்தச் சமூகத்துல நல்லபடியா வாழனும், சமூக மாற்றம் வந்துடனும் அப்படின்னு அரசாங்கமும் என்னென்னலாமோ முயற்சி பண்ணுது. எங்களைப் போல உள்ளவங்க கூட இன்னைக்கு அரசாங்கத்தினுடைய உதவியால, ஒரு சில நல்ல மனுஷங்களோட உதவியால எப்படியோ படித்து எடுத்து எப்படியோ கஷ்டப்பட்டு ஏதோ ஒரு வேலைக்கு ஏறிடறாங்க. எங்களுக்கு ஒரு இடத்துல வேலை கிடைக்கும்போது பெருசா விளம்பரப்படுத்திக் கொண்டாடுற இந்தச் சமூகம் அந்த வேலைக்குப் போன பிறகு அங்க நடக்கக்கூடிய எங்களுடைய பிரச்சனைகளைப் பத்தி யாராவது கண்டுக்குறாங்களா? பேசுகிறார்களா? இல்லையே! நாங்களும் மனுஷங்கதான் என்று எப்ப இந்த உலகம் புரிஞ்சுக்கப் போகுது?

காலம் காலமா இந்த மக்களுக்கு எங்க மேல இருக்கக்கூடிய அந்த எண்ணத்தில் மாற்றம் வருகிற வரைக்கும் எங்க வாழ்க்கையில எந்த மாற்றத்திற்கும் சாத்தியம் இல்லை அக்கா'', என்று சொல்லிவிட்டுப் பேருந்தில் இருந்து இறங்கி விறுவிறுவென நடந்து சென்றார்.

■

• கவிஜி

# அசைத்துப் பார்க்கும் காட்சிகள்




திரைப்படம் : *Hereditary*

பார்ட்டிக்கு வந்த இடத்தில் தங்கைக்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறது. நண்பர்களோடு இருக்கும் பீட்டரைக் குரல் உடைய அழைக்கிறாள் தங்கை சார்லி. என்ன ஏதென்று பதறி... தங்கையைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு வண்டியைக் கிளப்புகிறான் பீட்டர். கார் வேகம் எடுக்க... காரணங்களும் வேகமெடுக்கின்றன. பெரிதாக என்னவோ நடக்கப்போகிறது என்று நாமும் காரில் தொற்றிக்கொள்கிறோம்.

வேகம் வேகம் என நகர... காரில் படுத்துக் கால்களை உதைத்துக்கொண்டு கதறிப் புரளும் சார்லி கழுத்தைப் பிடித்துக்கொண்டு துடிக்கிறாள். வலி தாங்க முடியவில்லை. தொண்டைக்குள் என்னவோ புகுந்துவிட்டது. கதறுகிறாள். வண்டி இன்னும் வேகம் எடுக்கிறது.

`சார்லி கொஞ்சம் பொறுத்துக்கோ... ஆஸ்பத்திரி போய்விடலாம்` என்று அழுத்துகிறான் அண்ணன் பீட்டர். எதிரே சாலையில் என்னவோ குவிந்து கிடக்க... வண்டியை அனிச்சையாய் இடது பக்கம் திருப்புகிறான். சாலையில் தறி கெடச்செய்கிறது காலம். அதற்குள் காற்றுக்காக ஜன்னலை வேகமாய்த் திறந்துவிட்ட சார்லியின் தலை வண்டியின் வேகத்துக்கு வெளியே சென்றுவிட... சடாரெனச் சத்தம். எதிலிருந்தோ எதுவோ முறிந்து பிய்ந்துகொண்டு போன சப்தம். உள்ளம் நொறுங்கும் எதுவோ பின்னால் நிகழ்ந்துவிட்டதைக் கிரீச்சிட்டு நிறுத்திய வண்டியின் ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித்தபடி கண்கள் நடுங்க உணர்கிறான். உணர்தல் சூனியத்தையே பார்க்கச் செய்கிறது. அவனுக்குத் தெரிந்துவிட்டது. என்னவோ நடந்துவிட்டது. ஆனால் அதை அவன் நம்பவில்லை. அப்போதைக்கு அதை நம்பாமல் இருக்கத்தான் அவனுக்குச் சக்தி இருக்கிறது.

எப்படியாவது நொடிகளில் நிகழ்ந்ததவை ஒடியாமல் மீண்டெழுந்துவிடுமா என்று பேச்சற்று அமர்ந்திருக்கிறான். நேரம் ஓடுகிறது. வேறு வழி இல்லாதபோது நகர்ந்துவிடுதல்தான் நலம். கார் மெல்ல வீட்டை நோக்கி நகர்கிறது. ஒரு இறுதி ஊர்வல வண்டியின் பேரமைதிதான் அந்தக் காருக்கும். எல்லாவற்றுக்கும் சாட்சியாக அங்கே நிற்கும் போஸ்ட் கம்பம் அவர்கள் பார்ட்டிக்குப் போகும்போதே நம் கண்ணில் பட்ட குறியீடுதான். சத்தம் இல்லாமல் ஓர் அரூபத்தின் நிழலாய் வீட்டுக்குள் சென்று படுத்துக்கொள்கிறான். போர்வையை இழுத்து இறுக மூடிக்கொள்கையில் தனக்குத் தெரியாமல் நிகழ்ந்துவிட்ட விபத்தின் திரையை மூடிக்கொள்வதாக நம்புகிறான். எப்படியாவது ஏதாவது மாறிவிடாதா என்ற மயக்கம்... அவன் விழிகளில் தூக்கத்தை அண்ட விடுவதில்லை. நடுக்கத்தில் போர்வையை இறுக்கிக்கொள்கிறான். பள்ளியில் இறுதி வகுப்பு படிக்கும் மாணவனால் அப்போது வேறொன்றை நிகழ்த்த முடிவதில்லை.

கழுத்தறுத்தாலும் முண்டத்தோடு விடியத்தான் செய்யும் பூமி. விடிகிறது. வெறித்த சூனியத்தில் பனி விலகாத இரவு இன்னும் சூழ்ந்திருக்கிறது.

அம்மா வாசலில் கதறி அழுவது தூரத்தில் கேட்கிறது. அவனுக்குத் தெரியும். அதுதான்... அது அப்படித்தான் ஆரம்பிக்கும் என்று. நடுங்கிக்கொண்டே படுத்திருக்கிறான். அழுகை ஆங்காரமாய் வெடிக்கிறது. தலை இல்லாத சார்லி காருக்குள் கிடக்கும் ஒற்றை ஷாட் உயிர் உருவி ஊன் உருகச் செய்துவிடும். அம்மா வெடித்தழுகையில் செவிகளில் சிலந்தி வலை கட்ட வியர்க்க வெறித்துக்கொண்டே இருக்கிறான். அம்மாவின் கதறல் தாங்கொணாத் தவிப்பை ஒவ்வொருவரின் தலைக்குள்ளும் சுழலச் செய்கிறது. அதே நேரம் அந்தப் போஸ்ட் கம்பம் அருகே ஈக்கள் மொய்க்க எறும்பூரும் சார்லியின் தலை கிடக்கும் ஒரு ஷாட்... கொத்திப் பிய்த்து எடுத்த நேற்றிரவின் உடலைக் கைவிட்டுவிட்டதாக இருக்கிறது. நம்மை அசைத்துப் பார்க்கும் காட்சிகள். நாமோ அசையாமல் பார்க்கும் காட்சிகள்.

அது அந்த வீட்டில் அந்த வாரத்தில் நிகழும் இரண்டாவது மரணம். முதல் மரணம் அம்மா அன்னியின் அம்மா அதாவது பாட்டியின் மரணத்தில்தான் படம் ஆரம்பிக்கிறது.

பாட்டியின் மரணம் மிகுந்த துக்கத்தைக் கொடுத்தாலும் அடக்கம் செய்துவிட்டு வந்த இரவு.. பாட்டியின் அறையில் நின்று பாட்டி தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கும் காட்சி அன்னியைத் தூக்கி வாரிப் போடுகிறது. அந்த வீட்டின் அகல நீளத்தில் அதல பாதாளமும் இருப்பதை அப்போது அவர்கள் யாரும் அறிவதில்லை. ஆனால் நடப்பது மெல்ல நடந்துகொண்டே இருக்கிறது. பேத்தி சார்லி மீது பேரன்பு கொண்ட பாட்டியின் மரணம் சார்லிக்குப் பெரும் இழப்பு. தனித்தே இருக்கிறாள். ஆனால் அவள் புத்திக்குள் பாட்டி வேறு வேறு வழிகளில் ஆக்கிரமிக்கத் தொடங்குவதாகத்தான் படத்தின் மெல்ல நகரும் ஆரம்பக் காட்சிகள். அதீத ஜெர்க்குகள் அற்ற ஆனால் ஆழ்மனதில் ஊர்ந்துகொண்டிருக்கும் நத்தையின் மினுமினுப்போடு காட்சிகள் நகர்கையில் தூரத்தில் எங்கோ கண் சிமிட்டுவது போல அமானுஷ்யம் இசையில் விரிகிறது.

மரணத்தின் வழியாக இருப்பவர்கள் சந்திக்கும் எல்லாமும் உள் அற்ற வெளி கொண்ட கல்லின் சொரசொரப்பாகவே உணரப்படுகிறது.

சார்லியின் மரணத்துக்குப் பின் அந்த வீட்டில் நடப்பதெல்லாம் நாட்களைத் தாண்டிய காலமோ என்றுதான் தோன்றும். நிம்மதியற்ற நிர்கதியின் வழியே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத குற்ற உணர்ச்சியில்... பேசினாலும் ஒருவரை ஒருவர் தாக்கி.. உறவே விஷமாகிவிட்ட தருணத்தில் அந்த வீட்டில் வெறும் சுவர்கள் கல்லறையைச் சுமப்பது போலவே இருக்கின்றன. அன்னியின் மனதுக்குள் நிகழும் மாற்றம்... அவளைச் சுற்றி நிகழ்ந்துகொண்டிருக்கும் துக்கத்தின் வடிவம்... என்று ஒவ்வொரு இரவும் மகள் சார்லியின் அருகாமையை உணர்கையில் பொறுப்பில்லாமல் கொன்றுவிட்ட மகன் மீது வெறுப்பை உமிழச் செய்கிறது சூழல்.

13 வயது பிள்ளையை அநியாயமாகப் பறி கொடுத்துவிட்டதையொட்டிக் குற்ற உணர்வில் அப்பா அம்மா அண்ணன் மூவரும் தகிப்பதை அந்த வீடு வேடிக்கை பார்க்கிறது.

இரவும் நிழலும் சுழலும் வீட்டில்... பாட்டியின் தேவைதான் என்ன என்று புரிவதில்லை. இதற்கிடையே சாகக் கொடுத்த மனிதர்கள் கூடிப் பேசி ஆறுதல் தேடும் இடத்திற்குக் கூட துக்கத்தில் உழலும் அன்னி செல்கிறாள். அழுகிறாள். புலம்புகிறாள். வீட்டுக்கு வந்ததும் மகனைத் திட்டி வெறுக்கிறாள்.

`சார்லி வரலன்னு சொன்னப்பறமும் என் கூட வம்பா அனுப்பினது நீதான`ன்னு அம்மா மீது குற்றம் சுமத்துகிறான் பீட்டர். பீட்டர் பள்ளி நண்பர்களின் பார்ட்டியில் அத்துமீறாமலிருக்க... கவனிக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டதுதான்... சார்லி அண்ணனோடு சென்றது. எல்லாம் எல்லாம் அதுவாக நிகழ்ந்துவிட யோசிக்க நேரமில்லாத மனங்கள் புழுங்கித் தவிக்கின்றன.

கனவில் வரும் காட்சிகளின் வழியே... நீண்ட நாட்களுக்கு பின் ஒரு அமானுஷ்ய சினிமா பதட்டப்படுத்தியது. எறும்புகள் மொய்க்க... ஊர்ந்து மேலெழும் பீட்டர் உடலாகட்டும்... பாட்டி நொடி நேரம் வந்து போகும் இடமாகட்டும்... மேலே அட்டாலியில் கிடக்கும்... கல்லறையில் காணாமல் போன பாட்டியின் பிரேதமாகட்டும்... மௌனத்தின் வழியே நம் மனதுக்குள் தலையில்லாத உருவங்களைப் புகுத்திவிடுகிறார் இயக்குனர். மெல்ல நகரும் திரைக்கதையில் தலை இல்லாமல் இருப்பதுதான் கதையின் கரு. அதுவும் ஆர்டிஸ்ட்டான அம்மாவின் பெயிட்டிங்-இன் வழியே காலத்தின் கணக்குகள் அவிழ்வதும் இறுதிக் காட்சிக்கான இயல்பு. இசையின் நுட்பத்தோடு ஒரு கட்டத்தில் அம்மா சுவரில் ஒரு பக்கமாகப் பல்லி போல ஊர்ந்து போகும் காட்சி... திகிலடிக்கிறது. பீட்டர் பயந்து கதறிக் கத்துவதில் நாம் மூச்சு விடும் சத்தமும் இணைந்துகொள்கிறது.

காரின் பின் சீட்டில் இருந்து நாக்கை மேல் அண்ணத்தில் வேகமாய்ச் சுழற்றி எழுப்பும் ஒலி வருகையில்... அண்ணன் பீட்டரோடு சேர்ந்து நாமும் சடன் பிரேக் அடிக்கிறோம். அது அடிக்கடி சார்லி செய்யும் மேனரிசம் என்பது கண்கள் உருள மூளை நினைவுபடுத்துகிறது.

அன்னியின் மன உளைச்சலும்... வீட்டில் நடக்கும் சம்பவங்களின் வழியே அவள் தேடத் துவங்கும் இருண்மையும்... தூக்கமில்லாமல் அலையும் அவள் இரவுகளும்... சூனியத்தில் தொக்கி நிற்கும் இருண்ட கனவு போலத்தான். ஓஜோ போர்டு போன்ற வழிமுறையில் இறந்தவர்களை வரச் செய்யும்... பேசச் செய்யும் காட்சியில்... அதுவும் அந்த ஆறுதல் பரிமாறும் கம்யூனிட்டியில் கிடைத்த பிரெண்ட் செய்யும் அந்த முதல் காட்சியில்... முதலில் நம்பாமல் அமர்ந்திருக்கும் அன்னி... கொஞ்ச நேரத்தில் அறைக்குள் சுழலும் அலையின் வழியே உணர்ந்து தத்தளிப்பது மிரட்டல். அலையின் வழியே ஆன்மா அறைக்குள் அலைமோதுவதை உணர்ந்த பிறகு நிலைகொள்ளாமல் தடுமாறும் அன்னியோடு நாமும் கிடந்து தவிக்கிறோம். பிறகு அப்படியாவது மகள் சார்லி வரட்டும் என்று அந்த வழிமுறையைச் செய்து பார்க்க உடன் வரும்படி... கணவனையும் மகனையும் கெஞ்சுவது... ஒரு தாயின் மிகத் துயரமான பாழடைந்த அழுகைக்குப் பின் இருக்கும் சிறு ஆறுதல்.

சின்னச் சின்ன வளைவுகள்தான் வாழ்க்கை. தவறினால்... அதல பாதாளமும் அதன் கீழே இருக்கும் என்பது பல சமயம் தவறிய பிறகே புரிகிறது. எல்லாம் தாண்டி.. இருப்பது இறந்துவிட்டால்... இறந்தது இருந்துவிட்டால்... எல்லாம் தலைகீழ். தன்னை விட்டு அகலாத தன்னைப் போல ஆபத்தானது பூமியில் வேறொன்று இல்லை. அதன் நோக்கம் கிரீடமாக இருப்பின் இந்தச் சினிமாவின் இறுதிக்காட்சி போலத்தான்.

படத்தில் எந்தக் காட்சிக்குமே இரண்டாவது வாய்ப்பில்லை. அது எத்தனை அதிர்ச்சியாக இருந்தாலும் அது அப்போதே நிகழ்ந்துவிடுகிறது. தலையற்றும்... உடல் குனிந்து கிடக்கும் மூதாதையர்களின் சாபத்தின் வழியே.... இன்னும் ஏதோ ஓர் இருட்டு... நிழலாக அந்த வீட்டில் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கிறது. தப்பித்துக்கொள்வதன் மூலம்தான் சாத்தானையும் கடக்க முடியும். எதிலிருந்தா....? எதிலிருந்தும்....!

***இயக்குநர் : Ari Aster***

***மொழி : ஆங்கிலம்***

***ஆண்டு : 2018***

■

கவிஞர் விக்ரமாதித்யன் கடிதங்கள் - 4



# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

**கடிதம் - 26**

எழுதியவர் : கவிதாசரண்

ஆசிரியர் : கவிதாசரண்

தகவல், இலக்கியத் தொடர்புகளுக்கு:

31, டி.கே.எஸ். நகர்,

சென்னை-600019.

25.10.93


அன்புடையீர்,

வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. இதழ் அனுப்பியுள்ளேன். தங்கள் கவிதையொன்றை திரு. ம. அரங்கநாதன் அவர்கள் அளித்தார்கள். சில கவிதைகள் அனுப்பி வைத்தால் தொடர்ந்து வெளியிட ஏதுவாகும். தங்கள் கட்டுரையை இட வசதிப்படி வெளியிடலாம் என்ற எண்ணம்.

நம்மில் இன்னும் இலக்கியத் தெளிவின்மையோடு இருப்போர் அநேகம் பேர். அதிநவீனத்துவம் என்னும் பெயரில் நாம் அவர்களை விட்டு ஒதுங்கிவிடுவதை விட, அவர்களையும் ஒரு கை கொடுத்து மேலேற்றித் துணையாக நடந்து போவது உடனடித் தேவையாகலாம் என்பது என்னுள் எண்ணம். அதற்கேற்றாற்போல், பழக்கமில்லாதவர்களை மருட்டிவிடாத வகையில், நல்ல படைப்பு என்பது இன்னின்ன அம்சங்களைக் கரைத்துக்கொண்டிருக்கும் என்று எண்ணவைக்கும் வகையில், எழுதி எழுதி; போகப்போக கனம் சேர்க்கலாமே என்று எனக்கொரு ஆசை. அந்த வகையில் தங்கள் எழுத்துகள் (கதைகள்) கவிதாசரணுக்குக் கிடைத்தால் மகிழ்வேன்.

அன்புடன்

கவிதாசரண்



## கடிதம் - 27

எழுதியவர் : மைதிலி சிவராமன்

அன்புள்ள திரு நம்பிராஜன்,

வணக்கம். விசிட்டர் பத்திரிகையோடு தொடர்பு கொள்ள ஒரு நண்பரின் பெயர் கொடுத்திருந்தீர்கள்; மறந்துவிட்டது. மீண்டும் எனக்கு போன் மூலம் அவருடைய பெயரைக் கொடுக்க வேண்டுகிறேன். நான் வெளியூர் சென்றிருந்ததால் 1/4/80 சுஜாதா பத்திரிகையை இப்போதுதான் பார்த்தேன். மயிலைப் பகுதியில் 500 பெண்கள் வேலை செய்யும் பாலு கார்மெண்ட்ஸ் கம்பெனியில் (ராதா சில்க்கைச் சார்ந்தது) இரண்டு மாத காலமாகப் போராட்டம் நடக்கிறது. அதற்கு விளம்பரம் தேவை – அந்தப் பெண்களோடு பேட்டி என்ற முறையிலும் இருக்கலாம்.

இது குறித்து எனக்கு ஒரு போன் செய்ய வேண்டுகிறேன். செவ்வாய் காலை 10 மணிக்குள் செய்ய முடிந்தால் நல்லது. இதற்குத்தான் விசிட்டர் உதவியும் தேவைப்படுகிறது.

நன்றி.

வாழ்த்துக்களுடன்

உண்மையுள்ள,

மைதிலி சிவராமன்

11/5/80.

## கடிதம் - 28

எழுதியவர் : எஸ்.எஸ்.ஆர்.லிங்கம் (மூத்த எழுத்தாளர், வாசகர்)

இலக்கிய இல்லம்
ஸ்ரீவில்லிபுத்தூர்

வணக்கம். அன்புமிக்க நண்பர் கவிஞர், அவர்கட்க்கு, நலம் அறிய ஆவல். தங்களின் கவிதா ரசனை படித்து வருகிறேன். இது நான் படிக்கும் 25 ஆயிரத்து 391வது புத்தகம். வயது 79. நானும் தீபம் நண்பர் நா.பா. அவர்களும் ஒன்றாக இருந்தவர்கள். வீட்டில் நூலகம் உண்டு. 3 ஆயிரம் நூல்கள் உள்ளது. தங்கள் புத்தகம் அருமையாக உள்ளது. கவிதை பற்றித் தெரிந்துகொள்ள நல்ல நூல். இரண்டு புத்தகங்கள் தவிர அனைத்தும் படித்து இருப்பதால் நன்றாக விளங்குகிறது. தாங்கள் எனக்குப் பிடித்தமான கவிஞர். தங்கள் புத்தகம் அத்தனையும் உள்ளது. சுடலைமாடன்

வரை என்ற நூல் மட்டும் இல்லை. தங்கள் கையெழுத்து போட்டு சுடலை மாடன் நூல் 1 பிரதி அனுப்பி உதவுக. எழுதுவதை விட படிப்பதே பிடிக்கும். 22 படைப்புகள் பல்வேறு இதழ்களில் வந்தும் உள்ளது. தாமரையில் மட்டும் 11 படைப்புகள் வந்து உள்ளது. கலாப்பிரியா பார்த்தது இல்லை. சென்ற ஆண்டு அவருக்கு ஒரு இலக்கியக் கடிதம் எழுதினேன். பெரிய புத்தகம் கலாப்ரியா கவிதைகள், வனம் புகுதல் என்ற இரண்டு நூல்கள் உதவினார். நானும் நாபாவும் - 60 எழுத்தாளர்கள் கண்டு பேசி 60 புத்தகங்கள் வாங்கி உதவினார். அவரது மறைவு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, எனக்கு மிகப்பெரிய இழப்பு. மாதம்தோறும் எழுத்தாளர் சந்திப்பு ஸ்ரீ.வி. இலக்கியப் பெருமன்றம் நடத்துகிறது. நீங்கள், வர இயலுமா? எழுதினால், செயலாளர், தொடர்பு கொண்டு எழுதுவார். தங்கள், கவிதைகளை விட, சிறுகதைகள் அருமையாக உள்ளது. நிறையவே சிறுகதைகள் எழுதுங்கள். வண்ணநிலவன் எனக்குப் பிடித்த எழுத்தாளர். அவரது நூல் பற்றி தாமரையில் எனது விமர்சனம் வந்தும் உள்ளது. தீராநதி பேட்டி எனக்கு உடன்பாடுகள் இல்லை. சில விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் உண்டு. எனது பெயர் நூலில் எழுதி சுடலை மாடன் வரை 1 பிரதி அனுப்பி உதவுக. படித்து எழுதுவேன். தென்காசி வந்தால், கலாப்பிரியா, நீங்கள் கண்டு பேசுவேன். உடன் பதில் தருக.

நன்றி.

அன்புடன்

எஸ்.எஸ்.ஆர். லிங்கம்,

எண் 57,

சந்திக்கிணற்றுத் தெரு,

நாடக சாலை,

ஸ்ரீவில்லிபுத்தூர்,

626125.

விருதுநகர் மாவட்டம்.

28.7.2004

## கடிதம் - 29

எழுதியவர் : எஸ்.எஸ்.ஆர்.லிங்கம் (மூத்த எழுத்தாளர், வாசகர்)

எழுத்தும் தெய்வம் எழுதுகோல் தெய்வம்
நல்லவே எண்ணல் வேண்டும்.

4.4.2014

வணக்கம். அன்புமிக்க, கவிஞர், நண்பர் விக்கிரமாதித்தன் அவர்களுக்கு, நலம் அறிய ஆவல். தங்களை எனக்குத் தெரியாது. தங்கள் முகவரி நண்பர் திரு.திலகவதி அவர்கள் எழுதினார்கள். ஆகவே கடிதம் எழுதினேன். நீங்கள் எனக்கு மிகவும் பிரியமான எழுத்தாளர். உங்கள் புத்தகம் மூன்று மட்டும் என்னிடம் இல்லை - மற்றது அனைத்தும் என்னிடம் உண்டு. 350 ரூ பெறுமான, தங்கள் கவிதைகள் எனக்குக் கொடுத்தார். மேலும் தங்கள் எழுதிய புத்தகம் வேண்டும். எல்லாச் சொல்லும் என்ற புத்தகம், மேலும் வியாழக்கிழமையைத் தொலைத்தவன் இரண்டும் வேண்டும். பின்பு இப்போது கயல் வெளியிட்ட புத்தகம் கங்கோத்ரி நூல் ஒரு பிரதி வேண்டும். இந்த மூன்று நூல்களையும் எனது பெயர் எழுதி தங்கள் கையெழுத்து போட்டு அனுப்பித் தரவும். மூன்று நூல்களும் எவ்வளவு ரூபாய் என்று எழுதினால் பணம் அனுப்பித் தருவேன். நண்பர் திலகவதி தங்களுடன் பேசுவது என்றும் கூறினார். ஆகவே உடன் பதில் கடிதம் எழுதுங்கள். வீட்டில் நூலகம் உண்டு. அதில் ஆயிரம் நூல்கள் உண்டு. இப்போது 26 ஆயிரத்து 492 புத்தகம் படித்து வருகிறேன். திலகவதி அவர்கள் நிறைய புத்தகம் கொடுத்து உதவிகள் செய்தும் உள்ளார். அவர்தான் தங்களுக்குக் கடிதம் எழுதச் சொன்னார்கள். உடன் கீழ்கண்ட 3 புத்தகம் கூரியர் மூலம் அனுப்பி உதவுங்கள்.

நன்றி. உடன் பதில் எழுதுங்கள்.

1. எல்லாச் சொல்லும்
2. வியாழக்கிழமையைத் தொலைத்தவன்
3. கங்கோத்திரி

எஸ்.எஸ்.ஆர்.லிங்கம்

**4.4.2014.**

இந்திரன்



# டப்ளின் சுடுகாட்டில் பிறந்தநாள் கொண்டாடினேன்

*ஜூன் 11* எனக்குப் பிறந்தநாள். சுடுகாடு ஒன்றில் எனது பிறந்தநாளைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று என் மனசுக்குள் முடிவு செய்துகொண்டேன். அங்கேதான் எனது 68 ஆண்டுக்கால வாழ்க்கையைத் தவளையை வெட்டி அதன் பாகங்களை ஆராய்வது மாதிரி ஆராய முடியும்.

என் பிறந்தநாளை வெகு விசேஷமாக டப்ளினில் கொண்டாட ஏற்பாடு செய்துகொண்டிருந்த என் மகள் கீதாஞ்சலியிடம் நான் காலையில் என் பிறந்தநாளுக்காக சர்ச்சுக்குப் போய் வருவதாகச் சொல்லிவிட்டுத் தனியே புறப்பட்டேன். நான் என் பிறந்தநாளுக்கு வடபழனி முருகன் கோயிலுக்குப் போகிறவன்தான். டப்ளின் நகரத்தில் முருகன் கோயிலை எங்கே தேடுவது என்று கிருத்துவத் தேவாலயத்துக்குப் போவதென முடிவெடுத்தேன். சர்ச்சுக்குப் போகும் வழியில்தான் ஒரு சுடுகாடு இருந்தது.

உண்மையில் சொல்ல வேண்டுமானால் அதனைச் சுடுகாடு என்று சொல்வதைக் காட்டிலும் இடுகாடு என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அயர்லாண்டில் பிணங்களைச் சுட்டு எரிக்கும் பழக்கம் கிடையாது. எனவே அதனை நம்மூர் வழக்கப்படி சுடுகாடு என்று அழைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. பூமியில் இட்டு புதைப்பதுதான் வழக்கம் என்பதால் அதனை இடுகாடு என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நினைத்தபடியே எனது பிறந்தநாளுக்கான புதுச்சட்டையுடன் குதூகலமாகக் கிளாஸ்நெவின் இடுகாட்டை நோக்கி நடந்தேன். எனக்கு அங்கே ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. இடுகாட்டில் இருந்த ஒரு கடையில் பிறந்தநாள் பரிசுப் பொருட்கள் விற்றுக்கொண்டிருந்தார்கள்.

தூரத்திலிருந்து பார்க்கும்போதே வண்ண வண்ணப் பூக்கள் விற்கும் கடையோடும், பச்சைப் பசேலென்ற அழகிய புல்வெளிகளோடும் "கிளாஸ்நெவின் இடுகாடு" என்ற அழகிய பெயர்ப் பலகையோடும் எனது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குத் தயாராகி இருப்பது

போலத் தெரிந்தது இடுகாடு. நான் மேலும் உற்சாகத்தோடு எனது நடையை இடுகாடு நோக்கி வேகமாகப் போட்டேன்.

இடுகாட்டுக்குப் போய் வந்தவுடன் வீட்டுக்குள் நுழையாமல் இடுகாட்டுக்கு அணிந்து சென்ற உடைகளை எல்லாம் வாசலிலேயே கழட்டிவிட்டு, உடனே தலையில் தண்ணீர் ஊற்றிக் குளித்த பிறகுதான் எதையுமே தொட வேண்டும் எனும் நம்பிக்கை உள்ள ஒரு தமிழ்ச் சமூகத்திலிருந்து சென்ற எனக்கு கிளாஸ்நெவின் இடுகாடு பல ஆச்சரியங்களைத் தனக்குள் வைத்திருந்தது.



முதலில் ஒரு இடுகாட்டுக்குள் ஒரு மியூசியம் இருப்பது கண்டு அதிசயித்தேன். அடுத்ததாக பரிசளிப்புப் பொருட்கள் விற்கும் கடை, மிக அற்புதமான புத்தகக் கடை இந்த இடுகாட்டுக்குள் இருந்தன. இதில் ஜேம்ஸ் ஜாய்ஸ் எழுதிய அதியற்புதமான நூலான யுலிசஸ் நாவலில் `ஹேடஸ்` எனும் அதிகாரம் இந்தக் கிளாஸ்நெவின் சுடுகாடு பற்றிப் பேசும், அப்பகுதியைத் தனி புத்தகமாக விற்கிறார்கள்.

1904 ஜூலை மாதம் ஜேம்ஸ் ஜாய்ஸ் அந்தக் கிளாஸ்நெவின் இடுகாட்டுக்குத் தனது நண்பன் மாத்தியூ கேன் என்பவருக்காக வந்திருந்தார் என்பதையும், இந்த அனுபவத்தைத்தான் தனது யுலிசஸ் நாவலில் ஒரு பகுதியாக எழுதியிருக்கிறார் என்பதையும் அந்தப் புத்தகத்தின் மூலமாகத் தெரிந்துகொண்டேன். துறைமுகம் இருந்த பகுதியில் குளிக்கப்போன கேன் தண்ணீரிலேயே மாரடைப்பு வந்து இறந்துபோனதால் ஜேம்ஸ் ஜாய்ஸ் மிகவும் நொந்துபோயிருக்கிறார். இந்தத் திடீர் மரணம் ஜாய்ஸை மிகவும் பாதித்து தனது நாவலில் ஒரு பகுதியை இதன் நினைவாக உருவாக்கச் செய்திருக்கிறது. இவரது கல்லறையில் இங்கே உறங்கும் மனிதன் ஜேம்ஸ் ஜாய்ஸ் யுலிசசின் கதாபாத்திரமான மார்ட்டின் கன்னிங்காமின் மாடலாக அமைந்தவர் என்பதைக் குறிப்பாக எழுதி வைத்திருக்கிறார்கள். இலக்கியத்தையும் அதன் கதாபாத்திரங்களையும் கொண்டாடுவதில் ஐரிஷ்காரர்கள் அலாதியானவர்கள்.

இங்கே இருந்த பளிங்கில் இறந்தவர்களின் நினைவாக வைக்கப்படும் சிற்பங்கள் விற்கும் கடை என்னைக் கவர்ந்தது. இதில் இருந்த பல பளிங்குச் சிற்பங்கள் சீனத்துச் சிற்பிகளால் செய்யப்பட்டு இருந்தன. இப்படி அடுக்கடுக்காக அதிர்ச்சிகளைக் கொடுத்த இடுகாட்டுக்குள் இருந்த அழகிய ரெஸ்டாரண்ட் ஒன்றில் எல்லோரும் சுவையான உணவு வகைகளைச் சுவைத்துக்கொண்டும் ஐரிஷ் காபி அருந்திக்கொண்டும் உற்சாகமாக உரையாடிக்கொண்டு இருந்ததைப் பார்த்து அசந்துபோனேன். இடுகாட்டுக்குள் நவீனமான ரெஸ்டாரண்டா? அப்போதுதான் எனக்குப் புரிந்தது இடுகாடு என்பதை ஐரிஷ்காரர்கள் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதுகிறார்கள் என்பது.

கிளாஸ்நெவின் இடுகாடு என்பதின் வரலாற்றை அதிசயிக்கத்தக்க முறையில் ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். கிளாஸ்நெவின் இடுகாடு 1832ஆம் ஆண்டு பிப்ரவரி 21இல் திறக்கப்பட்டிருக்கிறது. இந்த இடுகாட்டில் புதைக்கப்பட்ட முதல் பிணம் எது என்பதைக்கூட பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அதன் முதல் பிணமாக டப்ளினில் பிரான்சிஸ் தெருவில் வசித்து 11 வயதில் மரித்துப்போன மைக்கேல் கேரி என்பவரின் பிணம்தான் இங்கு புதைக்கப்பட்ட முதல் பிணம் என்கிற அளவுக்கு இந்த இடுகாட்டைப் பற்றிய வரலாற்றை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

தொடக்கத்தில் 9 ஏக்கரில் தொடங்கப்பட்ட இந்த இடுகாடு இன்று சுமார் 124 ஏக்கர் பரப்பளவு கொண்டதாக விரிவடைந்து இருக்கிறது. இங்கு சென்றால் கடந்த 200

ஆண்டுக்காலத்தில் கல்லறை கட்டும் கலையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஆராய்ந்துவிடலாம். கெல்டிக் சிலுவைகளில் எத்தனை விதமான சிலுவைகள் உள்ளன என்றும் ஆராயலாம். அவற்றின் கலை நேர்த்தி குறித்தும் அவற்றின் அழகியல் குறித்தும் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

இந்த மியூசியத்தில் உள்ள புத்தகக் கடையில் ஒரு சுவாரஸ்யமான புத்தகத்தைப் பார்த்தேன். “GRAVE MATTERS” என்ற தலைப்பில் 16ஆம் நூற்றாண்டிலிருந்து மரணம் எனும் அனுபவம், சவ ஊர்வலத்தின் இறுதிச் சடங்குகள் ஆகியவற்றை முன்னிறுத்திச் சமூக மாற்றங்களையும், ஐரிஷ்காரர்களின் கெல்டிக் மதம் கிருத்துவ மதம் ஆகியவை காலப்போக்கில் அடைந்த மாற்றங்கள், மரண தண்டனை குறித்த மாற்றங்கள் ஆகியவை குறித்துப் பலவற்றைப் பேசுகிறது இந்தப் புத்தகம். பல்வேறு புகைப்படங்களோடு சிறப்பாக வெளியிடப்பட்டுள்ள இந்தப் புத்தகம் தன்னை ஒரு பண்பாட்டுச் சுற்றுலா என்று வர்ணித்துக்கொள்கிறது.

இந்த இடுகாட்டில் மிக உயரமான கண்காணிப்புத் தூண் எழுப்பப்பட்டு இருக்கிறது. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மருத்துவப் படிப்புக்காக மனித உடல்களை அறுத்து ஆராய்வதற்காகக் கல்லறைகளில் உள்ள பிணங்களைத் திருடுவது அதிகமாக இருந்த காலகட்டத்தில் இதைக் கண்காணிப்பதற்காக இந்த உயர்ந்த கண்காணிப்புத் தூண் எழுப்பப்பட்டு இருக்கிறது. இங்கே இருக்கும் மியூசியத்தில் கல்லறைகளில் இருக்கும் பிணங்களை எப்படி திருடினார்கள் என உயிரோட்டமுள்ள சிற்பங்கள் மூலமாக விளக்கியிருக்கிறார்கள்.

இதனுள்ளே இருக்கும் மியூசியத்தில் மிக அற்புதமான ஒன்றைக் கண்டேன். உலகிலுள்ள இந்து மதம், புத்த மதம், இஸ்லாம் மதம், யூதர்களின் மதம் என்று பல்வேறு மதங்களிலும் மரணம் என்பது எப்படியெல்லாம் கருதப்பட்டிருக்கிறது என்பதை மிக நவீனமான முறையில் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். இதன் உச்சகட்டமாக எல்லா மதங்களின் பிறகு “மனிதநேயம்” என்பதையும் ஒரு மதமாகக் கருதி மனிதநேயம் மரணத்தை எப்படிக் கருதுகிறது என்பதையும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இந்த இடுகாட்டில் `தேவதைகளின் இடம்` என்ற ஒரு பகுதி தனியே உள்ளது. இதில் செத்துப் பிறந்த குழந்தைகளைப் புதைப்பதற்குத் தனியான இடம் உள்ளது. இந்த இடுகாட்டில் புதைக்கப்பட்ட உன்னதமான மனிதர்கள் குறித்துத் தனித்தனி புத்தகங்கள் எழுதப்பட்டு அவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் விதமாக இந்தக் கிளாஸ்நெவின் சுடுகாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சுற்றுலாப் பயணிகள் வந்து குவிந்தபடி இருக்கிறார்கள். சுற்றுலா வழிகாட்டிகள் இந்த இடுகாட்டைச் சுற்றிக் காட்டி மரணத்தை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி விளக்கிப் பேசுவதைப் பார்க்கிறபோது எனக்கு என் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் மகத்துவம் புரிந்தது.

சுடுகாட்டுக்குள் இருந்த வண்ணப்பூக்கள் விற்கும் கடையில் நின்று ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டேன். சாக்ரடீசின் வார்த்தைகளை எனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டேன்: “நீ இருக்கும் வரை மரணம் வரப்போவதில்லை. மரணம் வந்த பிறகு நீ இருக்கப்போவது கிடையாது.”

இப்போது இடுகாட்டில் இருந்த ரெஸ்டாரண்டின் வெளியே போடப்பட்டிருந்த மேசையில் அமர்ந்து, டப்ளின் நகரத்து இளவெயிலை ரசித்தபடி, என் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக எனக்கு ஒரு ஐரிஷ் காபியைக் கொண்டு வருமாறு பரிசாரகரிடம் சொன்னேன்.

எனது அண்மைக் காலத்து `மிக அருகில் கடல்` தொகுதியின் கவிதை வரி ஒன்று மனசுக்குள் மிதந்தது.

“நாவில் மரணத்தின் சுவை வந்து சேர்ந்த பிறகு

நான் எனது மேசையைக் காலி செய்துவிடுவேன்.

அப்போது எனக்கான மதுவை நீங்கள் அருந்த வேண்டும்.” ■

# படைப்பு சங்கமம் - 2023

**30**

சனிக்கிழமை

**SEP**

**2023**




படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கம்,
ஜி.என்.செட்டி சாலை, தி.நகர்,
சென்னை - 600017

நேரம் : காலை 9மணி முதல் இரவு 7மணி வரை

www.padaippu.com